ஒக்டோபர் 2007

89

# ஞானம்

## கலை இலக்கியச் சஞ்சிகை

செங்கை ஆழியான் ..... நீங்களுமா....?

[ஓர் எதிர்வினை] லெ. முருகபூபதி

ஈழத்துக் கவிதைத் தடத்தில்

'ஹைகூ' கவிதைகள்

–இ. இராஜேஸ்கண்ணன்

இலங்கை எழுத்தாளர்களையும், எழுத்துக்களையும் மட்டமாக கருதுகின்ற மனப்பான்மை தமிழக எழுத்தாளர்களிடம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல, என்றோ ஏற்பட்டுவிட்டது

- செங்கை ஆழியான்

கலாபூஷணம் புலோலியூர். க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி முடிவுகள்





மணிவிழா நாயகன்

பேராசிரியர் கா. அருணாசலம்

50/=

www.gnanam.info

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

ஒளி – 08 சுடர் – 05

**பகிர்தலின் மூலம்
விரிவும்
ஆழமும்
பெறுவது
ஞானம்**

ஆசிரியர் :
**தி. ஞானசேகரன்**

இணை ஆசிரியர் :
**ஞானம் ஞானசேகரன்**

ஓவியர் :
**கௌதமன்**

தலைமை அலுவலகம் :
**19/7, பேராதனை வீதி, கண்டி.**

தொடர்புகளுக்கு... :
**தி. ஞானசேகரன்
ஞானம் கிளை அலுவலகம்
3-B, 46வது ஒழுங்கை,
கொழும்பு – 06.
தொலைபேசி : 011 –2586013
0777–306506
தொலைநகல்: 2362862
E-mail : editor@gnanam.info
Web : www.gnanam.info**

**வங்கித் தொடர்புகள்:
T. Gnanasekaran
HNB - Wellawatte Branch
A/C No. 0090672606**

## ☞ இதழினுள்ளே ...

● ***கவிதைகள்***
மணவாளன் 05
வதிரி சி. ரவீந்திரன் 32
பழையூர்க் கவிராயர் 32
மும்தாஸ் ஹபீள் 33
த. ஜெயசீலன் 41
ரூபராணி 44

● ***கட்டுரைகள்***
தி. ஞானசேகரன் 03
இ. இராஜேஸ்கண்ணன் 10
குறிஞ்சி நாடன் 15
நவஜோதி ஜோகரட்னம் 20
ரா. நித்தியானந்தன் 23
ஞா. பாலச்சந்திரன் 29

● ***சிறுகதைகள்***
மு. சிவலிங்கம் 07
பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா 17

● ***நேர்காணல்***
செங்கை ஆழியான் 26

● ***விவாதம்***
S.S. தர்ஷினி 50
மொழிவரதன் 51

● ***உரைச்சித்திரம்***
தெணியான் 34

● ***சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்***
குறிஞ்சி நாடன் 45

● ***பத்தி எழுத்து***
லெ. முருகபூபதி 30
இலக்கியச் சித்தன் 37
சை. பீர்முகம்மது 38
கே.எஸ். சுதாகர் 39
கலாநிதி துரை மனோகரன் 40
ஆ. குணநாதன் 42
கே. விஜயன் 43
இளைய அப்துல்லாஹ் 48

● ***நூல் மதிப்புரை*** 52

● ***வாசகர் பேசுகிறார்*** 55

**அட்டைப்படம் – மும்தாஸ் ஹபீள்**

ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. – ***ஆசிரியர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அரசியல் வாதிகள் அந்தரங்கசுத்தியுடன் செயற்பட வேண்டும்

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வுகாணப்போகிறோம் எனச் சொல்லிக்கொண்டே இராணுவத் தீர்வில் நாட்டங்கொண்டு அரசு இயங்குவதை போர்நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

கிழக்கில் நடைபெற்ற போரில் பெருவெற்றி பெற்றுவிட்டதாகக் கூறும் அரசு வடக்கிலும் அத்தகைய ஒரு பெருவெற்றியைப் பெற்றுவிடுவோம் எனக்கூறுகிறது.

புலிகளைத் தோற்கடிக்காமல் இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றைக் காணமுடியாது எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

படையினர் தங்கள் யுத்த நடவடிக்கைகளைப் படிப்படியாகத் தீவிரப்படுத்தி வருகின்றனர். வன்னியில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் கடும் விமானத் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. பல பொதுமக்கள் படுகாயம் அடைந்துள்ளனர். வீடுவாசல்கள், பாடசாலைகள், வணக்கத்தலங்கள் பலவும் அழிந்துபோயுள்ளன. பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்குப் பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

கடும்யுத்தம் காரணமாக நாட்டின் பொருளாதார நிலை மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. யுத்த நடவடிக்கைகளை முடக்கிவிட்டுத் தென்பகுதி மக்களை யுத்தவெற்றி என்னும் மாயையில் வைத்துக்கொண்டு ஆட்சியாளர் மீதான மக்கள் எதிர்ப்பை சமாளித்து ஆட்சியைத் தொடர முயற்சிக்கிறது அரசு. ஒவ்வொரு வெற்றிக்கும் விழாக்கள் எடுத்துக் கொண்டாடுகிறது. ஏராளமான மில்லியன் டொலர்கள் யுத்தத்திற்காகச் செலவிடப்படுகின்றன. யுத்தவிமானங்கள் எறிகுண்டுகள் யுத்தக் கப்பல்கள் வாங்கிக் குவிக்கப்படுகின்றன.

இதனால் என்ன நடக்கிறது? யுத்தப் பேரழிவுகள் ஒரு புறத்தில் நடைபெறுகின்றன. மறுபுறத்தில் மக்கள் பல்வேறு நெருக்கடிக்கும் ஆளாகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். காஸ் விலையேற்றம், மாவு விலையேற்றம், மின்சாரக் கட்டண ஏற்றம், தண்ணீர்க் கட்டண ஏற்றம், மண்ணெண்ணெய் விலை ஏற்றம் என அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் விஷம் போல் ஏறிக் கொண்டேயிருக்கின்றன. அதனால் நாட்டிலே ஆர்ப்பாட்டங்களும் வேலை நிறுத்தங்களும் தொடர்கின்றன.

நாட்டின் ஒரு பகுதி மக்களை அழிப்பதாலோ ஓரின மக்களை இல்லாமலாக்குவதாலோ அல்லது அவர்களது உரிமைகளைப் பறிப்பதாலோ இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை.

தமிழ் மக்கள் வடபகுதியிலே வாழ்ந்தாலும் சரி, தென்னிலங்கையிலே வாழ்ந்தாலும் சரி அவர்கள் சுதந்திரமாகவும் தமது கலாசாரம் மதம் மொழி ஆகியவற்றைப் பாதுகாத்து வாழ்வதற்கேற்ற வகையிலும் ஓர் அரசியல் அமைப்பு உருவாக்கப்படவேண்டும். உடனடியாகப் போர் நிறுத்தப்படவேண்டும். நாட்டில் அமைதி நிலவவேண்டும்.

'நாட்டைப் பாதுகாப்பவர்கள் நாங்கள்தான்' என வாய்கிழியப் பேசும் அரசியல்வாதிகள் இதய சுத்தியுடன் அரசியல் தீர்வுக்காக ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும். இல்லாவிடில் இந்த நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற முடியாத அவல நிலைதான் தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மணிவிழா நாயகன் பேராசிரியர் க. அருணாசலம்

தி. ஞானசேகரன்

எண்பதுகளின் முற்கூற்றில் எனது குருதிமலை நாவலுக்கு புசல்லாவை இலக்கிய வட்டத்தினர் ஓர் அறிமுக விழாவை நடத்தினர். அந்த விழாவின் முக்கிய பேச்சாளராக கலாநிதி க. அருணாசலம் அவர்களை அழைத்திருந்தனர். அன்றுதான் நான் முதன்முதலில் அருணாசலம் அவர்களைச் சந்தித்தேன். அன்றைய விழாவில் அவர் ஆற்றிய விமர்சன உரை என்னைப் பெரிதும் கவர்ந்தது. அவரது பரந்துபட்ட இலக்கியப் புலமையும் அறிவியல் விசாலமும் ஆய்வு நோக்கும் அவர்மேல் எனக்குப் பெரும் அபிமானத்தை உண்டு பண்ணின; அவருடன் உறவினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற பெருவிருப்பினை ஏற்படுத்தின.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நான் அவருடன் பழகியிருக்கிறேன். அவரிடம் நான் பார்த்து வியந்த விடயங்கள் இரண்டு. ஒன்று எளிமை – அளவுக்கு மீறிய எளிமை! இரண்டாவது உழைப்பு – கடின உழைப்பு!

யாழ் தீபகற்பத்தின் தென்மராட்சிப் பகுதியிலுள்ள சாவகச்சேரியில் அல்லாரை என்பது மிகவும் பின்தங்கிய கிராமம். வாகனங்களில் செல்லமுடியாது கால் நடையாகவே சென்றடைய வேண்டிய இக்குக்கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அருணாசலம், 1946.01.14ல் கனகசபை காசிப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். ஏழு பிள்ளைகளைக் கொண்ட ஏழை விவசாயக் குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையாக, குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்த இவர் தனது கடின உழைப்பினால் படிப்படியாக முன்னேறி இன்று பேராசிரியராக உயர்ந்திருக்கிறார்.

திரு. அருணாசலம் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை அல்லாரை அரசினர் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றவர். விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கிணங்க பாடசாலை மட்டத்தில் மொழி சார்ந்த போட்டிகளிலும் சமயப் பரீட்சை, திருக்குறள் போட்டிப் பரீட்சை ஆகியவற்றிலும் முதன்மைநிலைபெற்று பல பதக்கங்களையும் சான்றிதழ்களையும் சுவீகரித்துக் கொண்டவர்.

1967ல் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பிரவேசித்த அருணாசலம் அவர்கள் 1968வரை அங்கு கல்வி பயின்று பின்னர் 1968–1971 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுத் தனது பல்கலைக் கழகக் கல்வியை நிறைவு செய்தார்.

1972 பெப்ரவரியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றுப் பணியாற்றிய வேளையில் தனது உயர்கல்வியை மேலும் தொடர்ந்தார். பேராசிரியர்கள் செல்வநாயகம், வித்தியானந்தன், சதாசிவம், கைலாசபதி, வேலுப்பிள்ளை, தில்லைநாதன், தனஞ்செயராஜசிங்கம், சண்முகதாஸ், பூலோகசிங்கம், பத்மநாதன், இந்திரபாலா, கலாநிதி கணபதிப்பிள்ளை ஆகியோரிடம் கல்விகற்கும் பேற்றினைப் பெற்றவர் அருணாசலம் அவர்கள்.

1974ல் 'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள்' என்ற தலைப்பில் ஆய்வு நிகழ்த்தி முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்ற அருணாசலம் அவர்களுக்கு 1976ல் உதவி விரிவுரையாளராக நிரந்தர நியமனம் கிடைத்தது. "பின்னர் தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற தலைப்பில் ஆய்வு நிகழ்த்தி 1979ல் கலாநிதிப் பட்டம் பெற்ற அருணாசலம் அவர்கள் 1981ல் இரண்டாம்தர முதுநிலை விரிவுரையாளராகி 1986ல் முதலாந்தர விரிவுரையாளரானார். 1996ல் பேராசிரியராக உயர்வு பெற்றார்.

பேராசிரியர் அருணாசலம் மாணவர் மத்தியில் நேசிப்புக்குரிய ஒருவராக விளங்குபவர். மாணவர் நலனில் அக்கறை கொண்டவர். மாணவர்களை நெறிப்படுத்தி நன்மாணக்கர்களாக உருவாக்கும் பணியில் அக்கறையுடன் செயற்படுபவர். அவரைப்பற்றி மிகவும் உயர்வாக அவரது மாணவர்கள் கூறுவதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன்.

பேராசிரியர் அருணாசலம் அவர்கள் சிறந்த ஆசான் என்ற நிலைக்கு அப்பால் தேசியக் கல்வித் திட்டங்களிலும் ஈடுபட்டு வருபவர். மஹரகம தேசியக்கல்வி நிறுவகத்தின் தொலைக்கல்விப் பிரிவின் தமிழ்ப்பாடப் பதிப்பாசிரியர் குழுவின் அங்கத்தவர், தமிழ் மொழித்துறையின் ஆலோசகர், க.பொ.த. சாதாரண உயர்தர தமிழ்மொழிப் பாடத்திட்ட மீளாய்வுக் குழுவின் அங்கத்தவர், பேராதனைப் பல்கலைக்கழக நூலகக் குழுவின் அங்கத்தவர் போன்ற புறநிலை நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டவர். அத்தோடு பட்டமேற்படிப்பு மாணவர்களை ஆற்றுப்படுத்தும் பரீட்சகர், 1995–1998 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கியவர், தமிழ்ச் சங்கத்தினதும் சங்கீத நாட்டியச் சங்கத்தினதும் பெருந்தலைவராக விளங்கியவர், இலங்கை சாகித்திய மண்டல தமிழ் இலக்கியக் குழுவின் தலைவராகப் பணியாற்றியவர். இவை அவர் வகித்த பதவிகளில், ஆற்றிய பணிகளில் சிலவாகும்.

பேராசிரியர் அவர்கள் தமிழ்மொழி மூலமாக உள்ள கலைஞர்களை எழுத்தாளர்களை மக்களுக்கு இனங்காட்ட வேண்டும் என்ற பெருவிருப்பு உடையவர். "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள்" என்னும் ஆய்வுடன் நவீன தமிழ் இலக்கியத்துக்குள் காலடி எடுத்து வைத்த பேராசிரியர் நூற்றுக்கணக்கான இலக்கியக்கட்டுரைகளை பத்திரிகை களிலும் சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார். இக்கட்டுரைகளில் பல ஆய்வு நோக்கும் அறிவியல் விசாலமும் கொண்டவை. "இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம் மகப்பேற்று மருத்துவிச்சியாக இருக்க வேண்டுதே தவிர மரணவிசாரணை அதிகாரியாக இருத்தல் கூடாது என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளவன் நான்'' எனக் கூறும் பேராசிரியர் பல விமர்சனக் கட்டுரைகளை எழுதியிருப்பதுடன் பல எழுத்தாளர்களின் நூல்களுக்கு முன்னுரையும் எழுதியுள்ளார். எனது ''அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்' என்ற சிறுகதைத் தொகுதிக்கு அவர் எழுதிய முன்னுரை மிகச் சிறப்பானது. அச்சிறுகதைத்தொகுதி தற்போது சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் கலைமாணி வகுப்பு முதலாம் வருட மாணவர்களுக்கு பாடநூலாக அமைந்துள்ளது. எனது மற்றொரு தொகுதியான ''தி. ஞானசேகரன் சிறுகதைகள்'' என்ற நூலுக்கும் பேராசிரியர் ஒரு விரிவான முன்னுரையை எழுதியுள்ளார்.

ஏறத்தாழ நான்கு தசாப்தங்களாக தான் வாழுகின்ற மலையக மண்ணின் மீதும் தோட்டத்தொழிலாளர் மீதும் மிகுந்த ஈடுபாடுகொண்ட பேராசிரியர் தோட்டத் தொழிலாளர் குறித்த வரலாறும், அவர்கள் தொடர்பான இலக்கிய வரலாறும் எழுதப்படல்வேண்டும், ஆவணப்படுத்தப்படல் வேண்டும் என்பதில் முனைப்புடன் இயங்குபவர். இவரது மலையகத் தமிழ் இலக்கியம் என்ற நூலினை காணிக்கையாக ''தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நிற்கின்ற தோட்டத் தொழிலாளர்களின் விமோசனத்துக்காகத் தீரத்துடன் போராடித் தமதின்னுயிர்களைத் தியாகஞ் செய்த கோவிந்தன், வெள்ளையன், செல்வநாயகம், சிவனுலெட்சுமனன் முதல் ஏபிரகாம் சிங்கோ வரையிலான தொழிலாளச் செம்மல்களுக்கு'' சமர்ப்பித்திருப்பதிலிருந்து மலையகத்தின் மீதும் மலையக மக்கள் மீதும் அவர் கொண்டிருக்கும் பற்றினை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

நூலாசிரியர் என்ற வகையில் பேராசிரியரின் நூல்களாக பாரதியார் சிந்தனைகள் (1984), சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள் (1992), காலக்கண்ணாடி–இளங்கதிர் (1994) மலையகத் தமிழ் இலக்கியம் (1994) தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், மலையகத் தமிழ் நாவல்கள், இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் (1997) ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றைவிட சிறு நூல்களாக இளந்தலைமுறையினரும் கல்வியும், சாதனையாளன் சாரல் நாடன், தமிழகத்தில் சமணம் ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இவற்றுள் சுவாமி விபுலாநந்தரின் சமயச்சிந்தனைகள், மலையகத் தமிழ் நாவல்கள், இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் ஆகிய நூல்கள் தேசிய சாகித்திய விருதினைப் பெற்றன. தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் ஆகியன வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய விருதைப் பெற்றன. மலையகத் தமிழ் இலக்கியம், மலையக தமிழ் நாவல்கள் என்பன மத்திய மாகாண சாகித்திய விருதைப் பெற்றன. ''தமிழில் வரலாற்று நாவல்கள்'' என்ற ஆய்வேட்டிற்காக கலாநிதிப்பட்டம் பெற்ற இவருக்கு முதன் முதலாக பொன்னம்பல முதலியார் ஞாபகார்த்தப் பரிசும் வழங்கப்பட்டது. இப்பரிசு இதுவரை வேறு எவருக்கும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைவிட ரத்தினதீபம் பரிசினையும் பெற்றுள்ளார்.

பேராசிரியரின் குறிப்பிடத்தக்க இன்னுமொரு சிறப்பான அம்சம் அவர் ஒரு முற்போக்குச் சிந்தனையாளர், யாழ்ப்பாணத்தில் தலைவிரித்தாடும் சாதி, சீதனம் ஆகிய இரு பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராக முகங்கொடுத்து வெற்றிகண்டவர். தமது வசதிவாய்ப்புகளை உதறித்தள்ளித் தாம் விரும்பியவரைத் துணிகரமாக மணந்தவர். இவரது மனைவி பெயர் சரஸ்வதிப்பிள்ளை. இவர் ஓர் ஆசிரியை. பேராசிரியர் தம்பதிகளுக்கு பாலமயூரன், கீதா என இரண்டு பிள்ளைகள்; ஒரு மகிழ்வான குடும்பம்.

மணிவிழாக்காணும் பேராசிரியர் பல்லாண்டு பல்லாண்டு நலமுடன் வாழ்ந்து தமிழ்ப்பணி புரிய ஞானம் மனப்பூர்வமாக வாழ்த்தி மகிழ்கிறது.

''இச்சகம் இருக்கும் வரை உங்கள் அச்சகம் நிலைக்கும்'' – கவிஞர் வைரமுத்து

**யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்**

(அச்சுக்கலையின் ஆலயம்)

தமிழ், சிங்கள, ஆங்கில கணனி வடிவமைப்பு மற்றும் அச்சுவேலைகள்

- **அழைப்பிதழ்கள்**
- **நூல்கள்**
- **விளம்பர பதாகைகள்**
- **கலண்டர்கள், டையரிகள்**
- **அரங்கேற்ற அழைப்பிதழ்கள்**
- **ஞாபகார்த்த மலர்கள்**
- **அரங்கேற்ற மலர்கள்**

திருமண அழைப்பிதழ்களை உங்கள் ரசனைக்கேற்றவாறு வடிவமைக்கலாம்

*விற்பனைக்கு எம்மிடம் : (Natural pulp chemical free paper) இரசாயன கலவையற்ற இயற்கை மூலப்பொருளில் தயாரித்த கடதாசிகள் விற்பனைக்கு உண்டு*

48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு 13.
தொலைபேசி : 011 2330195, 011 2478133
தொலைநகல் : 2330195. மின்னஞ்சல் : unieart@sltnet.lk

*கிளை :*

**யுனி ஆர்ட்ஸ் என்டபிறைசஸ்**

*இந்திய திருமண அழைப்பிதழ்கள் மற்றும் கலைப் பொருட்கள்*

**இல. 4, வவசற் பிளேஸ், கொழும்பு 6. தொலைபேசி : 2582827**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொத்மலைத் திட்டம்
வந்தது என்றதும்
இத்திட்டம் வந்திடின்
எம்மவர் நலனுக்கு
சத்தியம் வந்திடும்
தீமை என்றார்.
நித்தமும் சோதனை
தொடரு மென்றார்.

தேயிலை நிலங்களும்
சேற்றினில் மூழ்கிடும்
கோயில் குளங்களும்
குடிமனை யாவையும்
தாழ்ந்திடும் நீரினில்
தவித்திடும் மக்களை
நோயும் பிணியும்
நெருங்கிட வைத்திடும்.

பெரியரே இளைஞரே
பெண்களே தாயரே
இருப்பிடம் காத்திட
எழும்பு வீரென
எரித்தவர் திட்டத்தை
எரிசாம்ப லாக்கிட
அதிர்ந்து எழுந்தனர்
அப்பாவிப் பொதுமக்கள்

இடைஇடை கோஷங்கள்
எழுப்பிய வண்ணம்
கொடிகள் பதாதைகள்
இளைஞரும் ஏந்திட
குடை நிழல் தாங்கிட
குறுபடை சூழ்ந்திட
படைத்தள பதிகள்
பவிசுடன் வந்தனர்.

கோடை இடியென
கோஷம் எழுப்ப
மேடையில் ஏறியே
முழங்கினர் தளபதிகள்
தாரைகள் தப்பு
தப்பட்டை என்பன
மேகம் பொடி பட
எழுப்பின பேரொலி.

மக்களை மறந்தவர்
மாண்புறும் வகையில்
சிக்கல் இன்றித்
தினந்தொறும் பவனியில்
தக்கார் பலருடன்,
தன்புகழ் பெருக்கிட
மக்களின் துன்பியல்
நாடகம் தொடருது.

தக்க வைத்திட
தனது பதவியை
தக்க சமயத்தில்
சாய்ந்திட லானார்
சொக்கும் வகையில்
சீர் பல பெற்று
திக்கெலாம் விஜயம்
செய்கிறார் தளபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# POOBALASINGHAM BOOK DEPOT

**IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS.**

**Head Office :**

340, 202 Sea Street, Colombo 11, Sri Lanka.
Tel. : 2422321. Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

***Branches :***

309A-2/3, Galle Road, Colombo 06, Sri Lanka.
Tel. : 4-515775, 2504266

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.



# பூபாலசிங்கம் புத்தகசாலை

**புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்**

**தலைமை :**

இல. 340,202 செட்டியார் தெரு, கொழும்பு 11, இலங்கை.
தொ. பே. 2422321. தொ. நகல் 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

*கிளை :*

இல. 309 A–2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை
தொ. பே. 4–515775, 2504266

இல. 4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஒரு வீட்டில் சினிமா!

மு. சிவலிங்கம்



அந்த இருபது வயது 'விடலையை' அவருக்கு நன்றாகத் தெரியும். அவரது வீட்டில் இருந்து மூன்றாவது ஒழுங்கையில் இருக்கின்றான். மூக்கை உறிஞ்சுக் கொண்டு வண்டி உருட்டி விளையாடிய பருவ முதல் பதினைந்து வயது வரை நன்றாகத் தெரியும். "தங்கமான பையன்" அவர் முணுமுணுத்தார். அவருக்கு செய்திப் பத்திரிகை வாங்கி வந்து கொடுப்பான். கடைக்குப் போகும் போது சைக்கிளை நிறுத்தி, ஒற்றைக் காலை ஊன்றிக் கொண்டு "அங்கில்... கடைக்குப் போறேன்... எதுவும் வாங்கணுமா...?" என்பான். "ஆமா ராசா...! பப்பாளிப் பழம் ஒன்னும், சீனிப் பழம் ஒரு கிலோவும், பேப்பர் ஒன்னும்..." நன்றி ததும்ப சொல்வார். அவன் முகம் மலர அப்படி அனு தினமும் அவருக்கு உதவியாக இருந்தவன்.

அவன் முகத்தில் மீசை மயிர் அரும்பு கட்டியிருந்தது. "அடேய் எளந்தாரி...!" என்கின்ற போது அவன் வெட்கப் படுவான். "இப்பவே மொகத்தில பிளேடு போட்டு சேவ் எடுக்காதே...! மொகம் வழு வழுப்பு கெட்டுப் போகும் மகன்...!" என்று அன்பு ததும்ப அந்தப் பெரியவர் அவனுக்கு அறிவுரை கூறுவார்.

சசிதரன் நகரப் பாடசாலைக்குப் போய் க.பொ.த. சாதாரண தர கல்வியை முடித்து விட்டு, உயர்தர பரீட்சை எழுதி விட்டு வரும் வரை அவரோடு அவனுக்கு இருந்த தொடர்பு இல்லாமல் போய் விட்டது. சசிதரன் 'மெடிஸின்' படிப்பதற்கு அவன் பெற்ற வெட்டுப் புள்ளி அவனது கல்வி வாழ்க்கையை இன்னும் ஒரு வருடத்தைத் தள்ளிப் போட்டது. அவன் திரும்பவும் 'செகன்ட் சை' செய்கிறான்.

தாய், தகப்பன்... அவன் ஒரு டாக்டராக வரப் போகிறான் என்று இரவும், பகலும் கனவுகண்டுகொண்டு இருக்கிறார்கள். அவனுக்காகவே தங்களின் மீதமுள்ள காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். குடும்பத்தில் உள்ள ஒரேயொரு பையன்... சொத்து சுகமெல்லாம் அவனுக்காகவே காத்துக் கொண்டிருக்கின்றன.

இந்தச் சூழலில்... அவன் இப்படி அழிந்து கொண்டிருப்பதை... அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

நல்ல மரத்தில் புல்லுருவி படர்ந்தது போல் பாவம் அந்த இளைஞனின் வாழ்க்கையில் விபரீதம் நடந்து கொண்டிருக்கின்றது. அவர் தனது முன் அறை ஜன்னல் திரையை அரைவாசி திறந்து கொஞ்சம் உள்ளே சக்கர நாற்காலியை பின் நகர்த்தி வைத்துக் கொண்டு... அந்த அபச்சார நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்.

காலை நேரம்... ஒன்பது மணி முதல் பத்து, பதினொரு மணிவரை வெறுமை நிறைந்த நேரம்... எல்லோரும் தொழிலுக்குப் போயிருப்பர். பல குடும்பப் பெண்கள் தொலைக்காட்சிக்குள் தொலைந்துபோய் இருப்பர். பெரியவரைப் போல வேலை வெட்டி இல்லாதவர்கள், நோயாளர்கள்தான் வீட்டில் அடைந்து கிடப்பார்கள்... கீரைக்காரனும், மீன், மரக்கறி, தேங்காய் கரத்தைக் காரர்கள் கூட ஒன்பது மணிக்குள்ளே வந்து போய் விடுவார்கள்...

பகல் களவு, கற்பழிப்பு, கொலை நடைபெறும் நேரமாகவும் இந்த விபரீதப் பொழுதை விமர்சிக்கலாம்.

அந்தப் பையன் சசி... முழுப் பெயர் சசிதரன் என்று பெரியவருக்கு இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது.

அவன் கையில் இரண்டு நோட் புத்தகங்களோடு சரியாக 9 மணிக்கு வருவான்... எதிர் வீட்டுக்குள் நுழைந்து, பத்து, பதினொரு மணியளவில் வெளியில் வந்து டவுனுக்குப் போய் வீட்டுக்குத் திரும்பி விடுவான். நிச்சயமாக அவன் டியூசன் வகுப்புக்கு போகிறானா... போவதில்லையா... என்பதைப் பற்றி பெரியவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. எந்த நேரமும் சீ.டீயும், டீ.வீ.டீயும் கையுமாக அந்தவீட்டுக்குப் போகிறான். அந்தப் பொம்பளைக்கு 45,48 வயசு இருக்கும்... இது தினசரி வழக்கமாகும்... அவள் கதவைத் திறந்து அவன் படியில் இறங்கி மெயின் ரோட்டில் காலடி வைக்கும் வரை நின்று, கண்களால் விடை பகிர்ந்து, பின்னர் கதவைச் சாத்திக் கொள்வாள்.

பெரியவர் பெருமூச்சு விட்டார்... "அவளைக் கண்ட துண்டமாக வெட்டிப் போட்டால் என்ன...?" என்று மனசும், உணர்வும் துடித்தன... ஆனால் வயதுக்கும், உடல் நிலைமைக்கும் அவருக்கு முடியாத ஒரு கேள்வி இது...! அவள்... அந்த மனுசி... அவனுக்குத் தாய் மாதிரி...! 25,30 வயதுக்கு மூப்பு... அவனை விட இரண்டு வயது குறைந்த, ஒரு குமரிப் பெண்ணுக்கு அவள் ஒரு தாய்...!

"இவளுக்கு என்ன பிசாசா பிடிச்சிருக்கு...?" பெரியவர் 'டென்சனா'கினார். மீண்டும் அந்தக் காலை 9 மணி... அவன் சினிமாத் தட்டுக்களுடன் டியூசன் புத்தகங்களோடு உள்ளே நுழைகிறான். குதூகலத்தோடு அவனை அவள் வரவேற்கிறாள்.

சசிக்கு பத்தொன்பது வயது முடிந்து இருபது நடக்கின்றது... க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இரசாயன பாடத்தில் இன்னும் ஒரு "B" சித்தி எடுத்திருந்தானென்றால், இப்போது முதலாம் ஆண்டு மருத்துவ மாணவனாக ஏதாவது ஒரு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருப்பான். சூழல் மாசடைவதென்பது வசிப்பிடக் கட்டமைப்பு மட்டுமல்ல. மனதும் உணர்வுகளும் மாசடைவதையும் சூழலுக்குள் கொண்டு வரலாம்.

அந்த விபரீதமான திருப்பம் அன்று அப்படித்தான் நடந்தது. ஒரு நாள் மழையில் நனைந்த நிலையில் அந்த வீட்டுத் தாழ்வாரத்தில் அந்த மாணவன் அண்டி நின்ற போது ஏற்பட்ட சினேகிதம்தான், இன்று இரண்டறக் கலந்து, நகமும், சதையுமாகப் பரிணாம வளர்ச்சியடைந்து பரஸ்பரம் சரீர கலப்புக்குள்ளாகி விட்டது...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரு தம்பி நீங்க...?" என்றும் "உள்ளே வாங்க...!" என்றும் டவலைக் கொடுத்து "தலையைத் துடைச்சிக் கொள்ளுங்க..." என்றதும், அவன் சங்கோஜப் பட்டு நன்றி பெருமிதத்தோடு "தேங்க்ஸ் அன்ட்டி" என்று சொல்லவும்... பிறகு... பிறகு "குட் மோனிங் அன்ட்டி" வரையிலான பணிவான பரிச்சயம் வளர்ந்தது... சீ.டீ. கடையில், வீடியோ கடையில் படங்கள் வாங்கி வரும்படி கேட்ட அன்பான வேண்டுகோள் வரை உறவுகள் வேகமாக வளர்ந்தன.

ஒரு நாள் அந்த அன்ட்டி வைத்திருந்த படத்தைப் பார்க்கும்படி பையனைக் கட்டாயப் படுத்தி, கதவைத் தாழ்ப்பாள் போட்டு... படத்தைப் போட... அவன் கூச்சமாகி... கூனிக் குறுகி நிற்க.. பிறகு முழுப் படத்தையுமே பார்த்து விட்டு... மௌனமாக தேனீர் குடித்துவிட்டுச் சென்றான். மறுநாள் அவனது அந்தரங்கமான மனச்சுரங்கத்துக்குள் விசப்புகை படர்ந்து அவனைத் திக்கு முக்காடச் செய்தது. அவன் பலவந்தமாக ஆண்மையின் பலஹீனத்துக்கு வசப்பட்டான்...

விடிந்தது... அதே ஒன்பது மணி காலை... அன்ட்டி வீட்டு பெல்லை அமுத்தினான். "படம் வாங்கனுமா அன்ட்டி...?" என்றான். அன்ட்டி சொன்ன படங்களையெல்லாம்... வித விதமான "அந்த வெரி லேட்டஸ்ட் படங்களையெல்லாம் வாங்கி வந்தான். வீடியோ கடை வியாபாரி கூட கேட்டான். "படிக்கிற வயசுல... யாருக்குத் தம்பி இந்தப் படமெல்லாம்...?" அவன் அந்தப் பள்ளிப் பருவத்தில் திசை மாறிய பறவையாகினான். சிறகடிக்காமல் வானத்தில் நீந்தினான்.

"அன்ட்டி" என்ற அவள் 48 வயதிலும் இளமை குன்றாத தோற்றம் கொண்டவள்... சராசரி ஒரு சினிமா நடிகையாகவே இருப்பாள். கை, கால்களில் முழுவதும் மருதாணி சித்திரங்கள்... கால்களில் பாதசரங்கள் சுரங்கள் எழுப்பிக் கொண்டிருக்கும். கை குலுங்க தங்க வளையல்கள் ராகம் இசைக்கும்... விரல்களுக்கு லக்னம், ராசி, நட்சத்திரங்களுக்கேற்றவாறு நவரத்தினக் கற்கள் பதித்த மோதிரங்கள்... மனதை மயக்கும் கொலோன் வாசனை... இத்யாதிகளுடன் அந்த அன்ட்டி பரிணமித்திருப்பாள்.

அந்தப் பெரியவருக்கு மட்டும்தான் அந்த முன் வீட்டு சமாச்சாரம் தெரியும். அந்தச் சமாச்சாரத்தை ஏதோ சிதம்பர ரகசியமாகத் தன் நெஞ்சாங் கூட்டுக்குள் அடைத்து வைத்துக் கொண்டிருக்கிறார். சர்க்கரை வியாதி அவரது ஒரு காலை எடுத்துக் கொண்டு அவரை சக்கர நாற்காலியில் உட்கார வைத்து விட்டது.

சாகப் போகும் தன்னைப் பற்றி அவர் கவலைப் படவே இல்லை. நோயில் விழுந்து விட்ட ஒருவன் தனது உடல் நிலையை நன்றாகப் புரிந்துக் கொண்ட பிறகு, சாவைப் பற்றி அவன் பயப்படுவதில்லை. இது எல்லா நோயாளிகளுக்கும் ஏற்படுகின்ற ஓர் இயல்பு. அவருக்குஅந்த அபச்சாரம் வருத்தத்தைக் கொடுத்தது. வாழ்ந்து, மகிழ்ந்து, பலதையும் பட்டு அனுபவித்தவருக்கு... இந்தச் சம்பவத்தை தனது இறுதிக் காலத்தில் கண்டு ஜீரணித்துக் கொள்ள முடியாமல் தவிதாயப் பட்டுக் கொண்டிருந்தார். அவர் வாழ்ந்த காலம், மிகப் பரிசுத்தமாக இல்லாவிட்டாலும், நாறிப் போகும் அளவுக்கு சீரழிந்து போகவுமில்லை. அடுத்தவர், அயலவர் சங்கதியாக, விவகாரமாக இருக்கலாம். சமூகத்தை நேசத்தோடு பார்வையிடும் எந்த ஒரு தனி மனிதனுக்கும், வக்கிரத்தால் சமூகச் சூழல் மாசடைவதைத் தாங்கிக் கொள்ள முடியாதுதான்.

பெரியவருக்கு வயது 75. முன்வீட்டு அந்த மனுசியின் மகளுக்கு "டீன் ஏஜ்" முடிந்து இருபது வயது இருக்கலாம். மகளைக் கவனிக்க வேண்டிய ஒரு பொறுப்புள்ள தாய். மலை போல் ஒரு புருஷன் இருக்கையில்... "ச்சீ... இப்படியுமா...?" அவர் முரண்படும் விசயத்தை நியாயப்படுத்தும் ஒரு விசித்திரமான ஒரு நாட்டின் சட்டத்தை நினைத்துப் பார்த்தார். ரொம்ப தூரம் போக வேண்டியதில்லை... அது இந்தியா...! 13 வயதிலிருந்து 19 வயதுவரை உள்ள டீன் ஏஜ் பருவத்தை, பதின்மூன்று வயதிலிருந்து குறைத்து ஒன்பது வயதாக்கி விட்டிருக்கிறார்களாம்...! இந்தியாவில் சிறு பிராயத்தினர் ஒன்பது வயதிலேயே மன, உடல் வளர்ச்சி முற்றி, பாலியல் ஈடுபாடுகளில் பாதிக்கப்பட்டு வருவதாக, ஆய்வுகள் யதார்த்த நிலையைக் காட்டியுள்ளனவாம்.!

பெரியவருக்கு இந்தப் பத்திரிகைச் செய்தி வியப்பைக் கொடுக்க வில்லை. அந்தக் காலத்தில் விடலைப் பருவக் குறும்புகள் இந்த மாதிரி உச்சஸ்தாயிக்குச் செல்லவில்லை.

இந்தக் காலத்தில்தான் நாலு வயதிலேயே நாணிக் கோணுகின்ற நாடகங்கள் எல்லாம் புரிகின்றதே.!

அவர் ரொம்பவும் மனக் கொதிப்படைந்தார். நாற்காலியைச் சுற்றித் திருப்பி மாத்திரைகளைத் தன் அறையிலிருந்து எடுத்துக் கொண்டு வந்தவர், ஆத்திரத்தோடு வாயில் ஐந்து ஆறு மாத்திரைகளை ஒரேயடியாகக் கொட்டி தண்ணீரை மட மடவென்றுக் குடித்தார்.

அவர் வாய் திரும்பவும் முணு முணுத்தது. "அவளைப் பாத்தா கூத்தாடி மாதிரி! அரிதாரம் பூசிய மூஞ்சியாக, அலங்காரத்தோடதான் எந்த நேரமும் இருப்பா...!" இப்படி ஒரு சினிமா கவர்ச்சிக்குள் பூர்வ ஜென்மம் வரை சிறைப் பட்டிருக்கும் அவளுக்குப் பாலியல் மோகம், இருபதாய், முப்பதாய் இன்னும் இழையோடிக் கொண்டிருக்கிறது. வீட்டுக்காரர் வியாபாரத்தோடு சரி. அதுவே அவருக்கு பிரபஞ்சம்...! காலையில் 7 மணிக்குக் கடைக்குப் போனார் என்றால் இரவு 9 மணிக்குத்தான் வீட்டுக்கு வருவார். கை, கால்களை அலம்பி விட்டு சாமி அறைக்கு சாம்பிராணி புகை பிடித்து, மணி அடித்து, இரவு பூஜையை முடித்து விட்டுச் சாப்பிடுவார். அவருக்கு அவள் வாய்க்கு ரூசியா ஆக்கிப் படைப்பதோடு சரி... படுக்கையிலும் கூட அந்த மனிதனை மனைவியிடம் கதைக்க விடாமல் வியாபாரக் கணக்குகள் அவர் தலையைக் குடைந்து கொண்டிருக்கும். பத்தரை மணிக்கு படுக்கையில் சாய்ந்தாரென்றால், நாளைக்கு ஒவ்வொரு வங்கிக்கும் வைப்பு வைக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பணம் பற்றியும், ரியலைஸ் ஆகாத காசோலைகள் பற்றியும், ஓ.டி சம்பந்தமாக பேங்க் மெனேஜர் ஞாபகமூட்டியதையும் மனதில் போட்டுக் குழப்பிக் கொண்டிருப்பார்.

தொழில் என்பது வாழ்க்கையின் ஜீவாதாரமாக இருந்தாலும், அது வேறு. உறவுக்குட்பட்ட குடும்பம், மனைவி, மக்கள் வேறு... என்பதை அவர் உணராது பணத்தின் நினைவோடு மட்டுமே வாழும் மனிதர்களில், அவரும் ஒருவராக இருந்தார்.

உலகத்தில் உள்ள அத்தனை நவீன நுகரும் பொருட்களையெல்லாம் மனைவிக்காக வீடு நிறைய வாங்கிப் போட்டிருப்பதில் அவர் பெருமையடைந்தவர்.

வீடு ஒரு சினிமா தியேட்டராக நடு வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது... 16 மில்லி மீட்டர் திரையைப் போன்ற தொலைக்காட்சி பெட்டி, அதற்குரிய வி.சி.டி., டி.வி.டி., கெசட் இன்னும் பெயர் தெரியாத த்ரீ இன் வன், போர் இன் வன் என்று மின் உபகரணங்கள் எல்லாம் குவிந்து, இன்றைய இலத்திரனியல் வளர்ச்சியைக் காட்டிக் கொண்டிருந்தது. நூற்றுக் கணக்கான சீ.டி. தட்டுக்கள் கொள்ளை போன வீடாய் கொட்டிக் கிடக்கும். ''அன்ட்டி அவள்... சோபா செட்டில், ரிமோட் கொன்ட்றோலரோடு' படுத்துக் கொண்டுதான் படம் பார்ப்பாள்... என்றைக்கோ... யாரோ... விஸிட்டர் வந்த நாளில் கொடுத்த தேனீர் கோப்பையும் டீ போய் மேசையில் கிடக்கும். அதற்குள்ளே மீதமுள்ள தேனீரில் பத்துப் பன்னிரண்டு ஈக்கள் உயிர் பிரிந்து கிடக்க... இப்போது சிறிது நேரத்துக்கு முன் விழுந்த இன்னுமொரு ஈயும் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது.!

வீடு எப்போதும் களைப்படைந்து காணப்படும். அம்மி, குழவியைத் தவிர, அந்த வீட்டில் எந்தப் பொருளையும் தேடித்தான் கண்டு பிடிக்க வேண்டும்... அது ஒரு ''தேடுதல் இல்லம்...!'' அவளுக்கு என்ன... வீட்டுக்காரரும் மகளும் காலை ஏழரை மணிக்கே வீட்டை விட்டுப் போய் விடுவார்கள். மகள் 20 வயது குமரி. ஏ.எல். படிக்கிறாள்.

இவள் பகல் சாப்பாட்டை சமைத்து வைத்து விட்டாள் என்றால், பின்னேரம் வரை இந்தியாவில், தியேட்டர்களில் இன்னும் ரிலீஸ் ஆகாத படங்களையெல்லாம் பார்த்து விடுவாள்.!

சசிதரன் அன்ட்டியுடைய பெயரை நேற்றுதான் கேள்விப் பட்டான். தற்செயலாக வீட்டு வாசல் அருகில் வரை சைக்கிளை மிதித்துக் கொண்டு வந்தவன், வெளியே நின்ற அந்த அங்கல் அன்ட்டியிடம் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தான். ''ஜெயம்.! செல்போன மறந்திட்டேன்... சாப்பாட்டு மேசையில் இருக்கு... எடுத்து வா... என்றார்.

''ஜெயம் அன்ட்டியை நாளைக்கு எப்படி சரி மீட் பண்ணும் போது, காதுக்குள்ளே ''ஜெயம்!'' என்று கேலி செய்து விட வேண்டும்...'' என்று நினைத்து உதடுகளுக்குள்ளேயே ஓர் மன்மதச் சிரிப்பை உதிர்த்துக் கொண்டான்.

* * *

சசிதரன் தனது படிப்பு வாழ்க்கையில் டாக்டராகும் பாதையில் இன்னொரு தடையும் ஆழமாக விழுந்தது... அன்ட்டி ஜெயத்தின் மகள் ரதி, அந்த ஐஸ் கிரீம் கடைக்கு அவனைக் கூட்டிச் சென்று, தன் மனதுக்குள் கிடந்து உருளும் ஆசைகளைக் கொட்டித் தீர்த்தாள்... ''அம்மா பாவம்...! அம்மாவுக்கு நீங்க படம் வாங்கிக் குடுத்தா மட்டும் போதாது...'' என்று அவனை விழுங்குவது போல் பார்த்தாள். அவனது கையிலிருந்த ஐஸ் க்ரீம் கோப்பையை வாங்கிக் கொண்டு, அவளது கோப்பையை அவனுக்குக் கொடுத்தாள். இளமைத் தாகத்தின் ஓர் எச்சில் பரிமாற்றம் அந்த மேசையில் நிகழ்ந்தது.

இந்தத் தொடர்பு... சசியைப் பொறுத்தளவில் அன்ட்டியுடன் பிணைந்திருக்கும் உடல் இசைக்கப்பால் ரதியின் மேல் காதல், மனைவி, வாழ்க்கை என்ற ஆத்மார்த்த உணர்வில் தொடர்ந்தது. இவர்களின் உறவு உச்ச நிலையை அடைந்தது. பரஸ்பரம் படிப்பில் இருவர் வாழ்க்கையிலும் மண் விழுந்தது...!

ரதி, நகை முதல் வியாபாரம் தொடர்வதற்கான மூலதனம் வரை எடுத்து வருவதற்கு தயாராகினாள். ''இதற்கு மேல் படிப்பு ஏறாது... ஒரு கடையைப் போட்டு, பணத்தை சம்பாதித்து ஜொலியா வாழ ஆசை...'' என்றாள் ரதி...

இவர்களிடமும் அந்தச் சினிமாப் பாட்டு அதே அந்த இரண்டு கேள்விகளைக் கேட்டது... ''கலியாணந்தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா...? இல்ல ஓடிப் போயி கலியாணந்தான் கட்டிக்கலாமா...?''

சசி, ரதி விவகாரங்களை நேற்று நடந்த சந்திப்பின் போது ஜெயம் அன்ட்டி சொன்னாள். ''நீங்க ரெண்டு பேரும் ஓடிப் போக வேணாம்...! ஒங்கள வீட்டுக்கு மாப்பிள்ளையா ஏத்துக்க ஏற்பாடு செய்றேன்... அவரு நான் எதைச் சொன்னாலும் கேப்பாரு...'' என்று அவனது காதுக்குள் குசு குசுத்தாள்... அவளது உஷ்ணக் காற்று, அவனது காதுக்குள் தேனாமிர்தமாகப் பாய்ந்தது...

அவனுக்காக இரவும், பகலும் கனவு கண்டு கொண்டிருக்கும் பெற்றோர்கள் அவனுக்கு துரும்பாக, தூசாகவே பட்டார்கள். அவர்கள் அவனுக்கு ஒரு பொருட்டாகவே படவில்லை...

* * *

குடும்பத்தையும், சமூகத்தையும் சீரழிக்கும் பஞ்ச பூத சக்தியாக சினிமா வந்து விட்டதே என்று பெரியவர் நொந்து கொண்டார். பெரியவர் சாதாரண ஆசாமி இல்லை...! ஒரு நாள் வானொலிப் பெட்டியில் இரட்டை அர்த்தத்தோடு கெட்ட வார்த்தைகளில் ஒரு சினிமா பாட்டுப் போய்க் கொண்டிருந்தது. அவர் உடனே வானொலிப் பெட்டியைத் தூக்கி நிலத்தில் அடித்து நொறுக்கி விட்டாராம்...! வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் தாத்தாவுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று பயந்து போனார்களாம்... 'டென்ஸன்' ஆறிப் போன பிறகு பெரியவர் பேசத் தொடங்கினாராம். ''சினிமாவாம்... சினிமா.! படத்தப் பாத்தாலும் ஆபாசம்... பாட்டப் போட்டாலும் ஆபாசம்... ஆட்டம் போட்டாலும் ஆபாசம்... பாட்டு எழுதியிருக்கிறான் பாரு... பாட்டு... படவா ராஸ்கோலு... பக்கத்தில் நின்னான்னா... தூக்கிப் போட்டு மிதிச்சிப்புடுவேன் மிதிச்சி...!'' என்று ஆத்திரம் தீர ஏசிக் கொண்டிருந்தாராம்... அவருக்கு இத்தனை வயதாகியும் ஒரு விசயம் மட்டும் இன்னும் விளங்க வில்லை.

சினிமா ஒரு வெளிப்படையான பாலியல் பூமி... அது நடு வீட்டுக்குள் நுழைந்து, விஸ்தரிக்கப்பட்டு தன் அகோரங்களால் ஆக்கிரமிப்பு நடத்திக் கொண்டிருக்கிறது... அதன் சுவையில் மயங்கிய ஆண்களும், பெண்களும் தங்கள் கலாசாரக் கட்டுகளை உடைத்து, மீறி நடப்பதில் அதிர்ச்சி ஒன்றுமில்லையே...?

மறுபுறம் பார்த்தாலும், சினிமா ஓர் அற்புதமான ஊடகம்... அது இப்படி இழிவாகி... ஈனமாகி... அதுவே மூச்சாக... காற்றாக... வியாபித்து... கயமையை மட்டும் பரப்பிக் கொண்டிருக்கிறது...! அந்தக் கயமையில், கடலுக்கு அப்பால் அக்கரை நாடு என்றோ அழிந்து போய் விட்டது...! இப்பொழுது இக்கரை அழிந்து கொண்டிருக்கிறது...!

பெரியவர் மனம் குழம்பியவராய் தன் சக்கர நாற்காலியை திருப்பி படுக்கையறைக்குள் செல்ல முற்பட்டார்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் கவிதைத் தடத்தில் "கைகூ" கவிதைகள்

## –ஒரு நுனிப்புல் மேய்ச்சல்

-இ. இராஜேஸ்கண்ணன்

ஈழத்துக் கவிதை இலக்கியம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பெற்று விரிந்துள்ள இன்றைய நிலையில் சொந்த மண்ணிலும், புலம் பெயர்ந்த தேசங்களிலும் பல கவிஞர்கள் உயிர்ப்புடன் தங்கள் கவிதைப் பணிகளை செய்து வருகின்றனர். சொந்த மண்ணின் அவலங்கள், புலம் பெயர் நாட்டு அனுபவங்கள்– அங்கலாய்ப்புகள் ஒரு புறத்தில் கவிதையின் தளத்தை விரிவுபடுத்தும் அதே வேளை, மொழியாக்கம் செய்யப்பட்டு வரும் கலைச் செல்வங்களாலும் எமது சிந்தனா தளம் உலகளாவிய நிலை பெற வேண்டும் என்ற உணர்வுகள்– உந்தல்கள் ஏற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு– வேற்று மொழிக் கவிதைகளை தமிழில் மொழியாக்கம் செய்வது என்பதற்கு அப்பால், வேற்று மொழிக்கவிதை வடிவத்தை அறிமுகம் செய்வதில் இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளன. ஒன்று தமிழில் புதிய வடிவம் அறிமுகமாவது, மற்றையது குறித்த வேற்று மொழி பேசும் வாழ்க்கை அனுபவங்களின் சுவறல் எமது அனுபவங்களுடன் ஒத்து அதிர்வு பெறுவது. இவை இரண்டையும் இன்று சாத்தியமாக்கியுள்ள கவிதை வடிவமாக ஜப்பானிய "கைகூ" தமிழில் அறிமுகமாகி இன்று மூன்று தசாப்தங்கள் கடந்து விட்டன.

தமிழில் "கைகூ" கவிதை என்பது ஒப்பீட்டு அளவில் தமிழகத்தில் அளவில் அதிகமாக தோன்றியுள்ளன. ஜப்பானில் ஜோசோ, சியோனியோ, மசாஹிடே, தைகி, ரைஸா என்று கைகூ கவிஞர்களின் பட்டியல் நீள்வதைப் போல தமிழகத்தில் அப்துல் ரகுமான், லீலாவதி, அமுதபாரதி, தமிழன்பன், அறிவுமதி, மித்ரா, இதயகீதா, ரவி, செந்தில்குமார் என்று ஒரு பட்டியல் விரிகின்றது. இவர்களில் சிலர் ஜப்பானிய கைகூகளை மொழிபெயர்த்தவர்கள். வேறு சிலர் புதிதாக தமிழில் கைகூ எழுதியவர்கள். தமிழில் முதன்முதலில் 1970 இல் அப்துல் ரகுமான் சில கைகூ கவிதைகளை எழுதியதாக கூறுகின்றனர். தமிழகத்தில் டாக்டர் இரா.மோகன், தி.லீலாவதி, சுஜாதா, தமிழன்பன், ரசூல் போன்றவர்களால் கைகூ தொடர்பான ஆய்வுகளும் வெளிக்கொணரப்பட்டுள்ளன. 1980 களின் பின்னர் தமிழகத்தில் இருபது தொகுதிகளுக்கு மேல் கைகூ கவிதைகள் வெளிவந்துள்ளன.

ஈழத்து கவிதை மரபிலும் 1980களில் கைகூ கவிதை வடிவம் செல்வாக்குப் பெறத் தொடங்கியதற்கு தமிழகத்தில் ஏற்பட்ட ஜப்பானிய கைகூ மொழியாக்கங்கள் உந்தலாக அமைந்தன எனலாம். ஆங்கில வழி தமிழுக்கு அறிமுகமான கைகூகளை தமிழில் கைகூ எழுதியவர்கள் தம்வசமாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஈழத்தைப் பொறுத்த வரை உதிரிகளாக சொந்த மண்ணிலும், புகலிடங்களிலும் தோன்றிய கவிதைகள் நீங்கலாக இதுவரை நான்கு கைகூ கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

ஈழத்தின் முதல் கைகூ கவிதைத் தொகுப்பாக சு.முரளிதரனின் "கூடைக்குள் தேசம்" மலையக வெளியீட்டகத்தின் 5வது வெளியீடாக 1988 ஏப்ரலில் அந்தனி ஜீவா அவர்களால் வெளியிடப்பட்டது. சாரல் நாடனின் முன்னுரையுடனும் "நேசம் கலைந்த உண்மை" என்ற மேமன் கவியின் நயத்தல் குறிப்புடனும் வெளிவந்தது. அத்தொகுப்பில் 76 கைகூக்கள் உள்ளன. "கூடைக்குள் தேசம்" வெளிவந்த பின்னர் அந்தத் தலைப்பின் சாயலில் "கல்லறைக்குள் கதிரவன்" என்ற சார்ள்ஸின் கைகூ தொகுப்பு 1990 இல் வசந்தம் வெளியீடாக வந்தது. "உனக்குள்ளேயே உள்ளிருப்பு", "இழப்புக்களையும் இழப்போம்" என்ற இரு தொகுதிகள் இணைந்த ஒரு தொகுப்பாக வெளிவந்தது. மொத்தமாக 178 கைகூக்கள் கொண்டது கல்லறைக்குள் கதிரவன். அதன் பின்னர் ஒக்டோபர் 2001 இல் மல்லிகைப் பந்தல் வெளியீடாக பாலரஞ்சனி சர்மாவின் "மனசின் பிடிக்குள்" என்ற தொகுதி ஐம்பது கைகூக்களுடன் வெளிவந்தது. மேமன் கவி, நா. கண்ணன், பண்ணாமத்துக் கவிராயர் என்போரின் அறிமுகக் குறிப்புக்களுடன் டொமினிக் ஜீவாவின் பதிப்புரையுடனும் வெளிவந்துள்ளது. தொடர்ந்து முதல் கைகூ தொகுதி வெளிவந்து இருபது வருட நகர்வில் இ. சு. முரளிதரன் "நுங்குவிழிகள்" என்ற கைகூ தொகுதியைத் தந்துள்ளார். மே 2007 இல் மேதினிகா (நல்லூர்) வெளியீடாக வந்துள்ள இத் தொகுதிக்கு "மூன்றடியில் செதுக்கப்பட்ட ஒரு சொற் சித்திரம்" என்ற தலைப்பில் தமிழ் நாட்டுக் கவிஞன் பா. விஜய் ஒரு அணிந்துரை வழங்கியுள்ளார். 46 பக்கங்கள் கொண்ட இத் தொகுதியில் அறுபது கைகூக்கள் உள்ளன. கவிஞர் த. ஜெயசீலன் "அக்கினிக்குஞ்சுகள்" என ஒரு அறிமுகக் குறிப்பை வழங்கியுள்ளார். ரஞ்சகுமாரின் அறிமுகக் குறிப்பும் உள்ளது.

இத் தொகுதிகளின் வழி ஈழத்து கைகூ கவிதைகளின் வடிவம், படிமங்கள், கருத்துநிலை, மொழிப்பிரயோகம் என்பவற்றை ஆராய்வதன் மூலம் ஈழத்து கைகூக்களின் செல்நெறியை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

தமிழர்களின் வாழ்வில் "விடுகதை" சொல்லி "அவிழ்க்கும்" வழக்கம் இருந்தது. மக்கள் தமது ஓய்வு நேரங்கள், களியாட்ட நேரங்களில் இதில் ஈடுபடுவர். முதுமைக்கும் இளமைக்கும் இடையே இணைப்பு ஏற்படுத்தும் ஒன்றாக விடுகதைகள் அமைவது வழமை. ஒருவர் வினாத் தொடுக்க இன்னொருவர் அவிழ்ப்பதாக அது அமையும். அவ்வாறு ஜப்பானிய சமூகத்தின் வேகமான வளர்ச்சிக்கான விடா உழைப்பில் ஓயும் வேளைகளில் மக்கள் இயற்கைக் காட்சிகள், மதப் போதனைகளை மிகச் சுருக்கமாக ரசிப்பதற்கு சிறந்த ஊடகமாக கைகூ கவிதை வடிவம் அமைந்தது. ஆனால் தமிழில் வந்த கைகூக்களில் பருவ மாற்றம், இயற்கை ரசிப்பு, அழகுணர்ச்சி என்பவற்றுக்கு அப்பால் அரசியல் சீர்கேடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயக் கேடுகள், வாழ்க்கை முரண்கள், மூடநம்பிக்கைகள், யுத்தம் என்று உள்ளடக்கங்கள் மிக விரிவதைத் தரிசிக்கலாம். ஈழத்துக் கைகூக்களில் இவை செறிந்துள்ளதை தெளிவாக நோக்கலாம்.

ஈழத்துக் கைகூ தொகுதிகளில் வரும் கைகூக்களின் "விஸ்வரூபத்தினை" தரிசித்து விட அக்கவிதைகளை ஒரு வகைப்பாட்டினுள் கொண்டு வரும் முயற்சியில் இறங்கும் போது தோல்வியே மிஞ்சுகின்றது. ஏனெனில் ஒரு கைகூ இயற்கையின் அற்புதத்தை பாடுகிறது என்று வகைப்படுத்தி விட்டு மீண்டும் படிக்கும் போது அது வாழ்க்கைத் தத்துவத்தைச் சொல்கிறது. ஒன்று நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துகிறது என்று தீர்மானித்து மீண்டும் படிக்கும் போது அது பண்பாட்டுச் சீரழிவைச் சாடுகிறது. எனவே இந்த கைகூக்கள் என்பது ஒரு வாசகனின் உள்ளத்தில் விதைத்துவிட்டுப் போகும் விதைகள் "விஸ்வரூபத்தின்" விதைகளாகின்றன.

ஈழத்தின் கைகூக்களில் அவை தரும் வாழ்நிலை அனுபவங்கள், கற்பனைத்திறன்கள், படிமச் செதுக்கல்கள், சொற்செட்டு என்பவற்றில் தனித்துவமான அடையாளங்கள் உள்ளன. இதனை விளங்கிக் கொள்ள அக்கவிதைகளை,

- ♦வாழ்க்கைத் தத்துவங்களை கூறுவன—
- ♦இயற்கை ரகசியங்களை உணர்த்துவன—
- ♦சமுதாய சீர்கேடுகளை பரிகசிப்பன—
- ♦பண்பாட்டின் சிதைவுக்காய் நோவன—
- ♦யுத்தத்தின் தடங்களை காட்டுவன—
- ♦நகைச்சுவை, நையாண்டி உணர்வு தருவன—

என்று உள்ளடக்கத்தின் அடிப்படையிலே வகைப்படுத்தலாம்.

ஈழத்து கைகூக்களின் ஆரம்பம் முதல் இந்த உள்ளடக்கங்கள் இன்று வரை தொடர்வன எனினும் பிந்திய கைகூக்களில் வாய்க்கும் படிமங்கள், கருத்துச்செறிவு, இறுக்கமான வடிவ நேர்த்தி என்பன வியக்கவும் வைக்கின்றன.

## வாழ்க்கைத் தத்துவங்கள்

தம் காலத்து வாழ்க்கை அனுபவங்களை முற்கால வாழ்வனுபவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்காத படைப்பாளிகள் இல்லை. வாழ்வின் நகர்வில் அதன் அர்த்தங்களை பார்க்காத கவிஞன் வெறும் சம்பவங்களை தரிசிப்பானே அன்றி வாழ்வின் உயிர்ப்பை ரசிக்கத் தவறி விடுகிறான்.

மரத்தில் முன்னர் பசுமையாய் இருந்து பின்னர் பழுத்து விழும் இலையின் மடிவினைப் பாடும் சு. முரளிதரன்,

"பசுமையுடன் இளமை முடிய
காவியுடன் வெளியேற்றம்
இலைகள்"

என்று பாடுகிறார். இந்த வரிகள் இளமை, முதுமை என்ற இருநிலைகளை இயற்கையான சம்பவத்துடன் இணைக்கின்றது.

"வீடென்று நான் சுமந்தது
சவப் பெட்டி தானே
நத்தையின் சுடலை ஞானம்"

என்ற வரிகளின் இறுக்கத்தில் எமக்கு வெளிப்படும் வாழ்வின் அர்த்தங்கள் காலவோட்டத்தில் அர்த்தம் இழப்பதை குறித்து உணர்த்துகிறது.

"காலை எட்டிப் போட்டும்
பயனில்லை
கூடவே வரும் நிழல்'

என்ற பாலரஞ்சனி சர்மாவின் வரிகள் தரும் விளக்கம் வெளிப்படையாக உருவும் நிழலும் தொடர்பாக பேசினும் உள்ளூர அது உணர்த்தும் அர்த்தப்பாடு வாழ்வியல் அனுபவமாகின்றது.

சார்ள்ஸின் கைகூ ஒன்று கனவே வாழ்வாகிக் கழியும் தன்மையை பாடும்போது,

"பகற்கனவு கண்டு
மீள எழுந்தேன்
விரைவில் இராக்கனவு"

என்று குறிப்பிடுகின்றார்.

இ. சு. முரளிதரனும் தனது "நுங்கு விழிகள்" தொகுதியில் தனது வாழ்வியல் அனுபவங்களால் வரித்துக் கொண்ட பல விடயங்களைப் பாடியுள்ளார். எத்தனையோ தீபங்களுக்கு உயிர்ப்பு அளித்து அணைத்து— அடங்கிக் கிடக்கும் தீக்குச்சி அனுபவங்களுக்கு ஏற்ற அர்த்தம் பெறும்

"ஒளிரும் விளக்கு
அருகில்
கருகிய தீக்குச்சு"

என்ற வரிகள் செட்டாக உணர்த்தும் அர்த்தம் கனமானது.

"பசித்த பூனை
பார்த்து மிரண்டது
பல்லியின் வால்"

நாம் வாழ்நாளில் சுய நலனுக்காகவும் சொந்தத் தேவைகளுக்காவும் அவசரப்பட்டு எடுக்கும் முடிவு தரும் மிரட்சியை புரிய வைக்கும் வரிகள் அவை.

இன்றைய அவசரமான வாழ்வின் வேகத்தில் வாழ்வின்— வாழ்தலின் எழிலை எண்ணி வேதனைப்படும் இ. சு. முரளிதரன்,

"நிறக்குருடுகள்
எதிரே வானவில்
இயந்திர வாழ்வு"

என்று அர்த்தமிழக்கும் வாழ்வை எது எனக் காட்டுகின்றார்.

*இயற்கை ரசனை*

பொதுவாக ஜப்பானிய கைகூக்கள் பருவ மாறுதல்களின் இயற்கை வனப்பை பாடுவன.

"உதிர்ந்து வீழ்ந்த மலர்
கிளைக்குத் திரும்புகிறது
ஓ! வண்ணத்துப் பூச்சி!"

என்ற ஜப்பானிய கைகூவை அறியாதார் இல்லை எனலாம்.

ஈழத்து கைகூகளில் இயற்கை ரசனையை அதிகளவில் பாடுவது பாலரஞ்சனி அவர்களின் மனசின் பிடிக்குள். சு. முரளிதரனும் மலைநாட்டின் எழிலை படிமங்களாக்கியுள்ளார். சார்ள்ஸ் இயற்கை ரசிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

"காற்றுக்குள் தான்
எத்தனை நந்தவன அத்திவாரங்கள்
மகரந்தம்"

கண்ணுக்குள் சிக்காத காற்று சுமந்து செல்லும் மகரந்தம் பல எழில்மிக்க நந்தவனங்களின் அத்திவாரம் எனப்பாடும் கற்பனைத் திறம் சு. முரளிதரனுக்கு வாய்த்தது.

"ஆழ்கடலுள்ளும் திருடர்கள்
மூடியிருக்குது பெட்டகம்
முத்துச்சிப்பி"

இந்த வரிகள் உணர்த்தி நிற்கும் அர்த்தம் என்பதற்கு அப்பால் அந்த வரிகள் தரும் படிமம் நெஞ்சில் நிறைந்து விடும்.

சார்ள்ஸின் கைகூகள் பெரும்பாலும் யுத்த வடுக்களை பேசுவனவாக உள்ள போதிலும்,

"வானவில்லையும் கைப்பற்றி வாரீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புகள் பல எய்திடுவீர்
பொம்மலாட்டம் ஆடும் பொம்மர்கள் நோக்கி"

என்ற வரிகளில் அழகுணர்வுக்குரிய வானவில்லை பொம்மர்களுக்கு அம்புவிட வில்லாக்க முனைகின்றார்.

பாலரஞ்சனியின் கவிதைகளில் 90% ஆனவை இயற்கை ரசனையை உள்ளடக்கமாக கொண்டவை.

"மழை வானத்துள்
எப்படிப் புகுந்தது
மஞ்சள் நதி"

"விரியாதே மொட்டே
உன்னில் அமர்ந்திருக்கும்
பனித்துளிகள் பாவம்"

"சிட்டுக் குருவியே உன்
சின்னச் சொண்டுக்குள் பெரிய மரம்
உதறிவிடு ஆல விதையை!"

என்று வரும் பாலரஞ்சனியின் வரிகள் ஏராளமானவை. பனித்துளிக்கு அபயம் அளிக்குமாறு அவிழாத மொட்டைக் கேட்பதும், ஆலமரத்துக்கு வாழ்வு தருமாறு சிட்டுக்குருவியைக் கேட்பதும் கவிஞரின் இயற்கை நாட்டத்துக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

நுங்கு விழிகள் தொகுதியில் இ. சு. முரளிதரன் இயற்கையை ரசிக்கும் விதம் இன்னொரு வகை. இவரின் இயற்கை நாட்டம் சமூகத் தேவையின் பிரதிபலிப்பாக அமைவதை,

"மரம் வெட்டும் மனிதன்
விதை சேதப்படாது
கனி உண்ணும் பறவை"

என்ற வரிகள் காட்டும். மனிதனின் பொறுப்பற்ற செயலையும் பறவையின் பொறுப்பு வாய்ந்த செயலையும் ஒப்பிட முனைகின்றார்.

"பூசைக்காய்
பறிக்கப்பட்ட பூக்கள்
காம்புகளில் கண்ணீர்"

"மழையால்
கவிதையாயின
புழுதி படிந்த பூக்கள்"

என்ற வரிகளிலும் இ.சு. முரளிதரன் அழகை ரசித்து உள்வாங்குவதுடன் அந்த அழகின் மடிவை வெறுத்து மனங்களில் கீறல்களை ஏற்படுத்தும் வகையில் பறிக்கப்பட்ட பூவுக்காய் கண்ணீர் வடிக்கின்றார்.

## சமுதாயச் சீர்கேடுகள்

படைப்புக்கள் மனித மனங்களிலே கலையுணர்வை விதைக்க வேண்டும் என்பதுடன் சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் சீர்கேடுகளைக் கலை நயத்துடன் வெளிப்படுத்தி மனித மனங்களில் பல வினாக்களை தோற்றுவிக்க வேண்டும். இப்பணியை செய்ய கைகூக்கள் கச்சிதமான வடிவமாகும்.

"கூடைக்குள் தேசம்" பகைப்புலமாக மலையகத்தைக் கொண்டு சமுதாயத்தின் சீர்கேடுகளைச் சாடுவது சிறப்பாக கைகூ வரிகளில் வந்துள்ளது.

"வாசனைப் புகை வண்ண மலர்
போசணை உணவு
கண் மூடிய விக்கிரகம்"

இந்த வரிகள் மாற்றம் காணாத வாலாயங்களால் ஏதும் பயனில்லை என்பதை உறுதியாகச் சொல்கிறது.

"ஏழையின் எத்துணை
கனவுகள் கலைந்தன
மூட்டைப் பூச்சிகள்"

என்று ஏழைக்கு கனவில் கூட பஞ்சம் என்ற எண்ணக் கருத்தை வெளிப்படுத்துகிறார்.

"நிலவுக்காய் அழுவதை
நிறுத்திக் கொண்டது லயக் குழந்தை
ரொட்டி முன்னே"

என்பதைப் போல மலையக தோட்டத் தொழிலாளர் சமுதாயம் படும் இன்னல்களை உரத்து உறைக்க கூறும் ஏராளமான வரிகளுக்கு சு. முரளிதரன் சொந்தக்காரன்.

பாலரஞ்சனியின் "மனசின் பிடிக்குள்" சமூகத்தின் சிதைவுகள் அகப்பட்ட அளவு அதிகமில்லை. எனினும்,

"கப்பல் விடும்
ஏழைச் சிறுமியின் சந்தோஷம்
வீட்டுக்குள்ளே வெள்ளம்"

என்ற வரிகளில் பொதிந்துள்ள சமூகப்பார்வை குறிப்பிடத் தக்கது.

சார்ள்ஸ் தனது கைகூக்களில் போரின் சமூக வடுக்களை வெளிப்படுத்தி நிற்பதே அதிகம். எனினும்,

"எங்கள் வீதிகள்
இருட்டினை விழுங்கிக் கொண்டன
பட்ஜெட்டில் மின்வரி உயர்ந்தது"

என்ற வரிகள் மின்சாரம் காணாத சமூகத்தின் மீது அக்கறையற்ற அரசின் செயலை உறைக்கக் கூறுகின்றது.

இ. சு. முரளிதரன் தனது "நுங்கு விழிகள்" தொகுதியில் சமூகப் பொய்மைகளைச் சாடுவதுடன் சமூகத்தை நையாண்டி செய்கிறார். அத்துடன் சுயபண்பாட்டின் சிறப்புக்களை மறந்து வாழும் நவீன வாழ்வின் பலவீனங்களைப் பார்த்து பரிகசிக்கின்றார்.

"தகர்க்கப்பட்ட வீடுகளில்
தழைத்திருந்தது
வாசலில் வைத்த கள்ளிச் செடி"

என்ற வரிகளின் அர்த்தம் விளங்குவதற்காக கள்ளிச் செடி வாயிலில் வைப்பது கண்ணூறுபடாது தடுப்பதற்காக என்பதை கவனத்தில் எடுக்க வேண்டும்.

"சுடலைக் காவலரணில்
பெண் போராளி,
பாட்டி சொன்ன "பேய்க்கதை"?

இது சமூகத்தில் பண்பாட்டின் பெயரால் பெண்மைக்கு விதிக்கப்பட்டிருந்த தழையின் சிதைவைக் குறிக்கின்றது.

"கொட்டும் மழையில்
கடவுளின் குழந்தைகள்
கட்டிடங்களுக்குள் கற்சிலைகள்"

"ராமருக்கு கோயில்
பாபருக்கு மசூதி
கடவுளுக்கு?"

போன்ற வரிகளில் மனித வாழ்வுக்கு வளம் சேர்க்க வேண்டிய கோயில்கள் அவர்களின் முரண்களுக்கு தூபமிடுவதைப் பாடுகின்றார்.

மிக வேகமான உலகமயமாக்கலின் நடுவே சிக்கி அவசரமான வாழ்வில் மனிதன் வாழ்வை ரசிக்கத் தெரியாது, பண்பாட்டு நெறிகள் யாவற்றையும் பாழடைய விட்டு தறிகெட்டு ஓடுவதை,

"நிறக்குருடுகள்
எதிரே வானவில்
இயந்திர வாழ்வு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தொலைக் காட்சியில் 'கிரிக்கெற்'
கரவொலிச் சிறுவர்
பரணில் கிட்டிப்புள்''

என்ற வரிகளால் மனதுள் புதைக்கின்றார்.

## யுத்தத்தின் சுவடுகள்

சு.முரளிதரனின் ''கூடைக்குள் தேசம்'' யுத்தத்துக்கும் சமாதானத்துக்குமான முரண் நிலையினை,

''வயிற்றை மிகையாக நிரப்பி
வாந்தி எடுத்தது துப்பாக்கி
சமாதானம் பட்டினி''

என்று பாடுகிறார். இன்று வரை ஈழத்தவரின் வாழ்வின் யதார்த்தத்தில் இவ்வரிகளில் பொருள் தோய்ந்தே உள்ளன.

யுத்தத்தை– அதன் வடுக்களைப் பாடாத கவிஞர் ஈழத்தில் இல்லை எனலாம். தனது கைகூகளை சார்ள்ஸ் இதற்காகவே பயன்படுத்தியுள்ளார். ''ஒவ்வொரு கைக்கூ எழுதும் போதும் சமூக யாதார்த்தமும், நமது போராட்ட சூழ்நிலையும் மனதில் நெருடிக் கொண்டிருந்தன. அவற்றையே இங்கு ஹைகூவாகப் படைத்துள்ளேன்'' என்று தனது முன்னுரையில் அவரே கூறுகிறார்.

''நேற்றைய மாலையில் கை கோர்த்தோம்
காணாமற் போன என் நண்பன்
சவச் சாலையில் சடலம்– செய்தி''

''விட்டிலுக்காய்ப் போரிட்டோம்
இருட்டினில் நம் வாழ்வு தொடர்கிறது
கல்லறைக்குள் கதிரவன்''

''கறுத்த இருட்டில்
நிச்சய தார்த்தம் பலநடக்கும்
ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின''

என்று ஏராளமான போராட்டக்கால பதிவுகளை சார்ள்ஸ் கைகூக்களாக்கியுள்ளார்.

பாலரஞ்சனி சர்மாவின் ''மனசின் பிடிக்குள்'' முதலாவது கைகூவில் வாய்த்துள்ள குறியீட்டுப் பாங்கான படிமம் போராட்ட கால யுத்தம் எமது வாழ்வின் நிதர்சனத்தைப் பாடுகின்றது.

''தினம் ஒரு வீடு கட்டி
இடிந்து விழ ஏமாந்து போய்
அகதியானது சிலந்தி''

என்பது அவரின் அனுபவ வார்த்தைகள்.

யுத்தத்தின் கோரவிளைவுகளை கைகூக்களாக்கும் வாய்ப்பு இ. சு. முரளிதரனுக்கு அதிகம் கிடைத்திருக்கிறது. அவரின் கைகூக்கள் இடப்பெயர்வு, புலம்பெயர்வு, அகதியாதல், குண்டுவீச்சுகள், ஊரடங்கு வேளைகள், புதைகுழிகள் என பலவற்றை பாடுகின்றன.

''எலும்புக் கூடுகளும்
யுத்தத்தில் இடம்பெயரும்
செம்மணி''

ஈழத்து வாழ்வின் வரலாற்றில் செம்மணிப் புதைகுழிகள் அழியாத தடங்களாகி நின்றது ஒருபுறமிருக்க அதனைத் தோண்டுவதும் தூர்ப்பதுமான நடைமுறைகளைச் சாடும் வரிகள் இவை.

''பணத்தாள் எண்ணும் ஓசையில்
ஒப்பாரிகள்
இராணுவ வீரனின் சம்பளம்''

என்ற வரிகளில் யுத்தம் போராடுபவர்களின் பக்கத்தில் மாத்திரமல்ல ஏழ்மையில் வாடும் இராணுவ வீரர்களின் வாழ்விலும் ரணங்களாகி தொடர்வதை சோக இழையோடப் பாடுகிறார். யுத்தம்– ஏழ்மை– தியாகம் இவை மூன்றையும் இணைத்த வரிகள் அவை.

பள்ளியில் வீழ்ந்த குண்டுகளால் ஏற்பட்ட அவலம் என்பதற்கு அப்பால் குண்டு வீசுபவனுக்கும் பொம்மை விளையாடும் குழந்தை உண்டு என்பதை சிந்திக்க வைத்து மனதோரத்தில் ஒரு மெல்லிய கீறலைத் தரும்,

''குண்டுடன் தவறி
பள்ளியில் வீழ்ந்தது
விமானி வாங்கி வைத்த பொம்மை''

என்ற வரிகள்.

யுத்தத்தின் அவலம் இரவு நேரத்து ஏக்கங்கள் நிச்சயமற்ற வாழ்வு என்பவற்றை புலப்படுத்துவதாக,

''நாய் குரைக்கும் இரவு
திடுக்கிடும் தென்னங் குருத்து
விடியலில் தோரணமா?''

என்ற வரிகள் அமைந்தன.

''ஈழத்து மனுநீதி
இறைச்சிக் கடையில்
தாய்ப்பசு''

என்ற வரிகளில் நியாயம் கேட்டுவிட முடியாத வாழ்வினை வாழ்ந்து முடித்துவிட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் புலப்படுகின்றது

''பனங்கூடல் அழித்தோர்
தீப்பொறியால் திகைத்தனர்
சீவிய நுங்கில் சிவன்''

என்ற படிமம் சீவிய நுங்கில் முக்கண் கண்டது மாத்திரமன்றி ஒரு நீண்டகால அழிப்பின் வரலாற்றில் உருத்திர தரிசனத்தைக் கண்ட எம் தேசத்தை படிமமாக்கித் தந்த வரிகளாகி அதுவே நூலின் தலைப்புமாகியுள்ளது.

## நகைச்சுவை நையாண்டி

கைகூக்கள் தரும் இன்ப உணர்வில் நகைச்சுவை, நக்கல் என்பனவும் ஒரு பொது அம்சமாகியுள்ளது. கேலியாயும், கிண்டலாயும் பாடும் வரிகள் பல உள்ளன.

பாலரஞ்சனி சர்மாவின் தொகுதியிலிருந்து,

''ஆடுகள் தினவெடுக்க
கல்லறை ஈந்த
இறந்த மனிதனே, நீ வாழி!''

என்பதிலுள்ள நையாண்டிப் பண்பு அவதானிக்கத்தக்கது.

இ.சு. முரளிதரனின் நுங்கு விழிகள் தொகுதியில் இத்தகைய உணர்வை வெளிப்படுத்தும் அனேக கைகூக்கள் உள்ளன.

''உலகப்படத்தில் புதிய தீவு
கரும்பலகையில்
காக்கையின் எச்சம்''

இது சாதாரண விடயம் தான் எனினும் நினைந்து இன்புறத்தக்க வரிகள்.

''நள்ளிரவு
தேடுதலில் இராணுவம்
தோட்டத்தில் வெருளி''

என்ற வரிகளிலும் சாதாரணமாக இழையோடும் நக்கல்.

''அரசு துறந்த புத்தன்
புன்னகைத்தான்
தேர்தலில் பிக்கு''

இதுவும் பரிபூரண நிர்வாணத்தை நாடும் துறவிகளின் ''பஜரோவில்'' உலவும் ஆசையை கிண்டல் செய்யும் வரிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலரஞ்சனி சர்மாவின் இன்னொரு கைகூவில்,

"உழுது ஓய்ந்து நின்ற
உழவன் மீதும் குருவிகள்
வெருளியாய் நினைந்து"

என்று காஸ்யப் பண்பு தொனித்து வந்துள்ளது.

## முற்கால இலக்கியச் செல்வாக்கு

மூன்று வரிக் கைகூக்களைக் கூட முற்கால இலக்கியங்களில் வரும் பொருள்கள் ஆட்கொள்ளத் தவறவில்லை. கூடைக்குள் தேசம் தொகுதியில் வரும்,

"வண்ணமுடுத்து இத வாசனை பூசி
வீட்டு முற்றத்தில் விபச்சாரிகள்
பூக்கள்"

என்ற வரிகளின் மனப்பதிவுகளிடையே முகிழ்த்து வெளிக்கிளம்புகிறது.

"மஞ்சள் குளித்து முகம் மினுக்கு–நல்ல
மாயப் பொடி பூசி. . ."

என்ற கவிதை வரிகள்.

அத் தொகுதியின் இன்னொரு கைகூவில்,

"பெய்யெனச் சொல்லியும்
பெய்யவில்லை– கற்பில்லைத்தான்
காடுகளுக்கு"

என்ற இயல்பான கட்டு மரங்களுக்கும் மழைக்கும் உள்ள தொடர்பை பாடும் வரிகளில்,

"கொழுனன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்ற திருக்குறள் வரிகள் பிரயோகமாவதைக் காணலாம்.

சார்ள்ஸின் கல்லறைக்குள் கதிரவனில் வரும் ஒரு கைகூவில்,

"ஏழையின் வயிற்றில்
பால் வார்த்துச் செல்லுங்கள்
சேமித்து வைக்கும் சாதனம்"

என்ற சமுதாய அக்கறையுடன் வெளிப்பட்ட வரிகளில் திருவள்ளுவர் அன்று பாடிய,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழீஇ"

என்ற அர்த்தம் மேலெழுந்து வருகின்றது.

இவ்வாறு ஈழத்து கைகூக்கள் தவிர்த்துவிட முடியாத கருத்துச் செறிவுகளுடன் வெளிவந்துள்ளன எனினும் அவற்றின் வடிவம், படிமம் என்பவற்றின் நேர்த்தி தொடர்பான ஒரு பகுப்பாய்வு அவசியமாகின்றது. அவ்வாய்வு ஜப்பானிய கைக்கூக்களுடனான ஒரு ஒப்பாய்வாக விரிவு பெற வேண்டியது. ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை வந்த கைகூக்களில் முதிர்ச்சி நிலை தென்படுகின்றது. சார்ள்ஸின் கைகூக்களின் சொற் பிரயோகத்தில் செட்டின்மை, படிமங்களின் செறிவாக்கல் இன்மை, ஒரு படிமம் தரும் ஒன்றுக்கு மேற்பட்ட அனுபவ அர்த்தம் இன்மை, ஒரு வகை பிரசாரத் தொனிப்பு என்பவற்றால் கைகூ மறுதலிக்கும் அதிகப் பிரசங்கித் தனத்தை கொண்டமைந்து வெளிவந்தது. எனினும் அன்றைய காலகட்டத்தில் அதன் வருகை புதிய ஒரு இலக்கிய வடிவத்தின் அறிமுகத்துக்கு வழிவகுத்தது என்பதில் மறுப்பில்லை. "எனது ஹைகூக்கள் நீண்டகால பரிச்சயத்தினால் ஏற்பட்டதன்று. ஹைகூவின் அர்த்தபுஷ்டி ஆழமும், குறுகிய வடிவமும் என்னை மிகவும் கவர்ந்தமையினாலும், இதனூடாக இலகுவாக கருத்துக்களைக் கூறலாம் என்ற எண்ணப்பாட்டாலுமே இத்தனை ஹைகூக்களை நான் படைத்தேன்" (1990) என்று கூறுகின்றார். எனினும் இத்தகைய ஆரம்ப முயற்சிகளே பின்னர் ஆழமான பரிச்சயம் ஏற்பட அடித்தளமிட்டன.

சு. முரளிதரன் பற்றிக் "கூடைக்குள் தேசம்" முன்னுரையில் அப்போது சாரல் நாடன் கூறும் போது "நிகழ்கால இலக்கிய வளர்ச்சியை உள்வாங்கும் இயல்பில் பிறரை முந்திவிடும் துடிப்பு மிகுந்தவர்" என்று கூறுவதன் பொருத்தப்பாடு இருபது வருடங்கள் கழித்து இன்றும் அவரின் தொகுதியை படிக்கும் போது ஏற்படுகின்றது. சொற்செட்டு ஜப்பானிய கைகூக்களில் வாய்த்தவாறு வாய்க்காத போதும் அவரின் படிமங்களும் கருத்தின் சூட்சுமத்தை அவிழ்த்து அனுபவத்தை தொற்றவைக்கும் வகையும் சிறப்பானவையே. இயற்கையின் அற்புதங்களைப் பாடும் கைகூ வடிவத்தினை சமுதாயத்தின் சாக்கடைக்குள் உள்ளவற்றை பாட வைத்த அவரின் முதல் முயற்சி காலத்தால் நிலைத்தது.

பாலரஞ்சனி சர்மா இயற்கையின் பிடிக்குள் சிக்கி அதன் வசீகரங்கள், வாளிப்புகளைப் படிமங்களாகவும், குறியீடுகளாகவும் ஆக்கி மிகுந்த சொற்செட்டோடு கைகூக்களை ஆக்கியுள்ளார். அவர் தனது தொகுதியின் முன்னுரையில் "இயந்திரமான இந்த தசாப்தத்தில் நினைக்கின்ற கணமே மறந்து விடுகின்ற இயந்திர மனிதர் வாழும் இந்த யுகத்தில் என் நினைவுகள் என்னிலிருந்து நழுவிப் போகுமுன் மனசின் பிடிக்குள் சிறைப்படுத்த எண்ணியபோது இந்த ஹைகூ வடிவம் எனக்குப் பரிச்சயமானது" என்று கூறுவதும் அவரின் ஹைகூக்களில் வெளிப்பட்டு நிற்கின்றது. அவரின் கைகூக்களில் வெளிப்படும் இயற்கை மீதான அவதானிப்புகள் சமூக சிதைவுகள் மீதும் கூடுதலாக ஏற்படும் என்பதற்கு "ஆனால் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளும் கூட கைகூவின் கருப் பொருளாகி இருப்பது வரவேற்கத்தக்கது" என்று அவர் அதே முன்னுரையில் கூறுவதை ஒரு கட்டியங் கூறலாக கருதலாம்.


இ. சு. முரளிதரனின் கைகூக்கள் கால வகையினால் சில முன்னேற்றங்களுடன் வந்துள்ளன என்று கருதுவதற்கு பிரச்சாரம் இன்றி, அட்டகாச ஆர்ப்பாட்டங்களின்றி, இறுக்கமான படிமங்களோடு, உள்ளூறை அனுபவ சூட்சுமங்களோடு மனதின் ஆழம் வரை இனம்புரியாத உணர்வை இறக்கிவிட்டுப் போகும் கைகூக்களாகி வந்துள்ளன. இவரின் "சுண்டக் காய்ச்சிய இறுகிய மொழிநடை" படிமங்களின் வெற்றிக்கு வழிவகுக்கின்றது.

முத்தாய்ப்பாக, முற்றிலும் ஜப்பானிய வாழ்வுக்குச் சொந்தமான கைகூ வடிவத்தை எமது வாழ்நிலை அனுபவங்களைச் சொல்ல பயன்படுத்திய இந்தக் கவிஞர்களின் முயற்சிகளால் ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் கைகூ வடிவம் ஒரு தவிர்த்துவிட முடியாத இடத்தினைப் பிடித்து விட்டது. ஆரம்பகாலத்து கைகூக்கள் இன்று செதுக்கிய சொல்லாட்சி, சூட்சமமாக்கப்பட்ட அனுபவக் குவியல்கள், வடிவத்தில் கச்சிதம், செல்வாக்குகளைப் புறந்தள்ளிய தனித்துவம் என்பவற்றை சரவரப் புரிந்து கொண்டு வடிவம், படிமம், உள்ளடக்கம் என்பவற்றில் நேர்த்தி கண்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

(குறிப்பு : இக்கட்டுரை உதிரிகளாக வந்த ஈழத்து கைகூக்களை முழுவதாக தேடிப் பெற முடியாத நிலையில் தொகுதிகளாக வந்த நான்கு கைகூக்களுள் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் கட்டுரை ஆ–ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முல்லைமணி நினைவுச் சரங்கள்

-குறிஞ்சி நாடன்

முல்லைத்தீவின் முத்தா? சங்கநிதியா? பதுமநிதியா? என்று வியக்கும் வண்ணம் வாழ்வாங்கு வாழ்ந்து, பிறரையும் வாழவைத்து வழிகாட்டிய பெருமகனார். கவிஞராய்– எழுத்தாளராய்– நாடகாசிரியராய்– நடிகராய்– பேச்சாளராய்– ஆசிரியராய்– அதிபராய்– பணிப்பாளராய் பல்வேறு பரிமாணங்களுடன் புகழ் பூத்து விளங்கியவர் முல்லைமணி அவர்கள். இவர் ஓர் நடமாடும் பல்கலைக்கழகம்.

வவுனியா கலை இலக்கிய வட்டம் "இலக்கியச்செல்வர்" என்ற இனிய பட்டத்தை வழங்கியது. கொழும்புத் தமிழ்ச்சங்கம் "தமிழ் அறிஞர்" என்ற கௌரவ பட்டம் கொடுத்தது, பாரதி கலை இலக்கிய வட்டம் "கலைஞர் திலகம்" சான்றிதழை நல்கியது. வடக்குகிழக்கு மாகாண அரசு சாகித்ய விழாவில் கௌரவித்தது. இலங்கை அரசு "கலாபூஷணம்" பட்டத்தை, வழங்கியது. இவரது இலக்கியப் பணியைக் கௌரவித்து "கலாநிதி" பட்டத்தை யாழ் பல்கலைக்கழகம் வழங்கியது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையால் வாயாரப் புகழப்பட்டவர் பேராசான் முல்லைமணியவர்கள்.

யார் இந்த முல்லைமணி? முல்லைத்தீவு முள்ளிய வளையில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். சபாபதி வேலுப்பிள்ளைக்கும் பொன்னம்மாவுக்கும் இரண்டாவது பிள்ளையாக இவர் 3.5.1933ல் பிறந்தார். ஒருவர் பெற வேண்டிய செல்வங்களுள் "அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற" என்பதற்கிணங்கவும், "ஏழு பிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்" என்ற வாக்குக்கு இணங்கவும் பெற்றோருக்கும் தான் பிறந்த குலத்திற்கும் பெருமை சேர்க்கப் பிறந்தவர் முல்லைமணி. இவரது இயற்பெயர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகும். இவரது அருமை மாணாக்கரில் ஒருவராகிய நா. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் வேண்டுகோளின் பேரில் நினைவுச்சரங்கள் என்று அருமையான நூலை தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்துள்ளார். இது இலக்கிய நெஞ்சங்களால் அரும் பெரும் பொக்கிஷமாக பாதுகாக்கப்பட்டு வரும் நூலாகும்.

"சித்திரை மாதம் பிள்ளை பிறந்தால் அக்குடி நாசம்" என்ற முதுமொழியுண்டு. இதனை அறிந்த பெற்றோருக்கு மனக்குறை இருந்தது. மேற்படி முதுமொழியைப் பொய்யாக்கும் வண்ணம் முல்லைமணி அவர்களின் வாழ்க்கை பிற்காலத்தில் அமைந்தது. சித்திரை மாதம் வெயிற் காலம் குழந்தை வெப்பத்தைத் தாங்காது. உடம்பில் சிரங்கு கொப்புளம் போடலாம் என்ற கருத்தால் இந்த முதுமொழி தோன்றி இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. எது எப்படியோ முல்லைமணியாரின் வாழ்க்கை யாவரும் பின்பற்றக்கூடியதாக, ஓர் உதாரண உத்தமபுருஷராக வாழ்ந்துள்ளார் என்பது வெள்ளிடை மலை.

இளமைப் பருவம் வறுமையில் வாடினாலும் பெற்றோரின் வளர்ப்பாலும் கண்காணிப்பாலும் ஒழுக்கமுள்ள பிள்ளையாக முல்லைமணி வளர்ந்தார். தனது ஆரம்பக்கல்வியை, முள்ளிய வளை சைவ வித்தியா விருத்திச்சங்கம் நடத்திய சைவப் பாடசாலையில் S.S.C வகுப்பு வரை படித்தார். யாழ்ப்பாணம் சென்று படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தும் பணம் கட்டிப் படிப்பதற்கான வசதி குடும்பத்தில் இருக்கவில்லை. இவர் படித்த பின்னர் யாழ் திருநெல்வேலியில் பண்டித பரீட்சை வகுப்பில் சேர்ந்து தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் கற்றுக் கொண்டார். மகா வித்துவான் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்களின் வீட்டில் தங்கிப் படித்தார். பால பண்டித கலாசாலை அதிபர் ஞானப்பிரகாசம் அவர்கள் சைவசித்தாந்தம், சமஸ்கிருதம் என்பனவற்றைப் போதித்தார். தொல்காப்பியம், நன்னூல் விருத்தி, யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம் முதலியவற்றைப் படித்தார். தொல் காப்பியத்தை மிகவும் எளிய நடையில் வித்துவான் க. வேந்தனார் கற்பித்தார். பின்னர் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் திரு. முத்தையா ஆசிரியர் உதவியால் ஆங்கில வகுப்பில் சேர்ந்து ஜே.எஸ்.சி. சித்தி பெற்றார். இக்காலம் யாழ் கல்விப்பணிப்பாளராக இருந்து காலஞ்சென்ற இரா. சுந்தரலிங்கம் அவர்களின் நட்பு கிடைத்தது. 1952ல் எஸ். எஸ். சி. ஆங்கில மொழியில் கற்றுத் தேறினார்.

இவரது காலத்தில் 1930ல் வெளிவந்த ஈழகேசரி மட்டுமே வாரப்பத்திரிகையாக வந்தது. பத்திரிகை வாசிக்கும் பழக்கம் பதினைந்தாம் வயதில் ஏற்பட்டது. சாவக்கச்சேரி இந்துக் கல்லூரியில் படிக்கும் போது ஏடன் வைத்திலிங்கம், சின்னத் துரை, சபாரட்ணம் ஆகியோரிடம் ஆங்கிலமும் சபா ஆனந்தர், சு. வேலுப்பிள்ளை ஆகியோரிடம் தமிழும் கற்றுத் தெளிந்தார்.

அப்போதிக்கரியாக பயிற்சி பெறவும், பொது எழுது வினைஞர் பதவி, ஆங்கில ஆசிரியர் பயிற்சி பெறவும் ஏககாலத்தில் அழைப்பு வரவும், அப்போதிக்கரி பயிற்சியை இடைநிறுத்தி மகரகம ஆசிரிய கலாசாலையில் விஞ்ஞான வகுப்பு மாணவராக பயிற்சி பெற்று சித்தியடைந்தார். பின்னர் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் 15. 2. 1957ல் உதவியாசிரியராக கடமை ஏற்றார். முள்ளியவளையில் கடமை ஏற்ற பின்னர் இவரது இலக்கிய முயற்சிகள் தொடங்கின. முள்ளியவளை இயல், இசை நாடக மன்றத் தலைவராக இருந்து பல அரிய சேவைகளைச் செய்தார். "இராஜ ராஜன்" நாடகம் நடத்தி தனது கல்லூரிக்கு நிதி உதவி செய்தார். முள்ளியவளை கலை வளம் பொருந்திய இடமாகும். பொன்னையா, இராசேந்திரம் சுப்பையா போன்றோர் பவளக்கொடி அல்லி அரசாணி, சுபத்திரா, சீதா கல்யாணம், கோவலன் கதை ஆகிய நாடகங்களை நடத்திப் புகழ் பெற்றனர்.

பண்டார வன்னியன் நாடகம், சேற்றில் மலர்ந்த செந்தாமரை போன்ற நாடகங்களை முல்லைமணி எழுதித் தயாரித்தார். கர்ணனின் கடைநாள், வரப்பிரசாதம் இருள் நீங்கியது. வெற்றித் திருநகர், இரவில் முல்லைத் தீவு, கலையரசி, மலர்ந்த வாழ்வு முதலியவற்றையும் இவர் எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரவன்னியன் நாடகம் 1970. அரசிகள் அழுவதில்லை 1977. ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரர் பாமாலை, மல்லிகை வனம், வன்னியர் திலகம், இலக்கியப் பார்வை போன்ற பல நூல்கள் இவரால் எழுதப்பட்டன. ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரர், வன்னி வீரர் 1974. முல்லைத்தீவு மாவட்டத்தில் சைவம், வன்னி மண்ணின் காவலர்கள் 1982. வன்னி நாட்டின் சிறு தெய்வ வழிபாடு 1983. வன்னி வள நாட்டார் வழக்கியல், சுதந்திரப் போராட்ட வீரர் வ. வே. சு. ஐயர் போன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

சமயக் கட்டுரைகளாக வன்னி நாட்டின் காவல் தெய்வம். கடல்நீரில் விளக்கெரியும் அற்புதம், ஆணவத்தோடத்துவம் என்பன பிரசுரமாயின. இலக்கிய வரலாறும் விமர்சனமுமாக மதியும் பிறையும் கட்டுரைத்தொடர் (ஈழமுரசு) வன்னிப் பிரதேச இலக்கியங்கள், வேழம் படுத்த வீராங்கனை(வீரகேசரி) காரைக்கால் அம்மையார் புராணவுரை தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதி (தினகரன்), கலையரசுடன் சில தினங்கள் (தினகரன்) என்பன வெளிவந்தன. இவரது சிறுகதைகள் வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, மலர், அல்லி போன்ற இதழ்களில் இடம் பெற்றன.

இவர் சிறந்த பேச்சாளாராக உருவாவதற்கு களம் அமைத்துக் கொடுத்தது மகரகம ஆசிரிய பயிற்சிக் கல்லூரியே அதிபராக இருந்தவர். பிரபல பேச்சாளரும் அரசியல் வாதியுமான எஸ். எப். டி. சில்வா அவர்கள் கலாசாலையில் தம்பிமுத்து ஷேக்ஸ்பியரைக் கரைத்துக் குடித்தவர். டேவிற்சன் எட்வேட், திரு. தங்கராசா, பண்டிதர் கா. பொ. இரத்தினம் போன்ற அறிவாளிகள் விரிவுரையாளர்களாக இருந்தனர். கலாசாலை மன்றத்தின் மூலம் புகழ் பெற்ற அறிஞர்கள் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டனர். டாக்டர் என். எம். பெரேரோ, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா, வெளிநாட்டு அறிஞர்கள் உயர்ஸ்தானிகர்கள் பலர் சொற்பெருக்காற்றி மாணவரின் அறிவுத்தீபத்தை தூண்டினர். இவ்வாறு உரைகளைக் கேட்ட முல்லைமணி இயற்கையாகவே இருந்த இலக்கிய தாகத்தின் காரணமாக சிறந்த பேச்சாளரானார்.

முள்ளியவளையில் பதினாறாண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்த இவருக்கு மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக நியமனம் கிடைத்தது. முல்லைத்தீவிலிருந்து தமிழ்க் கற்பிக்க விரிவுரையாளரா? என்ற சந்தேகம் மட்டக்களப்பில் எழும்பியது. விபுலானந்தர், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, எப். எக்ஸ். சி. நடராசா, பண்டிதர் வி. சி. கந்தையா, வித்துவான் கமலநாதன், கவிஞர் திமிலைத் துமிலன் போன்ற அறிஞர்கள் வாழ்ந்த இடத்தில் இவரது நியமனம் பலருக்கு அருவருப்பைத் தந்தது. கலாசாலை மற்றும், விபுலானந்தர் விழா போன்றவற்றில் சொற்பொழிவாற்றி தனது பெயரைத் தக்க வைத்துக் கொண்டார் முல்லைமணி. கலாசாலையில் ஐந்து நாட்கள் தமிழ் விழா எடுத்து புலவர் மணி, பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி சண்முகதாஸ், சி.மௌனகுரு, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, வேலாயுதபிள்ளை போன்றோரை அழைத்து விழாவைத் திறம்பட நடத்திக் காட்டி எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெற்றார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விரிவுரையாளராக 1977ல் நியமனம் பெற்ற போதும் பல இடர்களுக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று. யாழ் மண்ணில் எத்தனையோ அறிஞர் பெருமக்கள் இருக்கும் போது முல்லைத்தீவில் இருந்து இறக்குமதியா? என்ற ஏளனப் பார்வை இவர் மீது விழுந்தது. இவருக்கு எதிராக உள்ளும் புறமும் சதிகள் நடைபெற்றன. என்றாலும் தனது அயரா உழைப்பாலும் மதிநுட்பத்தாலும் ஏகோபித்த பாராட்டுதல்களை இவர் பெற்றார்.

முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளராக இருந்த போதும் எதிர்பாராத தொல்லைகளைச் சந்தித்தார். உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்பது போல உடனிருந்தவர்களால் தொல்லைக்குள்ளானார். இவரது திறமையையும் சேவையையும் நன்கறிந்த மேலிடத்தார், இவரை ஊக்குவித்தனர். இடர் காலங்களில் கூட ஆசிரியர் சம்பளம் திகதி தவறாமல் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்.

இலக்கிய உலகில் இவர் புகுந்தமையால், கவிதை, சிறுகதை இலக்கியம், நாவல், நாடகம், கூத்து என்பவற்றில் தொடர்புடைய பலரை நண்பர்களாகக் கொண்டார். சிலரையாவது குறிப்பிடுவது நலமென நினைக்கிறேன். காரை சுந்தரம்பிள்ளை, திமிலைத்துமிலன், எஸ். பொன்னுத்துரை, கே. டானியல், பெனடிக் பாலன், மல்லிகை ஜீவா, செ. யோகநாதன், செம்பியன் செல்வன், மணிவண்ணன், நந்தி, காவலூர் ஜகன் நாதன், ஏ.டி. பொன்னுத்துரை, புலோலியூர் சதாசிவம், இரசிகமணி, கனக செந்திநாதன், சொக்கன், அருள் சுப்பிரமணியம், இரா. நாகலிங்கம், அகளங்கன், வன்னினூர் கவிராயர், நா. சுப்பிரமணியம், முருகையன், வ. அ. இராசரத்தினம், கலாநிதி கைலாசபதி, பண்டிதர் வி. சி. கந்தையா, புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை போன்றோருடன் இன்னும் அதிகமானோர் இவருக்கு நண்பர்களாக இருந்தனர்.

இவர் சிறந்த கவிஞரும் கூட. ஒன்றிரண்டைக் குறிப்பிடுவதானால் நெடுந்தீவில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் கவியரங்கிற்கு தலைமை ஏற்றார். காரை நகரில் நடைபெற்ற பாரதி விழாவில், சொக்கன், காரை சுந்தரம் பிள்ளை, வித்துவான் ஆறுமுகம், அரியாலையூர் ஐயாத்துரை இவர்களோடு கவியரங்கில் கலந்து கொண்டு கவிதை பாடியுள்ளார். இலங்கை வானொலியிலும் இவர் கவிதை பாடியதுண்டு.

ஒட்டுசுட்டான் சிவகுரு மகள் பரமேஸ்வரியை கைப்பிடித்து சுகந்தி, ஜானகி, இளங்குமரன், கபிலன், சுபா ஆகியோர் நன்மக்களான வாய்த்தனர். செல்வமகன் கபிலன் பத்தொன்பதாவது வயதில் அகால மரணமடைந்தது ஆறாத் துயரில் இவரை ஆழ்த்தி விட்டது எனலாம்.

இவரிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய பாடம் நிறையவுண்டு. "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கேற்ப, தமிழ் S.S.C படித்த இவர் 16வது வயதில் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து S.S.C சித்தி பெற்று கலைமாணி சிறப்புப் பட்டத்தையும் 1969ல் பெற்றார். இவரது குணாதிசயங்களில் குறிப்பிடக்கூடியது பொறுமையாகும். யாரையும் கடிந்து கொள்வதில்லை. எப்போதும் இன்முகம் காட்டி வருபவர்.

"இனிய உளவாக இன்னாது கூறல்
கனியிருக்கக் காய் கவர்ந் தற்று"

என்பதை பின்பற்றியவர். தனக்கு இன்னா செய்தார்க்கும் இனியவே செய்து அவர்களை நாணமடையச் செய்தவர். ஒழுக்கம் தவறாத பண்பினர். நேரக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர். படிப்பு பட்டம் எதுவந்தாலும் தலைக்கன மில்லாதவர். பணிவுடைமையும் இன்சொலனாகத் திகழ்ந்ததும் அவருக்கு அணிகலனாக விளங்கின. கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதற்கிணங்க நட்புக்கு இலக்கணமாகவும் இலக்கியமாகவும் திகழ்பவர். அவரது வாழ்க்கைச் சரித்திரம் நமக்கெல்லாம் அழகிய பாடநூலாகும். அவர் உடல் நலத்தோடு பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திப்போமாக!

முல்லைமணியின் நினைவுச் சரங்கள் என்ற இந்தநூல் வாழ்வின் அடிநிலையிலிருந்து முன்னேறி கலாநிதிப் பட்டம் பெற்ற ஓர் அறிஞரின், எழுத்தாளரின் அனுபவங்களை எமக்குத்தருகின்ற பயன்மிக்க சிறந்த நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# முதல் இரவு

கேசவன் அப்படிக் கேட்டதும் அகல்யாவுக்குச் சற்று அதிர்ச்சியாகத் தான் இருந்தது. அரைமணி நேரத்திற்கு முன்னர் நெஞ்சம் நிறைந்த கனவுகளோடும், நினைத்து மகிழ்ந்த நினைவுகளோடும்தான் அகல்யா அந்த அறைக்குள் காலடி எடுத்து வைத்தாள். ஆம் அன்று அவளுக்கு முதலிரவு. கேசவனுக்கும் அகல்யாவுக்கும் அன்று காலையில்தான் திருமணம் நடந்தது. இரு வீட்டாரும் பேசி முடித்த திருமணம்தான். அகல்யா என்னதான் படித்திருந்தாலும் தமிழ்ப் பெண் என்பதால் ஒருவித பயமும், படபடப்பும் எழவே செய்தன. ஆனந்தப் பூரிப்பு இதயத்தில் நிறைந்திருந்தாலும், அது அடங்கியிருந்தது. தாலிகட்டிய கணவன் என்றாலும் தனியறையில் முதல்முதல் அந்த உறவு ஆரம்பமாகும் இரவு என்பதால் அச்சமும், நாணமும் அவளை முற்றாகவே ஆட்கொண்டிருந்தன. கதவைத் தாழிட்டுவிட்டு அவள் கட்டிலில் அமர்ந்ததும் மெல்லப் பேச்சுக்கொடுத்த கேசவன் மிகவும் அன்பாகவே கதைத்தான்.

திருமணத்திற்கு முன்பும் சிலதடவைகள் அகல்யாவின் வீட்டுக்கு கேசவன் வந்திருக்கிறான். அகல்யா அவனுடன் கதைத்திருக்கிறாள். ஆனாலும் கூச்சம் தெளியும் அளவுக்குப் பழகியதில்லை. அத்துடன் அன்றிரவுதான் அவளின் முதலிரவு. அந்தத் தனிமையும், அடுத்து நடக்கவிருக்கும் தனது வாழ்வின் அரங்கேற்றம் பற்றிய எண்ணம் தரும் அச்சமும் பேசுவதற்கு அவளுக்குத் தயக்கத்தைக் கொடுத்தன. அவன் பேசினான். மிகவும் இயல்பாகப் பேசினான். இதமாகப் பேசினான். அவளது காதருகே மெதுவாகப் பேசினான். அவளது மெல்லிய ரோமங்கள் சில்லிட்டு நின்றன. அவளின் கையைப் பிடித்து அந்த மெல்லிய விரல்களைத் தடவினான். சிலிர்த்தது அவளுக்கு உடல்முழுவதும். அப்போதுதான் அவன் சொன்னான். "அகல்யா! இன்றையில் இருந்து எனக்கு நீ. உனக்கு நான். நமக்குள்ள எந்த இரகசியமோ, ஒளிவுமறைவோ இருக்கக்கூடாது. என்ர கடந்த காலத்தில் நடந்ததையெல்லாம் நான் இப்ப உனக்குச் சொல்லப்போறன். அதுபோல நீயும் சொல்லலாம். அப்பதான் நாங்கள் ஒருத்தரையொருத்தர் தெளிவாகப் புரிஞ்சுகொள்ள முடியும். என்ன நான் சொல்றது சரிதானே?"

நனவிலேயே கனவில் மிதந்திருந்த அகல்யா, "...ம்...ஒம்...சரி..." என்றால் மிகவும் மெல்லிய குரலில்.

"என்னைச் சில பெண்கள் விரும்பியிருக்கிறாங்க.. நானும் சில பெண்களோட பழகியிருக்கிறன். அப்படி உன்னை யாராவது விரும்பியிருக்கிறாங்களா..?" கேசவன் கேட்டான்.

"...ம்...எனக்குத் தெரியாது..."

"நீ...நீ...யாரையாவது விரும்பியிருக்கிறியா...?" கேட்கும் போது கேசவனின் குரலில் சற்று கரகரப்பு இருந்தது.

"..ம்..இல்ல. எனக்கு அப்படியெல்லாம் ஒண்டுமில்ல.." மிகவும் நிதானமாகவே பதில் சொன்னாள் அகல்யா.

"இஞ்சபார் அகல்யா!.. நீ என்னைக் காணும்வரைக்கும், உனக்கு என்னைக் கலியாணம் பேசும் வரைக்கும், நீ யாரையுமே விரும்பியிருக்கக்கூடாது என்று எண்றது மடத்தனம். பழகியிருந்தாலோ அல்லது விரும்பியிருந்தாலோ அதில தவறில்ல. அதைப்பற்றியெல்லாம் நான் ஒண்டுமே நினைக்கமாட்டன். நீ தயங்காமச் சொல்லலாம்." கேசவன் சொல்லிக்கொண்டே போனான்.

"நான் ஏ.எல் படிக்கேக்குள்ள என்னோட படிச்ச மேகலா என்றவளைக் காதலிச்சன். அவளும் என்னை விரும்பினாள். கடிதங்கள் எல்லாம் எழுதியிருக்கிறம். பிறகு லண்டன்ல இருந்த அவங்கட அப்பாட்ட குடும்பத்தோட போயிற்றாள். போகேக்குள்ள என்னிட்டச் சொல்லித்தான் போனாள். 'மறக்கமாட்டன், உங்களையும் கெதியா லண்டனுக்கு எடுப்பன்' எண்டெல்லாம் சொன்னாள். ஆனால் போனபிறகு அவள் எனக்கு ஒரு கடிதமும் போடல்ல. அவள்ற விலாசம் எனக்குத் தெரியாது. அதனால நானும் எழுதல்ல. பிறகு அப்பிடியே மறந்து போயிற்று. யூனிவசிற்றியில இன்னுமொரு காதல். ஒண்டாத் திரிஞ்சம்... ஒண்டாப்பழகினம்.. மிச்சம் நெருக்கமாக எல்லாம் பழகியிருக்கிறம். என்ன? மிச்சம் நெருக்கமாக எண்டால் எப்படிப்பட்ட நெருக்கம் எண்ட கேட்கமாட்டியா?"

அகல்யா அவனை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. விரல்களால் படுக்கையை மெல்லக் கீறியவாறு தலைகுனிந்துகொண்டிருந்தாள்.

"சரி நானே சொல்றன்... நாங்க ரெண்டுபோரும் கொழும்பில றூம் எடுத்து ஒண்டாத் தங்கியிருக்கிறம். இப்பிடி நாலைஞ்சு தடவை நடந்திருக்கு. அந்த அளவுக்கு ஒருத்தரை யொருத்தர் நம்பினம். பிறகு அவளுக்கு வேறொருத்தரோட கலியாணம் ஒழுங்காச்சுது. தன்னை மறந்திடச் சொன்னாள்..ம்.. எல்லாம் பழைய கதை. இப்ப நான் புது மனுசன். எண்டைக்கு உன்னை எனக்குக் கலியாணம் பேசினாங்களோ, அண்டையில இருந்து நான் உனக்கு.. உனக்கு மட்டுந்தான். ஏன் அகல்யா ஒண்டுமே பேசாமல் இருக்கிறாய்?"

"..ம்..ஒண்டுமில்ல.. சொல்லுங்க.." கிணற்றுக்குள்ளிருந்து வருவதுபோல அகல்யாவிடமிருந்து வார்த்தைகள் வெளிப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேசவன் தொடர்ந்தான். "என்ன அகல்யா? நான்தான் என்னைப்பற்றி எல்லாத்தையும் சொல்லிற்றேனே. என்னிட்ட உனக்குத்தெரியாம எந்த இரகசியமும் இருக்கக்கூடாது எண்டு நான் நினைக்கிறன். அதனாலதான் இப்ப இதை யெல்லாம் சொன்னனான். இனி என்ர மனதில ஒண்டுமே இல்ல. மனமெல்லாம் நீதான் இருக்கிறாய்.."

அகல்யாவுக்கு என்னவோபோல இருந்தது. சந்தோஷமா, நிம்மதியா, கலக்கமா.. எல்லாம் கலந்த குழப்பமா, எதுவென்று இனம்புரியாததோர் உணர்ச்சி அவளைத் தாக்கியது. அவள் எதுவுமே பேசமுடியாமல் இருந்தாள்.

அவன் மெல்ல அவளை அணைத்தான் அந்த அணைப்பில் எல்லாக் குழப்பங்களும் தகர்ந்தன. இதுவரை கண்டிராத புதுவித சுகமொன்றின் தவிப்பு அவளை ஆக்கிரமித்தது. அவளை அணைத்துக்கொண்டே அவன் கேட்டான்.

"நான் சொன்னமாதிரி... உன்னுடைய வாழ்க்கையில ஏதாவது நடந்திருக்குதா? தயங்காமச் சொல். இண்டைக்கு மட்டுந்தானே இதையெல்லாம் நாம கதைச்சுப் பகிர்ந்துக்கலாம்..."

"...சீ... அப்படியெல்லாம் எதுவுமில்ல..."

"என்ன அகல்யா... இதுவரையில ஒருத்தரோடையுமே நீ பழகல்லையா? ஒருத்தன்கூட உனக்குக் கடிதம் எழுதல்லையா? நீ எவ்வளவு வடிவாயிருக்கிறாய்! யாராவது உன்னிட்டச் சேட்டையாவது விட்டிருப்பாங்களே.... அதுகளத்தான் கேட்கிறன். சொல்ல விருப்பமெண்டாச் சொல்லு... இல்லாட்டி..." அவளது கீழ் உதட்டினைத் தன் சுட்டுவிரலால் வருடியவாறே அவளது வாயைக் கிளற முயன்றான் கேசவன்.

அகல்யாவுக்கு நினைவு சுழன்றது. 'எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? சொல்லித்தான் ஆகவேண்டுமா? இவர் இந்த நேரத்திலே இப்படிக் கேட்பதன் நோக்கம் என்ன? உண்மையிலேயே ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும், பழையவற்றை இன்று பகிர்ந்துகொள்ள வேண்டும், எல்லாவற்றையுமே இன்றோடு மறந்து விடவேண்டும் என்கின்ற நல்ல நோக்கம்தான் காரணமா? அல்லது என்னில் சந்தேகம் கொண்டு இப்படிக் கேட்கிறாரா? இன்று எதையாவது உளறிவிட, அதைவைத்தே வாழ்க்கைமுழுவதும் நம்மை இவர் வாட்டி வதைக்கமாட்டார் என்பது என்ன நிச்சயம்? இப்படித்தான் எனது பள்ளித்தோழி கமலாவின் வாழ்க்கை பாழாகிப் போனது. திருமணத்துக்குப் பிறகு, தன்கணவன் தன்னிடம் மிகவும் பிரியமாயிருந்ததால் அவனுக்கு எதையுமே சொன்னாளாம். வெறும் கடிதப் பரிமாற்றம் என்ற அளவில்தான் அவளது காதல் இருந்தது. அதைத்தான் சொன்னாளாம். அதுவும், தான் திருமணத்திற்கு முன்னர் ஒரு பெண்ணுடன் தகாத உறவு வைத்திருந்ததாக அவன் சொன்னபிறகுதான் சொன்னவளாம். அவள் தன் பழைய காதல் பற்றி சொல்லி முடிந்ததும், வில்லன்போல ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு, தனக்கு ஒரு பெண்ணோடு தொடர்பு இருந்ததாகத் தான் சொன்னதெல்லாம் பொய் என்றும், கமலாவின்கடந்தகால உண்மையை அறிவதற்காகவே அப்படிச்சொல்லி அவளின் வாயைக் கிளறியதாகவும் சொன்னானாம். அன்றியிருந்து எதற்கெடுத்தாலும் அவளின் பழைய காதல்பற்றியே குத்தலும், குதர்க்கமாகக் கதைத்து, அவளது கற்பிலேயே களங்கம் கூறி, தினமும் சண்டையும் சச்சரவும், அடியும் உதையுமாகி இறுதியில் அவளைவிட்டுப் பிரிந்தே போய்விட்டானாம். திருமணமாகி இரண்டு வருடங்களுக்குப்பிறகு பிறந்த குழந்தையைக்கூட அவன் தன்னுடையதல்ல என்று மறுத்தானாம். ஒருவனோடு கடிதத் தொடர்பு மட்டும் இருந்தைக்கூறிய அவளைப் பலரோடு உடலுறவுவைத்திருந்த ஒரு பரத்தையாகவே அவன் குற்றம் சாட்டித் துன்புறுத்தினானாம்.' கமலாவின் வாழ்க்கை கணப் பொழுதில் அகல்யாவின் நெஞ்சுத்திரையிலே படமாய் ஓடியது.

'கேசவன் ஒரு பெண்ணோடு கொழும்பில் தனியறையில் பலதடவைகள் தங்கியதாகத் தன்னிடம் சொன்னதுகூட தன் வாயைக்கிளறுவதற்கான ஒருபொய்யாக இருந்தால்...' அகல்யாவுக்குத் தலை சுற்றியது. இத்தனைக்கும் அவளுக்கு இதுவரையில் எவருடனும் காதல் ஏற்பட்டதில்லை. எந்த ஆணுடனும் நெருக்கமாகப் பழகியதில்லை. ஆனால், யாரும் தன்னை விரும்பியதில்லை என்றோ அல்லது யாரும் தன்னில் சேட்டை விடவில்லை என்றோ பொய் கூறவும் முடியவில்லை. எதைச் சொல்வாள்? எப்படிச் சொல்வாள்?



"பாடசாலையில் படிக்கும் போது விஞ்ஞான ஆய்வுகூடத்தினுள் ஒருநாள் பொருட்களை அடுக்கிக் கொண்டிருக்கும் போது பின்னால் வந்து கட்டிப்பிடித்த ஆசிரியரின் கன்னத்தில் அறைந்ததையும் பின்னர் அவர் யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று கெஞ்சியதையும், அடுத்த மாதமே அவர் வேறு மாவட்டத்திற்கு மாற்றம் பெற்றுச் சென்றதையும் சொல்வதா? ஆசிரியர் ஆய்வுகூடத்தினுள் கட்டிப் பிடித்தது மட்டும் தானா? அதற்கு மேலும் நடந்ததா என்று சந்தேகப்பட்டு விட்டால்?"

"அக்கா பிள்ளைப்பேற்றுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது, அறையில் படித்துக் கொண்டிருந்த தனக்குப்பின்னால் வந்து நின்று அத்தான் தனது மார்பகங்களை வருடியதையும் திடுக்கிட்டு அவரின் பிடியிலிருந்து திமிறியெழுந்து தாங்கொணாத வேதனையால் தான் கேவிக்கேவி அழுததையும் தன்னைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேற்றுவது போல வந்து மீண்டும் தன்னைக் கட்டியணைக்க முயன்றதையும் சொல்வதா? அன்றிலிருந்து அவரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள எடுத்த பிரயத்தனங்களைப் பற்றிச் சொல்வதா? அக்காவின் வாழ்க்கையை நினைத்து யாரிடமும் அதுபற்றிச் சொல்லவும் முடியாமல் நேற்று வரை தினமும் மனதால் நடுங்கிக்கொண்டிருப்பதைச் சொல்வதா? சொன்னால் அவரிடமிருந்து தன்னைக் காப்பாற்றி வருவதை நம்பித் தன்னைப் பாராட்டுவாரா? அதற்கு மாறாக, ஒரே வீட்டில் ஒன்றாக இருந்துகொண்டு என்னால் தப்பிக்க முடியாதென்றும் ஒரு நாளாவது ஏதாவது நடந்திருக்கும் என்றும் சந்தேகப்பட்டு விட்டால்...?

"இப்படித் தானே பொன்னம்மாவின் மகள் சரசாவின் வாழ்க்கைப் பாழானது. சரசாவின் கணவர் சிவசம்பு அண்ணர் மிகவும் நல்லவர். உத்தமமானவர். தனது மனைவியின் தங்கைமாரைத் தனது பிள்ளைகளைப் போல நினைத்தவர். பாசத்துடன் பராமரித்தவர். அவர்களது சின்னவயசிலேயே கதிரேசன் மாமா செத்துப் போனதால் ஒரு தந்தையைப் போல அன்பு காட்டிய சிவசம்பு அண்ணரோடு அவளின் இரண்டு தங்கச்சிகளும் நெருக்கமாகப் பழகினார்கள். ஆனால் சரசாவின் கணவன் சந்திரன் கலியாணம் முடிந்து சிலமாதங்களிலேயே, சரசாவுக்கும் சிவசம்பு அண்ணனுக்கும் இருந்த அந்தத் தூய அன்பில் சந்தேகப்பட்டு, சரசாவை அடித்துத் துன்புறுத்தத் தொடங்கியதும், இன்று வரை சரசா தனது தாயுடனோ அல்லது அக்கா தங்கைமார்களுடனோ கண்ட இடத்தில் கூட கதைக்க முடியாமல் சந்திரனுடன் தனித்து வாழ்ந்து சித்திரரைவதைப்படுவதும் ஊரே அறிந்த கதையல்லவா?"

அகல்யாவோடு கூடப்படித்த கண்ணன் வகுப்பில் நல்ல கெட்டிக்காரன். இப்போது உதவி அரசாங்க அதிபராக இருக்கிறான். அவன் படிக்கும் போதே அகல்யாவை விரும்பினான். பல்கலைக்கழகத்திற்குப் போன பிறகும் அகல்யாவை அவன் மறக்கவில்லை. உதவி அரசாங்க அதிபராகத் தெரிவு செய்யப்பட்டதும் ஒருநாள் அகல்யாவைச் சந்தித்து மாறாத தன் காதலை மீண்டும் உறுதிப்படுத்தினான். அகல்யாவின் சம்மதத்தைக் கேட்டான். அவளது மனம் சம்மதிக்க இணங்கியது. ஆனாலும் அதை வெளிப்படுத்தாமல் தனது பெற்றோரிடம் கேட்கும் படி அகல்யா சொன்னாள். ஆனால் பயிற்சிக்குச் சென்றிருந்த போது மாற்றுக் கலியாணத்திற்கு அவனது பெற்றோர் ஒழுங்கு செய்ய, தங்கைக்காகத் தனது காதலைத் தியாகம் செய்து கொழும்புப் பெண்ணுகுத் தாலி கட்டினான். கண்ணன் தன்னைக் காதலித்த விடயம் இப்போது அகல்யாவின் மனத்திரையில் ஓடியது.

"பள்ளிக் காலத்திலிருந்து பட்டம் பெற்றுப் பதவியை அடையும் வரை தன்னில் பித்துக் கொண்டிருந்த கண்ணனின் கதையைக் கணவனிடம் சொல்லலாமா? வெறும் பழக்கம் மட்டுந்தானா? வேறு பழக்கங்களும் உண்டா? என்று கேட்டு விட்டால்? இல்லை என்று உண்மையைச் சொன்னாலும், அதை உண்மை என்று அவன் நம்புவானா? நம்பாவிட்டால் தன்னை அணுகும் போதெல்லாம் அதையே அவன் நினைத்துக் கொண்டால்?"

"அவருக்கென்ன, அவர் சொல்லிவிட்டார். அவர் சொன்னவைகளைப் பற்றி நான் குறை சொல்ல மாட்டேன். குத்திக்காட்டமாட்டேன் என்ற தைரியம் ஆனால் நான்? என் கடந்த காலம் பற்றி நடந்த உண்மைகளைச் சொல்வதற்குக் கூட எவ்வளவு சங்கடப்பட வேண்டியிருக்கிறது. சங்கடம் மட்டும் என்றால் பரவாயில்லை. சொல்ல நினைக்கும் ஒவ்வொரு சொல்லும் வாழ்க்கையையே பாழாக்கி விடலாம் என்ற நிலையல்லவா இந்தச் சமுதாயத்தில் உள்ளது? கடவுளே! இது என்ன நீதி? அவர் ஆண் எதையும் செய்யலாம் எதையும் சொல்லலாம். ஒரு பெண் எதைச் சொல்வதென்றாலும் அதைப் பயந்து கொண்டே சொல்ல வேண்டிய அவலமான நிலைமை. சொல்லிவிட்டால் எப்போது என்ன நடக்குமோ என்ற வாழ்வு முடியும் வரை ஒவ்வொருகணமும் செத்துப் பிழைக்க வேண்டிய கொடுமை"

இத்தனை விடயங்களும் அகல்யாவின் எண்ணத்தில் எழுந்தன. கணப்பொழுதுச் சிந்தனையில் அகல்யா ஒரு முடிவுக்கு வந்தாள். அழகொழுகத் தலையசைத்து அரைக்கண்ணால் கேசவனைப் பார்த்தாள். "இல்லைங்க, அப்பா மிகவும் கண்டிப்பாக வளர்த்தவர். நாங்க அனாவசியமாக வெளியில எங்கேயும் போறதே இல்ல. நான் முதல்முதல்ல கொஞ்ச நேரம் கதைச்சிருந்ததெண்டால் அது உங்களோட தான். அப்பாவுக்குப் பயத்தில ஒருத்தரும் என்ன விரும்பியது கூட இல்ல." என்று சொன்னவள், தலைநிமிர்ந்து கேசவனைப் பார்த்தாள். அவனின் முகத்தில் ஒளிர்ந்த பிரகாசத்தின் அர்த்தத்தை உணர்ந்து சற்றுத் தைரியத்துடன், "நான் வடிவில்லையோ என்னவோ, அதனால தான் ஒருத்தரும் என்னை விரும்பவில்லையோ தெரியாது" என்றபடி தலைகுனிந்து நிலத்தில் கோலமிடும் தன்வலக்கால் பெருவிரலில் கண்புதைத்தாள். இந்தப்பதில் கேசவனுக்கு மிகவும் மகிழ்ச்சியையும் திருப்தியையும் கொடுத்தது. அவனது திருப்தி அவனது முகத்திலும், அவளை அணைத்த அணைப்பிலும்அகல்யாவுக்குப் புரிந்தது. விளக்கு அணைந்தது. அறையில் இருள் நிறைந்தது. அந்த இருளில், அகல்யாவுக்குத் தன் எதிர்கால வாழ்வின் ஒளி தெரிந்தது.

# புத்தகக் களஞ்சியம்

**(நூல் மதிப்புரை)**

**புத்தகக் களஞ்சியத்தில் நூல் மதிப்புரைக்கு நூல்களை அனுப்புபவர்கள் இரண்டு பிரதிகளைஅனுப்ப வேண்டும்.**

**ஒரு வருடத்திற்குள் வெளிவந்த புத்தகங்கள் மட்டுமே மதிப்புரைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.**

**பத்திரிகைகள், சஞ்சிகைகள் விமர்சனத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலையரசு சொர்ணலிங்கம் : நினைவுக் குறிப்புகள்

நவஜோதி ஜோகரட்னம், லண்டன்

## ஆனைக்கோட்டை பாரம்பரியம்

ஈழத்து நாடக வரலாற்றில் ஆனைக்கோட்டை அழுத்தமான சுவடுகளைப் பதித்திருக்கிறது. அந்தச் சின்னக் கிராமத்தின் வெளிகளில் நடனமும், கூத்தும், இசையும் நர்த்தனமிட்டிருக்கின்றன. மக்கி மண் கலந்து மணக்கும் ஆனைக்கோட்டை, மணல் தரையாகவும் பனங்கூடல்களாகவும் படர்ந்து கிடந்த கீரிமலை போன்ற அந்த அழகிய கிராமங்களை என்னால் மறக்க முடியவில்லை.

ஆனைக்கோட்டை அன்னையின் அரவணைப்பில் இசைக் கலைஞர்களும் போஷிக்கப்பட்டார்கள். அந்த அழகிய கிராமத்தை நினைக்கும்போது நினைவு அடுக்குகளில் நான் சின்ன வயதில் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்த கூத்துக்களும், நாடகங்களும், கச்சேரிகளும் எதிரொலிகளை எழுப்புகின்றன.

அந்தக் கலைப் பாரம்பரியக் குடும்பங்களில் புல்லாங்குழல் வித்துவான் ஜி.எஸ். வசந்தகுலசிங்கம், நடிக கலாமணி எஸ் சிலுவைராஜா, கலைஞர் புளுகு சின்னத்துரை, கலைஞர் தம்பித்துரை, கலைஞர் திரவியம், கலைஞர் எஸ். நவம், ரசிகன் எஸ். லூயிஸ், கலைஞர் எஸ். அகஸ்தியர் போன்ற அந்த ஊரின் நடிப்புக் கலைஞர்கள் என் நினைவில் வட்டமிடுகிறார்கள்.

## ஜி.எஸ். வசந்தகுலசிங்கம்

ஆனையூரின் மக்கி மண்ணும், குறுணிக் கற்களும் என்னைக் கவர்ந்த விளையாட்டுப் பொருள்கள். தென்னையும், மாவும், வாழையும், கமுகும் நிழல் விரித்து, செவ்வரத்தையும் மல்லிகையும் செழித்துக் கோலம் காட்டும் எங்கள் வீட்டிலிருந்து அந்த ஊரின் ஒழுங்கைகளை நோட்டமிடும் எனக்கு, இடது புறமாக திரும்பி நடக்க வரும் ஒழுங்கை முனையில் மல்லிகை மணம் வீசும் ஒரு மூலை வீட்டைக் கண்டதும் எனது சிறு கால்கள் முடங்கி விடும். அந்த கலைக்கோயிலில் இருந்து வேணுகான இசைமேதை ஜி.எஸ். வசந்தகுலசிங்கத்தின் சங்கீத அங்கதங்களும், அந்த மதுரமான வேங்குழலின் ஓசையும் என்னில் தாவியதை உணர்ந்திருக்கிறேன். வித்துவான் வசந்த குலசிங்கத்தின் காதல் மனைவி 'மதுரம்' அந்த ஊர்ப்பெண்களோடு நெடுநேரமாக சல்லாபித்து மகிழ்ந்து புன்னகைத்துக்கொண்டேயிருப்பா. புல்லாங்குழல் வித்துவான் வசந்த குலசிங்கமோ அதிக நேரம் தன் காதல் மனைவியைக் காணாது தவித்துப்போயிடுவார். மல்லிகை படர்ந்த தனது வீட்டின் முற்றத்தில் நின்று மனைவி மதுரத்தை 'மதுரம் எங்கே நிற்கின்றாய்? விரைவாக வந்துவிடு மதுரம்' என்று வேங்குழலால் இசையெழுப்பி அழைக்கும் ஒரு அற்புதமான கலைஞனைக் கண்டிருக்கிறேன். அந்த வேணுகான இசையைக் கேட்டு எட்டு வீடுகள் தள்ளியிருந்தாலும் நாணமும், புன்னகையும் கமழ மதுரம் அன்றி ஓடி வருவதையும் பார்த்திருக்கிறேன். இப்படியெல்லாம் அந்த வீதிகளில் ஒலித்த கான இசைகள் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாண வரலாற்று ஆய்வுகளில் அக்கறை கொண்ட என் தந்தை அகஸ்தியர் சங்கிலி மன்னனைப் பற்றி எனக்குக் கூறியதைக் கேட்டிருக்கிறேன். அந்தச் சங்கிலி மன்னனைக் கண் முன் நிறுத்தி '......மதத்தைக் காட்டி ஆதிக்கம் புரிய வந்த அந்நியர்களே! சதிகாரர்களின் சூழ்ச்சியால் என்னை மண்டியிட வைக்க முடியும் என்று கனவு காணாதீர்கள். சங்கிலியன் சரணாகதி அடைய மாட்டான். பேடிகள் போல் மக்களைக் காட்டிக் கொடுக்கும் கேடியாகவும் மாற மாட்டான். நான் இறந்தாலும். எனது மக்கள் உன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி உன்னை விரட்டியே தீருவார்கள். இது உறுதி' என்று வீராவேசத்தோடு மேடையில் சங்கிலி மன்னனாகிக் கர்ஜித்தவர் எனது பெரிய தந்தை எஸ். சிலுவைராஜா.

இத்தகைய கலைஞர்களுக்கு மத்தியில் வெள்ளை வேட்டியும், கை நீட்டிய வெள்ளைச் சேட்டும், கழுத்தில் ஒரு அழகிய சால்வையும் போட்டுக் கொண்டு ஒரு பொல்லோடு ஒரு பெரியவர் வீர முகத்தோடு வீற்றிருப்பார். இவர்தான் 'பெரியவர் நவீன நாடகத்தின் தந்தை கலையரசு சொர்ணலிங்கம்' என்று என் தந்தை அகஸ்தியர் கூறியது இன்றும் என் காதில் எதிரொலிக்கின்றது.

யாழ்ப்பாணக் கூத்து வடிவங்கள் பற்றி அதாவது வடபாங்கு, தென்பாங்கு, மன்னார் கூத்து வடிவங்கள், மட்டக்களப்புக் கூத்து, காத்தவராயன், மலையக வடிவங்கள், கண்டிய நடனங்கள் என்று தேசிய நாடக வடிவின் கூத்தாட்டங்களின் சிறப்புகளைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருப்பார்கள்.

## ஷேக்ஷ்பியர் நாடகங்கள்

யாழ் சென் யோண்ஸ் கல்லூரியில் கலையரசு சொர்ணலிங்கம் பயின்ற போது நாடக மேடையேற்றங் களுக்கான ஆர்வத்தை பாடசாலைக் காலங்களிலேயே அவர் கொண்டிருக்கிறார். நாடகத்திற்கு அவ்வளவு அங்கீகாரம் கிடைத்திராத ஒரு கால கட்டத்தில் நாடக சங்கம் ஒன்றை நிறுவி தமிழ் நாடகங்களை மேடையேற்றிய முன்னோடி நாடகராக கலையரசு திகழ்ந்தார். ஆங்கில நாடக மேதை ஷேக்ஷ்பியரின் நாடகங்களில் ஈடுபாடு மிகுந்த 'வெனிஸ் நகரத்து வாணிபன்' (Merchant of Venice) என்ற நாடகத்தில் வரும் 'Shyloc' என்ற யூத கதாபாத்திரத்தை அற்புதமாக நடித்துக் காட்டியிருக்கின்றார். சில காலம் பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றிய கலையரசு சொர்ணலிங்கம் பின் அத்தொழிலை கைவிட்டு காப்புறுதித் தொழிலில் இறங்கினார்.

## லோட்டன் கனகரட்ணம்

கலையரசு சொர்ணலிங்கம் வளமான நாடகப் பின்னணியிலே வளர்க்கப்பட்டவர். யாழ்ப்பாணத்தில் புகைப்படக் கலையின் முன்னோடியான லோட்டன் கனகரட்ணத்தின் புதல்வராகத் திகழ்ந்த சொர்ணலிங்கம் தனது நாடக உந்துதலை தன் தந்தையின் வளர்ப்புச் சூழலிலே பெற்றிருக்கின்றார். புகைப்பட நுட்பத்தில் கைதேர்ந்த லோட்டன் கனகரட்ணத்தின் வீட்டில் கூத்தும் நாடகமும் இடம் பெற்றிருக்கின்றன. கூத்துக் கலைஞர்களையும், நாடகக் காட்சிகளையும் தனது தந்தையார் புகைப்படம் பிடித்திருப்பதை கலையரசு சொர்ணலிங்கம் நினைவு கூர்ந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950களில் கலையரசு சொர்ணலிங்கம், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோர் கூத்தாகப் பாடி நடிப்பதை விடுத்து வசனம் பேசி நடிப்பதின் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். வசனம் பேசி நடிப்பதுதான் நவீன நாடகம் என்று வலியுறுத்தியவர்கள் இவர்கள். நவீன நாடகத்தின் தந்தையாக கலையரசு சொர்ணலிங்கம் திகழ்ந்தார்.

இவரது நடிக்கும் திறமையின் முக்கிய குணம் என்னவென்றால் வெவ்வேறு விதமான பலவிதமான பாத்திரங்களை நடித்ததேயாம். இதுவுமன்றி தான் எந்த வேடம் பூண்டாலும் தானே மற்றொருவர் உதவியின்றி தக்கவாறு வேடம் பூணுவதில் மிகவும் நிபுணர் என்று பம்பல் சம்பந்த முதலியார் குறிப்பிட்டிருப்பது கலையரசு சொர்ணலிங்கத்தின் நடிப்பின் உச்சத்தைப் புரிய முடிகிறது.

நாடகத் துறையில் அவர் கொண்டிருந்த வீச்சு நவீன நாடகத் துறையை யாழ்ப்பாணக் கிராமங்களில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களினால் மேற்கொண்டு செல்ல உதவியது. நீண்ட காலமாக யாழ்ப்பாணத்தில் பாடசாலை மட்டத்தில் மேடையேறிய இலக்கிய நாடகங்களும், சரித்திர நாடகங்களும் கலையரசு சொர்ணலிங்கத்தின் பாணியிலேயே அமைந்திருந்தன. மத்தியதர வர்க்கப் பார்வையாளர்களுக்காக கலையரசு சொர்ணலிங்கம் முன்னெடுத்த நவீன நாடகங்கள் ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சியில் தோற்றுவாயாகத் திகழ்ந்தன. கலையரசு சொர்ணலிங்கம் பம்பல் சம்பந்த முதலியார் நாடகங்களைப் பின்பற்றி நவீன நாடகங்களைத் தயாரித்திருந்தார்.

கூனியின் வாய்ச்சப்பல், சிரிப்பு, பேச்சு அத்தனையும் பல கிழவிகளிடமிருந்தது தான் கற்றதாக அவர் கூறியுள்ளார். நடிப்பில் அவர் எவ்வளவு தூரம் கவனமும், முயற்சியும் எடுத்தார் என்பது அதனால் விளங்குகிறது என்று அக்கால கலை ஆர்வலரும், யாழ் வீரசிங்க மண்டபத்தை உருவாக்கியவருமான திரு. பொ. செல்வரத்தினம் கூறியிருப்பது கலையரசு எவ்வளவு தூரம் நடிப்பின் நுட்பங்களை அவதானித்துச் செயற்படுத்தியிருக்கிறார் என்பது புலப்படுகிறது.

புராணக் கதைகளையும், இதிகாசங்களையும், வடமொழி நாடகங்களையும், ஆங்கிலத் தழுவல் நாடகங்களையும் அடிப்படையாகக் கொண்டு கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகங்கள் அமைந்தன. நாடகம் என்பது யாழ்ப்பாணத்தில் அங்கீகரிக்கப்படாத ஒரு கலையாக இருந்த காலத்தில் கிராமிய மட்டத்தில் கலையரசு சொர்ணலிங்கம் மேற்கொண்ட நாடக முயற்சிகள் ஈழத்து நாடக அரங்கியலுக்கு வலுவான தளத்தைத் தீர்மானித்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஈழத்தில் இலக்கிய நாடக அரங்கொன்றினைத் தீர்மானித்ததில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தனியிடம் வகிக்கிறார்.

ஆனைக்கோட்டையில் எமது இல்லத்தில் வாய் சிவக்க பாக்குச் சாப்பிடும் இம் மாபெரும் கலைஞரொடு ஆனையூர் கலைஞர்களும் கலாநிதி பூந்தான் யோசேப்பு அருங்கலைஞர் இன்ஸ்பெக்டர் நாதன் போன்றோர் சேர்ந்து பாடுவதையும் புகைப்படங்கள் எடுத்ததையும் அவதானித்திருக்கிறேன்.

ஆனைக்கோட்டையில் அடைக்கலமாதா கோயிலுக்கு அருகாமையில்தான் கூத்துக்கள் நடைபெறும். பிடாரி கோயிலுக்குப் பக்கத்தில் பெரிய ஆலமரம். அதனோடு சேர்ந்து பெரிய வெளி. அங்கும் அதிகமான கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். கலைஞர் புளுகு சின்னத்துரையின் வீட்டிற்கு அருகாமையிலும் ஒரு சோடாத் தொழிற்சாலையை அண்டி பெரிய வெளி இருந்தது. அங்கும் நாடகங்கள் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதுண்டு.

அப்படியாக நாடகம், கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் வேளைகளில் துண்டுப் பிரசுரங்கள் அடித்து 'லவுட்ஸ்பிக்கர்' போட்டுக் கட்டிய காரில் மானிப்பாய், கொக்குவில், நவாலி போன்ற கிராமங்களுக்கு சென்று அறிவிப்பார்கள். சனங்கள் திரள் திரளாகச் சென்று கலை நிகழ்ச்சிகளை பார்த்து ரசித்துக் கொள்வார்கள். உண்மையில் மறக்க முடியாத மகிழ்வான நாட்கள் அவை.

## கலையரசின் ரசனை

கூத்துக்கள் நடைபெறும்போதெல்லாம் பெரியவர் கலையரசு சொர்ணலிங்கம் தனது உடற் பலவீனங்களையும் கருத்திற் கொள்ளாது சமூகம் அளிப்பார். கூத்து நடைபெறும்போது மேடைக்கு மிக அண்மையில் வசதியான கதிரையில் இருந்து பார்வையிடுவதைக் கண்டிருக்கிறேன்.

எனது பெரிய தந்தை சிலுவைராஜா கண்டியரசன், சங்கிலியன், வலேந்திரியன் போன்ற அரச பாத்திரங்களைத் தான் ஏற்று நடிப்பார். கூத்துப் பாடல்களுக்கிடையில் சில நறுக்கான வசன அமைப்புக்களை எனது தந்தை எழுதிக் கொடுப்பார். வசனக்கோவைகளை எனது தந்தை கலையரசு சொர்ணலிங்கத்தோடு ஆலோசிப்பதையும், சில வேளைகளில் சீனுக்குப் பக்கத்தில் நின்று வசனங்களை நினைவு படுத்தி சொல்லிக் கொடுப்பதையும் பார்த்திருக்கிறேன்.

இளவாலைக் கன்னியர் மடத்தில் நான் கல்வி பயிலுவதற்காக கீரிமலையில் வசித்து வந்த போது கீரிமலைச் சிவன் கோயில் தேர்த்திருவிழாக்கள், நவராத்திரி விழாக்கள் என்று கோயில்வைபவங்கள் கோலாகலமாக நடைபெறுவதுண்டு. பல்வேறு கிராமங்களிலிருந்தும் பாட்டுக் கோஷ்டி, நாடகக் கோஷ்டி என்று வந்து சிறப்பிப்பார்கள். கீரிமலைக் கிராமத்து கலைஞர்களும் கலைநிகழ்ச்சிகளைச் செய்வார்கள். சங்கிலியன் என்ற நாடகத்தை நாட்டுக்கூத்துப் பாணியில்லாமல் நவீன நாடக முறையில் நடித்திருந்தார்கள். நான் அதில் நடனமும் ஆடியிருந்தேன் என்பதை நினைவு கூருகையில் மனம் மகிழ்ச்சி அடைகிறது.

கீரிமலைச் சிவன் கோயில் விழாக் காலங்களில் கலைஞர் வைரமுத்துவின் காத்தவராயன் கூத்து, இலக்கிய நாடகங்கள், சமய நாடகங்கள் என்று நடிப்பார்கள். இவ்விதமான கலை நிகழ்ச்சிகளை மிகுந்த வாஞ்சையோடு எல்லோரும் சென்று பார்ப்பார்கள். நானும் சென்று பார்த்திருக்கிறேன். எனது அம்மம்மா திரேசம்மா எனக்கு எல்லா விளக்கங்களும் தந்து கொண்டிருப்பா.

## வேங்கையின் மைந்தன்

இப்படியான கலை ஆர்வமும் அரச நாடகங்களின் பரிச்சயமும் ஏற்பட்டதன் விளைவோ என்னவோ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நான் பயிற்சி பெறுகின்ற ஆசிரியையாக இருந்தபோது 'ஜீவமணி', அகிலனின் 'வேங்கையின் மைந்தன்' போன்ற நாடகங்களில் அரசியாகவும், இளவரசியாகவும் நடித்து அப்போது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபராக இருந்த திருமதி. ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் பாராட்டையும் பெற்றுக் கொண்டேன்.

1889ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி மானிப்பாயில் பிறந்த பெரியவர் கலையரசு சொர்ணலிங்கத்தை எமது வீட்டில் நேரில் காணும் அருமையான பாக்கியம் பெற்ற நான் இன்றைய தலைமுறையினர் மத்தியில், குறிப்பாகப் புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் மிகவும் பெருமிதம் கொள்கின்றேன்.

அவர் மறைந்த 25வது வருடத்தில் அவரது கலைப்பணிகளை நாம் நினைவு கூருவது 'கலையரசு' என்ற அந்த கலை உச்சகனுக்கு நாம் கொடுக்கும் மிக உயர்ந்த மரியாதை என்று எண்ணுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் எம்மவர்கள்

19ம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை தமிழ் வளர்ச்சிக்கு பங்களிப்பினை வழங்கி வரும் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களைத் திரட்டி அவற்றை நூலுருவாக்கி: தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் ஆவணப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் கலாபூஷணம் புன்னியாமீன் அவர்கள் இதுவரை "இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு" எனும் தலைப்பில் ஒன்பது தொகுதிகளை புத்தகங்களாக வெளியிட்டுள்ளார்.

இதுகாலவரை இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களையும், புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களையும் திரட்டி நூலுருவாக்கி வந்த இவர் இத்தலைப்பைப் பொதுமையாக்கி இலங்கையில் தமிழ் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களும் இடம்பெறக் கூடிய வகையில் "இவர்கள் எம்மவர்கள்" எனும் தலைப்பில் விபரங்களைத் திரட்ட ஆரம்பித்துள்ளார்.

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ், முஸ்லிம் மற்றும் புலம் பெயர்ந்த எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் விரிவான கட்டுரைகளாக இந்த ஆவணப் பதிவுகளில் இடம்பெற்றுள்ளன.

இப்பதிவில் தமிழ்மொழி மூல எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களான தங்கள் விபரங்களும், தங்களுடன் வாழ்ந்து அமரத்துவமடைந்த எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களும் இடம்பெற வேண்டுமென விரும்புமிடத்து இதற்கான உரிய விபரத்திரட்டுப் பதிவுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

P. M. Puniyameen
14, Udatalawinna-Madige,
Udatalawinna- 20802
T/P 081-2497246

## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2007



(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

முதற் பரிசு – ரூபா 5000/–

இரண்டாம் பரிசு – ரூபா 3000/–

மூன்றாம் பரிசு – ரூபா 2000/–

***ஏனைய ஒன்பது சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.***
***பரிசுக் கதைகள் யாவும் தொகுப்பாக வெளியிடப்படும்***

### போட்டிக்கான விதிகள்

சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல் வேண்டும்.
போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி
போன்ற விடயங்களை வேறாக இணைத்தல் வேண்டும்.
தபால் உறையின் இடது பக்க மூலையில் "அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தப் போட்டி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*

**ஞானம் கிளை அலுவலகம் – 3-B, 46வது ஒழுங்கை, கொழும்பு – 06.**

**போட்டி முடிவு திகதி 30.10.2007 வரை பின்போடப்பட்டுள்ளது.**

**முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது**

– ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பிரசாந்தனின்
# 20ம் நூற்றாண்டு ஈழத்தமிழ் கவிதைத் தொகுப்பு மறு வாசிப்புக்குரியது

-ரா. நித்தியானந்தன்

"கவிதைகள் வாசிக்கும் கணங்களெல்லாம் கவிதை பற்றி கவிதைகளே பேசும்", என்ற வாசகம் என் மனதை நெருடிக் கொண்டே இருக்கும். ஆனால் "20ம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ் கவிதைகள்" என்ற ஸ்ரீ பிரசாந்தனின் தொகுப்பு சற்று புறத்தே இருந்து அதன் கவிதைகளைப் பார்க்கத் தூண்டும்.

445 கவிகளின் கவிதைகளை 500 பக்கங்களில் வாசித்து முடிப்பதென்பது பெருமூச்செறியும் விஷயம். எனவே பிரசாந்தனின் கடின முயற்சி எம் பெருமூச்சால் உணரப்படும். தொகுப்பு என்பது தேடல், தொகுத்தல், அச்சிடல், வெளியிடல் என பல பரிமாணங்களை அதன் சாத்தியங்களை மென்று தின்று விடுகிறது. அதே போல அது வாசகனையும் அசரப்பண்ணி விடுகிறது. காலத்தின் அடிப்படையில் இத் தொகுப்பின் கவிதைகளின் இருப்பு இடம்பெற்றுள்ளதா என்ற சந்தேகத்துடன் வாசகத்தை ஆரம்பிக்கின்ற போதும் ஈழத்தின் கவிதை வளர்ச்சிப் போக்கினை அதன் தளங்களை, தத்துவங்களை அறிய உதவுகின்ற தொகுப்பாகவே இது அமைந்துள்ளது.

கவிதை என்பது இன்றும் கூட சொல்ல இயலாத, விபரிக்க இயலாத வரையறையை மீறிச் செல்கின்ற தடங்களைக் கொண்டது. இதுவே கவிதைகளின் பலமாகவும் மறுபுறம் பலவீனமாகவும் ஆகி விடுகிறது. 20ம் நூற்றாண்டின் கவிதை என்பது எல்லா தடங்களிலும் பாரதி காட்டிய உருவம், பொருள் இரண்டிலும் புதிய படிமங்களை ஏற்கத் தொடங்கியதை நாம் தெளிவாகக் காணலாம். பாரதியின் யுகம், மரபை மீறிச் செல்கின்ற ஒரு காலப்பகுதி. புதிய சிந்தனைகளையும், கருத்துக்களையும் கீழைத்தேயங்கள் உள்வாங்கிக் கொண்ட ஒரு காலப்பகுதி. சிந்தனைகளில் முரண்பாடுகள் பலவற்றை உள்வாங்கிக் கொண்டு தத்துவங்கள் மோதல்களில் சயனித்திருந்த ஒரு காலப்பகுதி. மாக்ஸியம் வேகமாக கீழைத்தேயங்களை நோக்கி பரவ, இடையில் இரண்டு மகா யுத்தங்கள் வெறுமனே லௌகீக போர்களாக மட்டுமன்றி தத்துவார்த்த போர்களாக பரிணமித்த ஒரு காலப்பகுதி. இக்காலப்பகுதியில் தான் முதலாளித்துவம் சில விட்டுக் கொடுப்புகளையும் மேற்கொள்ள முன்வந்தது. காந்தியம் என்ற போர்வையில் தாராண்மைவாதம் புதிய வடிவங்களை எடுக்க முற்பட்டது. இவற்றையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு, ஜீரணித்து பிரசவித்தவை தான் 20ம் நூற்றாண்டு நவீன கவிதைகள்.

எனவே, எளிமை, நேரடித்தன்மை, லாவக மொழி, மரபு மீறல் என்பவற்றை இக்கவிதைகள் உள்வாங்க ஆரம்பித்தன. இதன் மூலம் கவிஞன் தன் சமூக பிரக்ஞையை கவிதையில் பிரதிபலித்தான். அனுபவ வெளியீடாக 20ம் நூற்றாண்டு கவிதைகள் தோன்ற ஆரம்பித்தன. 1910 களில் இங்கிலாந்தில் கவிதை தொடர்பான சிந்தனைகள் தோன்ற ஆரம்பித்தன. "இமெஜிஸ்ட்" என்ற இலக்கிய இயக்கத்தினர் கவிதைக்கு புதியதான கவிதை வடிவத்தை எவ்வாறு கொடுக்கலாம் என சிந்தித்தனர். இவர்கள் "லிப்ரே" என்ற பிரஞ்சு கவிதைகளின் சாத்தியங்களை ஆராய்ந்தனர். புதிய பரிசோதனைக் கவிதைகள் தோன்ற ஆரம்பித்தன. சொற்களின் சிக்கனம், சகஜ தன்மை, நேரடி விடயார்த்தம், செம்மை, அமைதி, வேறுபட்ட படிமப் பிரயோகங்கள், புதிய கவிதைகளுக்கு அடிப்படையாகின. அவை புதிய தொனி, நூதன நடை, நவீன படிமப் பிரயோகம், புதிய குறியீடுகள், புதிய சொற்கள் என்பன கவிதைக்கு புதுமை சேர்த்தன. சிக்மன் பிராய்டும், மாக்சும் அகமும் புறமுமாக புதிய கவிதைகளுக்கு அர்த்தம் சேர்த்தனர். பிராய்டின் அக நோக்கு இதுவரை கண்டிராத விரிவும், ஆழமும் கொண்டதாக கவிதைகளில் வெளிப்பட ஆரம்பித்தது. மனிதனின் அக உணர்வு மென்மையானது, சிக்கலானது, கூட்டுக்கலப்பானது. திட்டவட்டமான எண்ணத்துக்குள் அடங்காமல் பிரக்ஞை நிலையில் மன அயர்வைக் கொண்டது. ஆகவே தான் மனதுக்குள் பொழியும் மனப் பதிவுகளை இனம்புரியாத கட்டுக்கடங்காத மனப் போக்கை வெளிப்படுத்துவது தமது கடமை என கவிஞர்கள் எண்ணினர். புறவுலக பாதிப்புகள் அவர்களின் கவிதைகளில் சிறகினை விரித்தன. விஞ்ஞானபூர்வமான பார்வைகள் கவிதைகளுக்குப் புத்துணர்வையேற்றின. மாக்சியம் உருவமல்ல, பொருளே முதன்மை என்ற வகையில் சிந்தனைகளை வளர்த்தது. சமூகக் காரணிகளால் பாதிக்கப்பட்ட எண்ணங்களுக்கு அது ஆசுவாசமானது. புதுக்கவிதைகள் உருவத்துடன் பொருளையும் இயைபாக்கி உள்வாங்க ஆரம்பித்தது. ந.பிச்சமூர்த்தி "கவிதை சொற்களிலில்லை, ஒலிநயத்திலில்லை கருத்துத் திறக்கும் உணர்வு நெகிழ்விலேயே உள்ளது" என்றார். 20ம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் கவிதைகளைப் படிக்கும் நான் அதன் பின்னணியை, கால சூழலை, அரசியல் சித்தாந்தங்களை ஒரு நூற்றாண்டு கால இன அவலங்களை எவ்வாறு உள்ளிழுத்துக் கொண்டன என்பதை உணராது அவற்றை உய்த்து உணர இயலாது.

ஈழ மக்களின் வாழ்க்கையானது அரை நூற்றாண்டு கால பாரபட்சம், இன அடக்க ஒடுக்கு முறைகளுக்கு உட்பட்டது. பெரும்பான்மை சமூகத்தின் பிரதிகள் ஈழத்தின் தமிழ் மக்களின் வாழ்வை, வளர்ச்சியை அடக்கி ஒடுக்கி அதன் பெறுபேற்றை பேரின மக்களை திருப்திப்படுத்த அள்ளி இறைத்த போது ஈழத்தமிழரின் இயல்பான போர்க்குணம் உசும்பியது. அவற்றின் பின்னணியில் பகை புலத்தில் அவற்றால் தாக்கமுற்ற ஏதோ ஒரு தளத்தில் கடந்த நூற்றாண்டின் வரலாற்றை மென்று தின்று ஜீரணமாக்கிக் கொண்டு ஈழத்துக் கவிதைகள் தோன்றின. ஈழத்தின் தமிழ்க்கவிதைகளை பேச வரும் போது வரலாற்று தடங்கள் கோட்பாட்டுத் தளங்களை மீறியும், தவிர்த்தும், மறந்தும் கவிதை பற்றி பேச இயலாது. இன்று ஈழத்தின் கவிதைகளில் போர், புலம் பெயர் காதல் அதன் அகமும் புறமுமாக இலக்கிய வரையறைகளை உசாவிக் கொண்டிருக்கின்றன.

இத்தொகுப்பின் மிகப் பெருங்குறை ஒரு யுகத்தின் கவிதைகள் அகர வரிசையில் தொகுக்கப்பட்டமை. கவிதையை வாசிக்கின்ற வாசகனை வேகமாக கவிதைத் தளத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவிடாமல் இந்த அகர வரிசை தடுக்கிறது. இக்கவிதைகள் கால வரிசையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். இதைவிட அக்கால அரசியல், பொருளாதார தளங்களின் பின்னணியில் அதாவது இலங்கையின் சீர்த்திருத்த காலம், தேசிய எழுச்சி மாக்சியம், கலாசார மாற்றம், தமிழர் தேசிய எழுச்சி, தமிழ் போராளிகளின் பிரவாகம் என்ற அடிப்படையில் கவிதைகள் வகையீடு செய்யப்பட்டிருக் குமானால் வாசகன் கவிதைக்குள் நுழைவது எளிமையாக்கப் பட்டிருக்கும். இத்தன்மை இன்மை இக் கவிதைத் தொகுப்பில் வெறுமை தன்மையை எமக்கு உணர்த்துகிறது.

இக்கவிதைகளை முழுமையாக அலசுவதென்பது யதார்த்தத்திற்கு புறம்பானது. அலசாமல் விடுவதும் கூட சிலருக்குச் செய்கின்ற துரோகமாகவும் படலாம். எனவே பின்னொரு சந்தர்ப்பத்தில் ஈழத்துக் கவிதைகள் பற்றி விரிவாக ஆராய சந்தர்ப்பம் கிடைக்கும் போது முழுமையான ஆய்வொன்றை மேற் கொள்ளலாம் என எண்ணுகிறேன்.

இக்கவிதைத் தொகுப்பில் அகிலன், கலா, சாருமதி புஸ்பராஜன், ரிஸ்மி, திருமாவளவன், சு. வில்வரத்தினம், நீலவாணன், முல்லைஅமுதன் என்போரின் கவிதைகள் பேசத்தக்கவையாக அமைந்துள்ளன. அகிலனை வெங்கட் சாமிநாதன் சிலாகித்து பேசியது என் நினைவுக்கு வருகிறது. அவரின் கவிதையில் நம்பிக்கை வேர் இன்னும் இருக்கிறது. அது துளிர்க்கும் ஒருநாள் என்று அவர் நம்புகிறார். இக்கவிதையை வாசிக்கின்ற பொழுது 'மாயோவ்ஸ்கி' எழுதிய 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு'' என்று நான் சிறுவனாயிருக்கும் போது கற்ற கவிதை என் ஞாபகத்துக்கு வருகிறது. ஆனால் ஓராயிரமாண்டுகள் ஓய்ந்து கிடந்த பின் ஒருநாள் சூரியன் எழுந்து புலர்வதாம் என்ற வரிகள் நூற்றாண்டு கால போராட்டத்தின் விளைவினை காண ஆயிரம் ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமே என்று மனம் அயர்வு கொள்கிறது. சோலைக்கிளியின் கவிதைகளின் குறியீடுகள் எப்போதுமே எமக்கு ஆச்சரியக்குறி தான். இவை மிகைத்தன்மை கொண்டவையோ என்று எண்ணி முடிப்பதற்குள் அவை நினைவில் நின்று எம்மை உசுப்புகின்றது. தன் சூழலை, அதன் தன்மைகளை தனது கவிதைகளுக்குள் உள்வாங்கிக் கொண்டு எம்மை அசரப் பண்ணுவதில் இன்னும் சளைக்காமல் இவர் இருக்கின்றார். பொருளுக்கும் வடிவத்துக்கும் இடையில் ஒரு விடயத்தரத்தை எப்போதும் இவர் பேணிக் கொள்வார். ''நான் சந்தோஷமாக இருந்த அன்று'' என்ற கவிதை என்னைக் கவ்விப் பிடித்தது. தமிழ்நாட்டின் சிறந்த கவிதைகள் தமது குறியீட்டு முயற்சிகளால் சிறந்து முன்னிற்கின்றன.

1980 களின் பின் ஈழப் போரின் கொடுமைகள், சுய அழிப்பு, போர் எதிர்ப்பு என்ற ஒரே மாதிரிகளில் கவிதை எழுத ஆரம்பித்தவர் அஸ்வகோஸ். இவர் கவிதையின் இறுதியில் நம்பிக்கை துளிர்விட்டு வாசகனையும் ஆசுவாசப்படுத்தும். சிறந்த கவிஞர் என்ற கணிப்பு இவர் மீது எப்போதும் இருக்கிறது. ஆனால் இத்தொகுப்பில் இருள் என்ற கவிதை அந்நம்பிக்கையை பிய்த்து சடலமாகக் கிடக்கிறது.

கவிஞர் சித்தாந்தன், ஈழத்துக் கவிகளில் பேசுவதற்குரியவர். இவருடைய கவிதைகளை புரிந்து கொள்வதற்கு வாசிப்புப் பயிற்சி அவசியம் என்கிறார் சு. வில்வரத்தினம். ஒரு கவிதை வாசிக்க இடர்படுவதற்கு அதை எழுதுகின்றவனின் பங்கு கணிசமானது. வாசிப்புக்கு உகப்பில்லாத கவிதை என்றால் அதை எழுதுகின்ற கவிஞன் மட்டுமே தம் சுய திருப்திக்காக வாசித்துக் கொள்ளட்டும். இவரின் அநேகமான கவிதைகள் 80களின் பின் வந்திருக்க வேண்டும். இவர் கவிதை எழுதும் இடங்கள் வலிகள் நிறைந்தவைகள். ஆனால் அவ்வலிகளை ஏனையவர்க்கு உணர்விக்கும் கவிதையாக இக்கவிதை அமையவில்லை என்பது உண்மை. ஆனால் பிரச்சனைகளுக்குத் தீர்வு சொல்லத் துடிக்கும் நம்பிக்கை இவரிடம் காணப்படுகிறது. அதுவே இவரது கவிதைகளின் பலமாகவும் கொள்ளலாம்.

இசைக்குள் அடங்காத பாடல்கள்– கவிதைத் தொகுதி மூலம் முல்லை அமுதனின் முழுதான கவிதை பரிமாணத்தை தெரிந்து கொண்டவன் நான். 1985க்குப் பின் கவிதை எழுதிய கவிஞராகத் தெரிகிறார். தேசிய விடுதலைப் போராட்டம் இவரின் கவிதைகளின் நம்பிக்கை நட்சத்திரம். அந்த தொகுதியின் மூலம் இவர் ஒரு சிறந்த கவி என்பதை காட்டி நிற்கின்றார். இவர் எந்த தளம் சார்ந்து கவிதை எழுதுகிறார் என்பது இங்கு கேள்வி அல்ல. தனது சமூகப் பார்வைக்கு கவிதையை களமாகக் கொள்வதே இவரின் வெற்றி. ''நேசத்தின் வேர்கள்'' கவிதை எந்தக் கால அளவில் எழுதப்பட்டது என்பது தெரியவில்லை. ஆனால் இவரின் நிலைப்பாட்டில் சற்று மாற்றம் ஏற்பட்டுள்ளதோ? என்று எண்ணத் தோன்றும் எனினும் ''முல்லை அமுதனின் மனதில் உள்ள சமூகநீதிக்கான உணர்வு தேசிய விடுதலைப் போராட்டத்தின் பிரதான முரண்பாட்டுக்கு வெளியிலும் கவிதைத் தளத்தில் தேடலை நடத்த வேண்டும் என்கின்றார் சிவசேகரம். இது ஏனென்று புரியவில்லை. சரி எத்தளத்தில் இனி அவர் தேட வேண்டுமென்று கூறியிருந்தால் கொஞ்சம் புரிந்திருக்கும்.

இக்கவிதைத் தொகுப்பில் புஸ்பராஜன், ரிஸ்மி, சேரன், சு. வில்வரத்தினம், கல்லூரான், முருகையன், மகாகவி, தர்மு சிவராம், குறிஞ்சி தென்னவன், காசி ஆனந்தன் போன்ற ஈழத்து சிறந்த கவிஞர்களின் கவிதைகளைக் காணக் கிடைப்பது சிறப்பே. சு. வில்வரத்தினம் ஈழத்து நவீன கவிதைகளில் முன்னோடி என்று கூறுவது பொருத்தமானது. பொதுவாக அவரது கவிதைகள் காலத்தோடு ஒன்றி எழுதப்பட்டிருக்கும். போர் காலக் காயங்களில் வெளி அரும்பிகளாக எம்மை அவை உறுத்தும். ஆனால் சுயமான அமைதியோடு தன் உள்ளரும்பும் வெம்மையை கவிதைப் படுத்தி எம் மனதில் தடம் பதித்த ஒருவராக அவர் திகழ்ந்தார். இப்பண்புகளை இக்கவிதைத் தொகுப்பின் இவரது மூன்று கவிதைகள் மூலம் காணலாம்.

நட்சத்திர செவ்விந்தியனின் கவிதைகள் எப்போதும் படிம உரைகளே. இத்தொகுதியில் வரும் பெரும்பாலான கவிதைகள் உரைச்சித்திரங்களாக, வசன கவிதைகளாக காணப்படுகின்றன. செவ்விந்தியனின் கவிதை உரைச் சித்திரங்களானாலும் கவிதையின் முடிவு ஒரு கவிதையைத் தந்திருக்கும். வரலாற்றுக் கவிதையாக படைக்க வேண்டுமென்ற உத்வேகம் செவ்விந்தியனிடம் காணப்படும். சு. விஸ்வரத்தினம் இவரைப்பற்றி சொல்வதைப் போல அழகிய உணர்வுகளை மெல்ல நோகாமல் எடுத்துத் தடவி நகரும் வரிகள் அவைகள். ஆனால் அவர் தொடர்ந்து இப்படியும் சொல்வார். ''இவரது கவிதைகள் இப்படி ஓடி நகருமாயின் குறித்த பாணிக்குள்ளே தேங்கி விடும் ஆபத்து இதற்குண்டு''

ஈழத்து பெண் கவிஞர்களின் 80க்குப் பின்னர் சங்கரி, செல்வி, பெண்ணியா, மைதிலி, வானதி, ஔவை, ஊர்வசி, கலா என்போர் குறிப்பிட்டுப் பேசத் தக்கவர்கள். ஔவையின் பல கவிதைகளை நான் வாசித்திருக்கிறேன். தமிழர் வாழ்வின் மனச்சாட்சியின் பிரதிபலிப்புகள் அவை. ''எதை நினைத்தழுவதும் சாத்தியமில்லை'' என்ற கவிதை இங்குள்ளது. அவல ஓய்வுக்குப் பின்னே நம்பிக்கைத் துளிர் இவரது கவிதையின் புள்ளியாகும். இவரது ஏனைய கவிதைகளிலும் இம்முற்றுப்புள்ளிகளைக் காணலாம். ஆனால், இந்நூலுக்கு வெளியேயுள்ள கவிதைகளைப் போல இக்கவிதை சொல்லும் முறை கை வரப் பெறவில்லை. ''கோணேஸ்வரிகள்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கவிதை தமிழ் நாட்டின் மாலதி மைத்ரேயி, வங்கக்கவி தஸ்லிமா நஸ்ரின் போன்றோரின் முகங்களைத் தவிர்க்க முடியாமல் நம்முன் கொண்டு வருகிறது. இக்கவிஞர் கலா பாழ்பட்ட பெண்ணினத்துக்காக இயல்பான கோபத்தோடு மடை திறக்கின்றார். இக்கவிதையின் வரிகள் வாசகனின் மனதை இடிக்கும், மனச்சாட்சியை உறுத்தும். பெண்கள் பலாத்காரம் செய்யப்படுகின்ற போது அவர்கள் அப்பாவிகளாகின்றார்கள். அதனைத் தட்டிக் கேட்க இயலாத ஆண்கள் கோழைகள் ஆகின்றார்கள். பெண்களை துவசம் செய்யும் இழி மகனுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம் வந்து விடப் போகிறது.

பெண் கவிகளில் சிறந்த கவிஞர்கள் எனக் குறிப்படக் கூடிய பெண்ணியா, அசாந்தி, கஸ்தூரி, பாரதி, திவ்யா, அன்னலெட்சுமி ராஜதுரை எனப் பல கவிஞர்களின் கவிதைகள் இத்தொகுப்பில் விடுபட்டு போயுள்ளமை ஒரு குறையே.

20ம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகளைப் பற்றி ஒரு மாதிரிக்காக இவற்றை எடுத்து நோக்கினாலும் இதில் இன்னும் பேசத்தக்க பல கவிஞர்களைப் பற்றி பேச முடியாத கையறு நிலையை காலமும் இடமும் இங்கு தந்துவிட்டுப் போயிருக்கிறது.

கவிதையை இனங்காட்டுவது படிமம் மட்டுமல்ல, மொழியைபயன்படுத்துவதிலும், முறைபடுத்துவதிலும், புதிய புதிய உத்திகளை கையாள்வதிலும் தான் கவிதை தன்னை இனங்காட்டிக் கொள்கிறது. கவிதை என்பது அப்படி ஒன்றும் நினைத்த மாத்திரத்தில் எழுதிவிடுவதல்ல. நீண்ட நிகழ்வின் படிமங்கள் மன அசைவில் தவழ்ந்து; மொழியினூடே நடந்து; எப்போதோ ஒரு முறை அது வெளிவருகிறது. மனித பிறப்பு போல அது சில விநாடிகளில் இடம்பெறலாம். ஆனால் அதன் விதைப்பும், வளர்ப்பும் எங்கோ எப்போதோ கவிஞனின் மனதில் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது. குறியீடுகளும் ஊக்கிகளும் கவிதையை சுற்றி மையம் கொள்கின்றன. கவிதையின் மையத்தை வளர்த்து செல்வது இவையே. தொனி, உருவம் என்பன இவற்றால் உரு பெறுகின்றன. அந்த வகையில் ஈழத்து கவிஞர்கள் பொதுவாக தம்மை சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டும். ஈழத்துக்கவிதைகளுக்கு ஆழமான பொருளுண்டு. ஆனால் ''கவிதை பின்னல்'' இல்லை. எளிய உதாரணம் ஒன்றின் மூலம் இதனை விளக்கலாமென நினைக்கிறேன். சினிமா கலையில் பார்வையாளனையும் படத்தையும் பிணிக்கும் பண்புகள் எவை? கதையும், சண்டைக்காட்சிகளும், காதல் லீலை பாடல்களும் மட்டுமல்ல; அல்லது அங்குள்ள படிமம் மட்டுமல்ல; புகைப்படக்கலை நுட்பம், இசைக்கலைநுட்பம், காட்சி மாற்றக்கலை நுட்பம், ஒலி, ஒளிக்கலை நுட்பங்கள் இவைகள் நினைக்க முடியாத, எல்லை இல்லாத தூரத்தில் உள்ள ஒன்றை 50 மீற்றரில் வைத்துப் பார்க்கும் தொழில்நுட்பம். இதில் தோன்றும் திகில், பிரேமை, மனஅதிர்வு, வியப்பு, இழிவரல், நகை பார்வையாளனுக்கும் படத்துக்குமிடையிலான பிணைப்புக்கு கட்டியம் கூறுகின்றது. எனவே சினிமா கலை போல கவிதையின் நுட்பங்களாகிய தொனி நுட்பம், படிமநுட்பம், மொழிநுட்பம், குறியீட்டு நுட்பங்கள் மொழி, இசை, அசை நிலை நுட்பங்கள் கவிதைக்கு நயம் சேர்க்கின்றன. அவ்வாறான நயம் சேர்க்கும் பண்புகள் இத்தொகுப்பு கவிதைகளில் குறைநிலையாகவே உள்ளன. அகிலனின் கவிதைகளுக்கு அறிமுகம் வழங்கிய வெங்கட் சாமிநாதன் ஈழத்துக் கவிதைகள் பற்றி இப்படிச் சொல்வார். ''பார்க்கக் கிடைத்த கவிதைகளையும், அவற்றைப்பற்றி எழுதும் அபிப்பிராயங்களையும் பார்த்த பிறகு எல்லாமே படித்தறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்றே தோன்றுகின்றது. பாராட்டப்படுபவை பெரும்பாலும் உயிர்த்துடிப்பும், அனுபவச் செறிவும், தாக்கமும் தராத வெறும் வெற்று வரிகள், நீண்ட நீண்ட வரிகள் என்பதும் அவற்றில் ஒரு இயக்கமோ அதைப்போலில்லாத வெற்று வார்த்தை சேர்கைகள் தான் என்பது பொதுவாக இவற்றில் காணும் குணங்கள் என்று சொல்வதில் அதிகம் தவறிராது என்று நினைக்கின்றேன்''. இவரின் கூற்றை முழுதாக ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் ஈழத்து கவிஞர்கள் தம் கவிதையில் வாசகத்தையும், வாசகனையும் பிணைக்கும் பண்பு எது என்று அறிந்து வைத்திருக்கவும் இல்லை. அதற்கான மொழி நுட்பத்தை பயன்படுத்தவுமில்லை.

நான் குறையெனக் காணும் மொழிக் கூறு ''ஈழத்தவரின் தமிழ்க் கவிதைகளை அவற்றின் உள்ளடக்கத்துக்கும் மேலாக வேறுபடுத்திக் காட்டக் கூடியது'' என்று சி. சிவசேகரம் போன்றோர் சுயபுகழ்ச்சி கொள்ளலாம். ஆனால் மொழிநுட்பத்தின் காரணமாக ஈழத்தின் அனேகமாக கவிதைகள் கைவரப் பெறவில்லை என்பது தான் எனது கணிப்பு. மொழி கூறுகளை பொறுத்தவரை அது தமிழ் பேசும் உலகத்துக்கு பொதுவானவை. என்னதான் நாம் கதைத்தாலும் அவை தமிழக இலக்கியங்களில் இருந்து வரலாறு காலம் முதல் எம்மிடம் வந்தவை, ''தமிழகத்தின் மயக்கமான கவிதை போக்குகளை பற்றி மயக்கங்கள் நமக்கு உள்ளன'' என்று தமிழக கவிதைகளை குறைத்து பேசுவது எமது கவிதை வளர்ச்சியை மேம்படுத்தப் போவதில்லை. ஏன் எனில் கவிதை பற்றி கவிதைகளே இனி பேசும்.

இறுதியாக ஈழத்தின் சிறுகதை துறை வளர்ந்த அளவுக்கு தமிழ் கவிதைத்துறை வளரவில்லை என்பது கணிப்பாக இருந்த போதும் ஸ்ரீ பிரசாந்தனின் 20ம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைள் என்ற தொகுப்பில் ''இத்தொகுப்பின் கவிஞர்களின் தரமான கவிதைகள் சரியாக இடம் பெறவில்லை என்று நான் எண்ணுகிறேன். ஈழத்து கவிதைகள் பற்றி பரந்து பட்ட வாசிப்பை கொண்டிருப்பவன் என்ற அடிப்படையில் கே. முனாஸ், பன்னீர் செல்வம், பெண்ணியா, அஸாந்தி, த. உமாகரன், மல்லிகை சி. குமார், ஏ. எல். றஸாப்தீன், திவ்யா, த. தயாபரன், ஆனந்தன், தமிழோவியன், சி. வி. வேலுப்பிள்ளை, இரா. சடகோபன், இஸ்மாலிகா, இமையவன் என்ற நல்ல கவிகளின் படைப்புகள் இத் தொகுப்பில் தவிர்க்கப் பட்டிருக்கின்றமை பெருங்குறையாகும். சக்தீ ஆ. பாலையா, தமிழோவியன் கவிதைகளைப் பற்றி பிரசாந்தன் தனது பின்னிணைப்பில் சொல்லியிருந்தாலும் அவர்களின் கவிதைகள் ஏன் இத் தொகுப்பில் இடம்பெறவில்லை என்று தெரியவில்லை. எஸ். பொ கூறுவது இன்றைய கவிதைகளின் குறைகளுக்குக் காரணம் கவிதைகள் பற்றி பல்பக்க வாசிப்பின்மை, பிறமொழி கவிதைகள் தெரியாமை, கூடவே சிறந்த விமர்சனமின்மை. இத்தோடு மேலும் ஒன்றை சொல்ல வேண்டும். ஈழத்தமிழ் கவிதைகள் பற்றி பூரணமான ஆழ, அகன்ற ஆய்வுகள் இதுவரை வெளிவரவில்லை. வெறும் பட்டியல் தரும் விபரங்களாகவே சில பத்திரிகைக் குறிப்புகள் வெளிவந்துள்ளன. பூரணமான ஆய்வு மேற்கொள்ளப்படும் போது நான் கூறும் உண்மைகள் வெளிவரும். முடிவாக ஸ்ரீ பிரசாந்தனின் முயற்சி பெரிது. ஆனால் மறு வாசிப்புக்குரியது. எனவே மீண்டும் ஒரு தொகுப்பினை வழங்கினால் இக்குறைகள் நீங்கலாம் என நம்பலாம். மகாகவியின் வாசகத்துடன் இவ் எதிர்முகத்தை முடிக்கலாம் என எண்ணுகின்றேன்.

''வசனம் வேறு. கவிதை வேறு. வசனம் கை வந்தமை கவிதை எழுத உதவாது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர் காணல் (4)



செங்கை ஆழியான்

*சந்திப்பு : தி. ஞானசேகரன்*

ஈழத்தின் நன்கு அறியப்பட்ட மூத்த தலைமுறைப் படைப்பாளி செங்கை ஆழியான். ஈழத்து எழுத்தாளர்களில் இவரே அதிகமாக எழுதியவர். நாற்பதுக்கு மேற்பட்ட நாவல்களையும் நூற்றுக்கும் அதிகமான சிறுகதைகளையும் இவர் படைத்திருக்கிறார். இவரது எட்டு நூல்கள் இலங்கை அரசின் சாகித்தியப் பரிசினைப் பெற்றுள்ளன. ஈழத்து எழுத்தாளர்களில் அதிக வாசக கூட்டத்தைக் கொண்டவரும் இவரே. மறுமலர்ச்சிக்கதைகள், ஈழகேசரிச் சிறுகதைகள், சுதந்திரன் சிறுகதைகள் மல்லிகைச் சிறுகதைகள் போன்ற பல முக்கியமான தொகுப்புக்களை வெளிக்கொணர்ந்தவர். ஈழத்துச் சிறுகதை வரலாற்றினை எழுதியவர். ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு இவரது உழைப்பும் பங்களிப்பும் அபாரமானது. அற்புதமானது இவரது படைப்பு முயற்சிகள், ஆய்வு முயற்சிகள், தொகுப்பு முயற்சிகள் யாவும் ஈழத்து இலக்கியத்திற்கு செழுமை சேர்ப்பவை.

**'இலங்கையில் தமிழ் கிடையாது. தமிழ்கள் தான் உண்டு' என்று அண்மையில் 'பெருவெளி' சஞ்சிகையின் நேர்காணலில் தமிழக அ. மார்க்ஸ் திருவாய் மொழிந்திருக்கிறாரே? இது பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

அவர் கருத்து அர்த்தமில்லாத வழமையான கருத்துத் தான். டானியலையும் ஷோபா சக்தியையும் சிவத்தம்பியையும் கைலாசபதியையும் மட்டும் ஈழத்தில் அறிந்த அவர் என்ன கூறுகிறார் என்பது புரியவில்லை. நுணுகிப்பார்க்கில் ஈழத்து இலக்கியம் என்று ஒன்று இல்லையாம். ஈழத்துத் தமிழ் இலக்கியங்கள் என்றுள்ளனவாம். மலையக இலக்கியம், தீவக இலக்கியம் எனத்தமிழ் வேறுபடுகின்றதாம். மேலும் இலங்கை எழுத்துக்களில் (பானியலைப் படித்து விட்டு) சிந்தனையாளர்களிடமும், எழுத்தாளர்களிடமும் சைவக் கருத்தியல்புகள் மிகுந்திருப்பதாகக் கூறியுள்ளார். இலங்கை எழுத்தாளர்களையும் எழுத்துக்களையும் மட்டமாகக் கருதுகின்ற மனப்பான்மை தமிழக எழுத்தாளர்களிடம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. என்றோ ஏற்பட்டுவிட்டது. யாரோ ஒரு பைத்தியக்காரன், இந்தியாவைத் தாய் நாடு என்றும் இலங்கையைச் சேய்நாடென்றும் கூறிவைத்தான். அதனால் வந்த இழக்காரம். தமிழக எழுத்தாளர்களை அழைத்து, அவர்களது இலக்கியத்தரம் அறியாமல், இந்திரர்கள் என்றும் சந்திரர்கள் என்றும் வார்த்தைகளால் புகழ்ந்தேற்றி பாதபூசை செய்ததால் வந்த வினை. ஈழத்திலக்கியம் பற்றி அடிக்கடி திருவாய் மலர்ந்து விடுகிறார்கள். 1967களில் கங்கை என்ற பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய பகீரதன் என்பார் இலங்கைக்கு வந்தார். வரதரின் சிறுகதைத் தொகுதியான கயமை மயக்கம், நாவற்குழியூர் நடராஜன் கவிதைத் தொகுதியான சிலம்பொலி ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டார். பகீரதன் வெளியீட்டுவிழாவில் 'இலங்கை எழுத்தாளர்கள் தமிழ்நாட்டுச் சிறுகதை எழுத்தாளர்களைவிடப் பத்து வருடம் பின்தங்கிய நிலையில் இருக்கின்றார்கள். ஈழத்து எழுத்தாளர்கள் வளர்ந்து வரும் மேல் நாட்டு இலக்கியங்களைப் படிக்க வேண்டும். சிறுகதை எழுதும் உத்தி முறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். என்று உபதேசித்தார். 1962 இல் இலங்கைக்கு வந்திருந்த கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் ஈழத்துச் சிறுகதைகளுக்கு அடிக்குறிப்புகள் தேவை. யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழைப் புரிந்து கொண்டு சிறுகதையைப் படிக்க அடிக்குறிப்புகள் இடப்படவேண்டும்.' என்று கூறிச்சென்றார். 'ஈழத்திலக்கியங்களுக்கு அகராதி வேண்டும். இலங்கை இலக்கியத்தை இங்கு எல்லாரும் புரிந்து கொள்ள இலங்கைப் பேச்சு வழக்கிலுள்ள சில சொற்கள் இடையூறாக விருக்கின்றன. சிறு அகராதி தயாரித்து வெளியிடலாம்' எனத் தமிழக எழுத்தாளர் கி. ராஜநாராயணன் கருத்துத் தெரிவித்தார். 'இது தமிழ் இலக்கியமே அல்ல. மொழி தமிழ் என்பதற்காக இத்தோடு கலக்கத் தேவையில்லை. வெறும் ஈழ இலக்கியம் என்றே கூறிவிடலாம். ஈழ இலக்கியம் அங்கீகாரம் பெற ஒரு இருபது வருடம் போக வேண்டும்' என விக்கிரமாதித்தன் என்ற தமிழ் நாட்டுக் கவிஞர் வாய் மொழிந்தார். 'ஈழத்து இலக்கியம் கடந்த இருபது வருடங்களாக அரசியல் தன்மைபெற்றுத் திரிந்துவிட்டது. இலக்கியம் இலக்கியமாக இருக்க வேண்டும். இலக்கியத்தில் அரசியலைத்தேடுவதும், அரசியலில் இலக்கியத்தைத் தேடுவதும் அபத்தமானது. இலக்கியம் என்ற போர்வையில் அரசியல் கோஷங்களையும் துண்டுப் பிரசுரங்களையும் கதை மாதிரியும் கவிதை மாதிரியும் எழுதிப் ... பண்ணி ஏமாற்றுவதைத் தவிர்க்க வேண்டும்' என வண்ணநிலவன் எடுத்துரைத்தார். 'நாவலரா அவர் யார்? எங்களுக்கு தமிழக நாவலர் நெடுஞ்செழியனைத் தான் தெரியும்' என்றார் மணியன். ஆகவே அ. மார்க்ஸின் கருத்துக்கு நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அவர் நமது படைப்பாளி டானியலின் எழுத்துக்களைத் தமிழகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு அறிய வைத்தவர் என்பதை நன்றியாக நினைவு கூரலாம்.

*ஈழத்தின் சிறுகதை வரலாற்றினைக் குறித்து விரிவான ஒரு நூல் தாங்கள் எழுதியுள்ளீர்கள். ஈழத்தின் சிறுகதை உலகு எவ்வாறுள்ளது?*

நமது இலக்கிய இருப்புக்களைச் சரிவரத் தேடி எடுத்துக் கொண்டுவரவேண்டும் என்பதை ஒரு இலக்கியக் கடமை என நான் நினைத்தேன். இருப்பை அறிந்த பின்னரே வளர்ச்சி பற்றிச் சிந்திக்க வேண்டும். இருப்பை அறியாமலேயே மதிப்பீடும் விமர்சனங்களும் நிறைய வெளிவந்துள்ளன. ஈழத்துச்சிறுகதை வரலாறு என்ற நூலை ஆக்குவதற்கும் தகவல் திரட்டுவதற்கும் அனைத்துச்சிறுகதைகளையும் கூடியவரை படிப்பதிலும் அதிக காலத்தை நான் எடுத்துக் கொண்டேன். 400 க்கு மேற்பட்ட சிறுகதைப் படைப்பாளிகளையும் 275 வரையிலான சிறுகதைத் தொகுதிகளையும், பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியான சுமார் எண்ணாயிரம் வரையிலான சிறு கதைகளையும் தேடிப் படிக்க வேண்டியிருந்தது. இலேசான காரியமன்று. அதன் பின்னரே ஈழத்துச்சிறுகதை வரலாற்றை எழுதினேன்.

மதிப்பீடு என்பது அவரவர் சுவை சார்ந்த விடயமாகும். ஒரு துறைக்குத் தம் பங்கினைச் செய்தவர்களை அடையாளங்காணாது விடுவதும் அவர் தம் படைப்புக்களை பதிவு செய்யாது விடுவதும் இலக்கிய வரலாற்றுத் தவறாகுதென்பது எனது கருத்தாகும். அச்சிறுகதைகளைப் படிக்காமலேயே மதிப்பீட்டுக்கருத்துக்கள் கூறப்பட்டு வந்துள்ளன. ஈழத்துச் சிறுகதை வரலாறு என்ற எனது நூல் கூடியவரை பூரணமானதாகப் பதிவு செய்திருக்கின்றதெனக் கருதுகின்றேன். இந்நூல் ஈழத்துச்சிறுகதை வரலாற்றை மட்டும் கூறுகின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஈழத்தின் சிறுகதை வளர்ச்சியைத் தொட்டுக்காட்டியுள்ள போதிலும் பூரணமாக ஆராயவில்லை. ஈழத்தின் சிறுகதை வளர்ச்சியை இன்றைய இலக்கிய அளவு கோல்களைக் கொண்டு மதிப்பீடு செய்து எழுதவேண்டும். மரத்தடியில் சொரிந்து கிடக்கின்ற ஓராயிரம் சருகளிடையே அரிதாகக் கிடைக்கின்ற பத்து இருபது கனிகள் போல ஈழத்தின் படைப்புகள் தேறும்.

ஈழத்தின் சிறுகதை உலகு வளர்ச்சி அடையவில்லை எனக் கூறிவிடமுடியாது. உலகின் உன்னதமான சிறுகதைகளாக அடையாளம் காணப்பட்டவற்றிற்கும், தமிழ் நாட்டின் உன்னதமான சிறுகதைகளாக அடையாளம் காணப்பட்டவற்றிற்கும், ஈழத்தின் உன்னதமான சிறுகதைகள் என அடையாளம் காணப்படுபவை ஒன்றும் குறைந்தவையல்ல. ஒப்பீட்டு ரீதியாக இவை மதிப்பிடப்பட வேண்டும். ஈழத்தின் சிறுகதை முன்னோடிகள் கற்பனை ரதத்திலேறி சஞ்சரிக்கின்ற சிறுகதைகள் ஏராளமாக எழுதியுள்ளார்கள் என்றாலும், தாம் வாழ்கின்ற சமூகத்தின் பிரச்சினைகளையும் தீர்வுகளையும் சமூகப்பொறுப்போடு பல தரமான சிறுகதைகளில் சித்தரித்துள்ளனர் என்பதை மறுத்தற்கில்லை. சமூகத்தின் எரியும் பிரச்சினைகள் அவர்கள் சிறுகதைகளில் வெளிவந்துள்ளன. குடும்ப உறவுகளின் ஊடலும் கூடலும் மிக நளினமாக அவர்கள் சிறுகதைகளில் பரவியிருக்கின்றன. வாழ்க்கையில் நம்பிக்கையையும் திருப்தியையும் ஊட்டக்கூடிய செய்திகள் அவர்கள் சிறுகதைகளில் பொதிந்திருந்தன. அவர்கள் சிறுகதைகளில் சொல்லிய விடயங்களிலும் சொல்லாத சங்கதிகள் பல தொக்கி நிற்கின்ற திறனை அவர்கள் சிறுகதைகளில் காணலாம். நம்பிக்கை வறட்சியை ஏற்படுத்தாது வாழ்க்கையில் ஒரு பிடிமானத்தினை அவை சுட்டி நிற்கின்றன. இலக்கியத் தேடலும் கலையழகும் ஆங்காங்கு விரவியுள்ளமை மறுப்பதற்கில்லை. அவர்கள் சமூகத்தினைப் புரிந்து கொண்டு சமூகத்திற்காக எழுதினார்கள்.

1930 – 1949 காலகட்டத்திலேயே ஈழத்தின் உன்னதமான சிறுகதைகள் என அடையாளம் காணத்தக்க சில சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. ஆனந்தனின் தண்ணீர்த்தாகம், சம்பந்தனின் துறவி, சி. வைத்தியலிங்கத்தின் பாற்கஞ்சி, இலங்கையர்கோனின் வெள்ளிப்பாதசரம், அ.செ. முருகானந்தனின் வண்டிச்சவாரி, கனக செந்திநாதனின் ஒரு பிடி சோறு, தாழையடி சபாரத்தினத்தின் குருவின் சதி, சு. வே.யின் பாற்காவடி முதலான சிறுகதைகள் தேறவில்லையா? 1950 – 1960 களில் முற்போக்குக் காலகட்டத்தில் வரதரின் கற்பு, வ. அ. இராசரத்தினத்தின் தோணி, எஸ். பொன்னுத்துரையின் தேர், என். கே. இரகுநாதனின் நிலவிலே பேசுவோம், டொமினிக் ஜீவாவின் தண்ணீரும் கண்ணீரும், சிற்பியின் கோயில் பூனை, அ. முத்துலிங்கத்தின் பக்குவம், மு. தளையசிங்கத்தின் தேடல் முதலானவை தேறவில்லையா? 1961 – 1983 காலகட்டத்தில் நந்தியின் அசுரனின் தலைகள், செங்கை ஆழியானின் செருப்பு, முனியப்பதாசனின் ஆத்மீகத் தேர்தல், செம்பியன் செல்வனின் சர்ப்ப வியூகம், க. பரராஜசேகரத்தின் வியாபாரம், தெளிவத்தை யோசப்பின் பொட்டு, கோகிலா மகேந்திரனின் சடப்பொருள் என்று நினைப்போ? முதலான சிறுகதைகள் தேளவில்லையா? 1983 – 2000 காலகட்டத்தில் நந்தியின் கேள்விகள் உருவாகின்றன செங்கை ஆழியானின் ஷெல்லும் ஏழு இஞ்சிச் சன்னங்களும், செ. யோகநாதனின் சரணபாலாவின் பூனைக்குட்டி, தெளிவத்தை யோசெப்பின் பந்து, கோகிலா மகேந்திரனின் மனதையே கழுவி, தி. ஞானசேகரனின் அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும், அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் யாழ்ப்பாணம், க. தணிகாசலத்தின் பிரம்படி, சட்டநாதனின் குமிழ், ரஞ்சகுமாரின் கோசலை, ஓட்டமாவடி அறபாத்தின் விருட்சம், எஸ். ஏச். நிஃமத்தின் அடையாள அட்டையும் ஐந்து ரூபாவும் என்பன உன்னதமான சிறுகதைகளாகக் கொள்ளத்தக்கன வல்லவா? இவ்வாறு இன்னமும் பல படைப்பாளிகளை இனங்காணலாம்.

இன்று போராட்ட காலத்தில் வாழ்ந்து கொண்டு பங்காளிகளாகவும் விளங்கிச் சிறுகதைகள் படைக்கின்ற பல எழுத்தாளர் உள்ளனர். முற்போக்குக் காலத்தின் ஆரம்ப கால எழுத்துக்கள் போன்று குறித்த கருத்தியலை வலியுறுத்துவதற்காக எழுதப்பட்ட பிரச்சாரச் சிறுகதைகளாக அவை அமைந்துவிடுகின்றன. அவற்றின் தேவையும் அதுதான். இந்த அணிக்கு வெளியே பல எழுத்தாளர்கள் உள்ளனர். இன்று பத்திரிகைகளில் பிரசுரமாகின்ற பல சிறுகதைகளில் சிறுகதைகளுக்குரிய செப்பம் இல்லை. அழுக்குகளோடு பிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிசுக்களாகவுள்ளன. பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் கூட அவற்றினைச் செப்பனிடுவதிலும் அக்கறை கொள்வதில்லை. ஒரு இராஜ அரியரெத்தினம் போல, ஒரு எஸ். டி. சிவநாயகம் போல, ஒரு கலைச்செல்வி சிற்பி போல, ஒரு கைலாசபதி போல பத்திரிகைகளுக்கு வருகின்ற எழுத்துக்களை திருத்துவதில்லை. அவ்வாறே பிரசுரத்திற்குக் கொடுத்துவிடுகின்றார்கள். எழுத்துலகில் காலடி எடுத்து வைப்பவர்களை தக்கவாறு வழிகாட்ட வேண்டியது பத்திரிகை ஆசிரியர்களின் கடனாகும். அவை நுட்பமாகச் செப்பனிடப்பட வேண்டும். 'ஞானம்' இப்பணியைச் செவ்வையாக இன்று ஆற்றிவருகின்றது.'

**ஈழத்துச்சிறுகதை வளர்ச்சி குறித்து இது வரை வெளியிடப்பட்ட தகவல்கள் எவ்வாறமைந்தன?**

பெரும்பாலும் கேள்வி ஞானத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டமைந்தன. நமது பழம் பெரும் பத்திரிகையான ஈழகேசரியையும், சுதந்திரனையும், அது ஒத்தவற்றையும் படிக்காமலும், மறுமலர்ச்சி போன்ற சஞ்சிகைகளைப் படிக்காமலும் தாம் படித்தவற்றையும் கேள்விப்பட்டவற்றையும் கொண்டு கருத்துக்கள் எழுதப்பட்டன. சில அம்சங்களைக் குறிப்பிடலாம்:

1. ஈழத்தின் சிறுகதை மூலவராக இலங்கையர்க்கோன், சம்பந்தன், சி. வைத்தியலிங்கம் ஆகிய மூவரும் அடையாளங்காணப்பட்டனர். அல்லன்ஸ் குப்புசாமி முதலியார் தனது கதைக்கோவையில் இம்மூவரின் சிறுகதைகளை வெளியிட்டு முதன் முதல் இவர்களை அடையாளப்படுத்தி வைத்தார். அது ஒரு வாய்ப்பாடாகப் பின்னர் தொடர்ந்தது. ஆனால் இவர்களுடன் சுயா, பாணன், ஆனந்தன், கோ. நடேசையர், கோ. சிவபாதசுந்தரம், பவன் முதலானோர் கவனிக்கப்படவேண்டியவர்கள்.
2. இலங்கையர்கோன், சி. வைத்தியலிங்கம், சம்பந்தர் ஆகிய மூவரும் மறுமலர்ச்சி இலக்கியத்தையோ, இலக்கியத்தின் உட்பரிவுகளையோ, புதிய புதிய பரிசீலனைகளையோ அதிகம் வளர்த்தனர் என்று கூறுவதற்கில்லை. ஆங்கில விமர்சகர்கள் கூறும் 'ரோமாண்டிசம்' என்னும் கனவுலகக் காட்சிகளிலும் மயங்கி எழுதினர் என கைலாசபதி போன்றோரின் கூற்றுக்களில் எதுவித உண்மைகளும் இல்லை. முற்போக்குக் காலத்துக்கு முதல் மண்வாசனை, தேசிய இலக்கியம், ஈழத்திலக்கியம் என்ற பண்புகளில்லை என ஒரு மாயையை உருவாக்குவது அவசியமாகவிருந்தது. வெள்ளிப்பாதசரம், கடற்கரைக்கிளிஞ்சல், வஞ்சம், பாற்கஞ்சி, மச்சாள், நெடுவழி, பிரயாணி, மதம் முதலான சிறுகதைகள் கனவுலகக் கற்பனைகளல்ல. இவர்கள் ஒரு பத்தாண்டு காலத்தில் ஏற்படுத்திய சிறுகதைத்துறையின் தாவலை, ஐம்பது வருடங்களாக எழுதப்பட்டு வரும் இன்றைய சிறுகதைகளில் ஒரு பெரும் பாய்ச்சலாகக் காணமுடியவில்லை. இதனை ஏற்பது சங்கடமாயினும் உண்மையாகும்.
3. மறுமலர்ச்சிச் சஞ்சிகையைக் கண்ணாலும் காணாமல் பலரை மறுமலர்ச்சி எழுத்தாளர்களாகவும், மறுமலர்ச்சிப் படைப்புகளை புதுமைப்பித்தனின் மணிக்கொடிக்காலப் படைப்புகளுக்கு நிகராகவும் மதிப்பீடு செய்துள்ளனர். அ. செ. முருகானந்தன், வரதர், சொக்கன், சு. இராசநாயகன்ஆகியோரில் முன்னிருவர் மறுமலர்ச்சி சஞ்சிகையை நடாத்துவதில் பங்கு கொண்டவர்கள். பின்னிருவர் சஞ்சிகையில் எழுதியவர்கள். ஆனால் ஈழகேசரிப்பண்ணையில் நிறையவே எழுதி வளர்ந்தவர்கள். மறுமலர்ச்சியில் அ. ந. கந்தசாமியின் ஒரு சிறுகதைதானும் வெளிவராத நிலையில் அவரை மறுமலர்ச்சி எழுத்தாளராக இனங்காண்பது இலக்கிய வரலாற்றுத் தவறாகும். மறுமலர்ச்சி உருவாக்கிய எழுத்தாளர்கள் என ஆக இருவரான தாழையடி சபாரத்தினத்தையும், பெரியதம்பியையும் குறிப்பிடலாம். மெல்லிய மன உணர்வுகளை எளிதான வசன நடையில் சிறுகதையாகக் கூறும் ஆற்றல் பெரியதம்பியிடம் உள்ளது. அம்மான் மகள் அற்புதமான ஒரு சிறுகதை. மறுமலர்ச்சிச் சிறுகதைகள் என்ற என்னால் தொகுக்கப்பட்ட தொகுதி வெளிவருவதற்கு முன்னர் பெரியதம்பி சிறுகதை உலகில் அறியப்படவில்லை. உலகளாவிய தரத்திற்கு மறுமலர்ச்சியின் சிறுகதைகள் அமையாவிட்டாலும் அவை வெளிவந்த காலகட்டத்தில் சிறுகதையின் வடிவத்தையும் செழுமையையும் புரிந்து கொண்டு படைக்கப்பட்ட ஆக்கங்கள் அதிலுள்ளன.
4. 'நமது சிறுகதை முன்னோடிகளின் படைப்புகளை ஆராயும்போது அவை நம்மைப்புடமிடுவதற்கான சந்தர்ப்பங்களைத் தருகின்றன. சிலவேளைகளில் வளர்ச்சி என்ற பெயரில் நாம் கட்டி வைத்திருக்கும் போலியான கட்டுமானங்களைத் தகர்க்கவும் செய்யலாம். போதாமையை உணர்த்தவும் செய்யலாம்.' என்ற சுந்தரம் டிவகலாலாவின் கூற்று இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது. மறுமலர்சிச் சிறுகதைத்தொகுதியை வடகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அமைச்சு வெளியிட்டது. அதன் பதிப்புரையில் அதன் செயலாளர் டிவகலாலா மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் மறுமலர்ச்சியின் பங்களிப்பு அதிகம் என மறுமலர்ச்சிச் சிறுகதைகளை அறியாமலேயே விமர்சகர்கள் மதிப்பிட்டுள்ளனர். மறுமலர்ச்சியின் 24 இதழ்களில் மொத்தம் 52 சிறுகதைகள் வெளிவந்துள்ளன. அந்த 24 இதழ்களும் இன்று இருவரிடம் தாமுள்ளன. ஒன்று கோப்பாய் சிவத்திடம், மற்றையது என்னிடம். ஆகவே நான் ஆதாரத்துடன் தான் பேசுகின்றேன். அ. செ. முருகானந்தனின் மாடுசிரித்தது, இலங்கையர்கோனின் சக்கரவாகம், து. ருத்திரமூர்த்தி (மஹாகவி)யின் தூக்கணாங்குருவிக்கூடு, கு. பெரியதம்பியின் அம்மான்மகன், தாழையடி சபாரத்தினத்தின் தெருக்கீதம் என்பன மறுமலர்ச்சியில் வெளிவந்த பெருமை சேர்க்கும் சிறுகதைகளாகும்.
5. ஈழத்துச்சிறுகதை வரலாற்றில் முற்போக்குக்காலகட்டம் (1950 – 1960) விமர்சகர்கள் சிறுகதைச் செல்நெறியை ஒழுங்கு படுத்தவும் மதிப்பீடு செய்யவும் முன்வந்த காலமாகும். கைலாசபதி, சிவத்தம்பி, கனகசெந்திநாதன், சில்லையூர்ச் செல்வராஜன், எஸ். பொன்னுத்துரை முதலானோர் இக்கால கட்டத்தின் விமர்சகர்களாகக் குறிப்பிடத்தக்கவர்கள். முதலிருவர்கள் இலக்கியத்தில் மார்க்சியம் பார்த்தார்கள். மார்க்சியக் கருத்துக்கள் கொண்ட சிறுகதைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மொழியியலை மாற்ற முனையும் க்ஷ

ஞா. பாலச்சந்திரன்

–கணினித்துறை, இயந்திரவியல் பீடம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.

"கிரந்த மொழி எழுத்துக்களை தமிழ் உள்வாங்கலாமா?" எனும் விவாதம் பல ஆண்டுகளாக மொழியியலிலே காணப்படுகின்றது. தனித்தமிழ்தான் தமிழ் மொழிக்குத் தனித்துவம், என்றும் பரவலாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. எது எவ்வாறு இருப்பினும் இன்று 'ஸ', 'ஜ', 'ஷ', 'ஹ', 'க்ஷ' எனும் கிரந்த எழுத்துக்களும் 'ஸ்ரீ' எனும் கிரந்த கூட்டெழுத்தும் தமிழிலே பரவலாக பாவிக்கப்பட்டு வருகின்றன. இவற்றிலே 'க்ஷ' எனும் எழுத்தைப் பற்றி ஒருசில குறிப்புகளைத் தருவதுதான் இச்சிறிய கட்டுரையின் நோக்கம்.

"இந்திய மொழிகள் அனைத்திலுமே உரத்த ஒலி எழுத்துக்களை இழந்த மொழி தமிழ் ஒன்றே" என்று Robert Caldwell தனது 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலிலே குறிப்பிடுகின்றார். தமிழ் மொழி உரத்த ஒலிகளை இழக்கவில்லை. 'காகம்' எனும் சொல்லிலே 'ஹ' ஒலிப்பது, 'கஞ்சி' எனும் சொல்லிலே 'ஜி'யினூடாக 'ஜ' ஒலிப்பது போன்று பல உதாரணங்களைக் காட்டலாம். இவ்வொலிகள் தமிழிலே இருக்கின்றனவே ஒழிய இதற்குரிய எழுத்துக்கள் தமிழிலே இல்லை. தமிழ் மொழியை முதன் மொழியாகக் கொண்டவர்கள், எவ்வித சிரமமும் இன்றி இவ் உரத்த ஒலிகளைப் பொருத்தமான இடத்திலே ஒலிப்பார்கள். ஆனால், தமிழ் பயிலும் வேற்று மொழியினருக்கு இதனை பிரித்தறிவது சிரமமானது. அத்துடன் இன்றைய உலகில், தமிழானது பலதரப்பட்ட மொழிச் சொற்களை எழுத வேண்டிய தேவைக்குத் தள்ளப்படுகிறது. உதாரணமாக France எனும் சொல்லை தூய தமிழிலே எழுதுவது மிகவும் சிரமமானது. இவ்வாறான காரணங்களால் சில கிரந்த எழுத்துக்களை தொன்று தொட்டு எட்டாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே) தமிழிலே சேர்த்து எழுதிவருகின்றனர். அவற்றிலே ஒரெழுத்துதான் 'க்ஷ'.



'க்ஷ' எனும் எழுத்தை உச்சரித்தால், மற்றைய எழுத்துக்களை உச்சரிக்கும்போது இல்லாத ஒரு இடறலையும் நீள உச்சரிப்பையும் உணரலாம். உண்மையில் 'க்ஷ்' எனும் மெய், கிரந்த மொழியிலே ஒரு கூட்டு மெய்யாகும் (conjunct consonant). கிரந்தத்தில் காணப்படும் 'க்' மெய்யெழுத்தும் ஷ் மெய்யெழுத்தும் இணைவதால் பெறப்பட்டது. இந்திய மொழிக் குடும்பங்களில் கூட்டு மெய்யெழுத்துக்கள் ஒரு பொதுவான விடயமாகும். ஆனால் தமிழ் மொழியிலே கூட்டு மெய்கள் இல்லை. தமிழ் மொழி கூட்டு மெய்யான, 'க்ஷ்'ஐ உள்வாங்கியதேயன்றி கூட்டு மெய்கள் எனும் மொழியியல் அம்சத்தை உள்வாங்கவில்லை. தமிழிலே 'ஐ' 'ஔ' எனும் உயிர் கூட்டொலிகள் (diphthongs) காணப்படுவது இவற்றுக்குப் புறம்பான அம்சமாகும்.

நாம் இன்று எவ்வாறு 'க்ஷ'ஐ எழுதுகின்றோம் என்று நிதானித்துப் பார்த்தால், பாரிய மொழியியல் தவறைப் புரிகின்றோம் எனத் தெரியவரும். உரு 1 இல் காணப்படும் வடிவம்தான் சரியான வடிவம். கிரந்த 'க' உடன் (தமிழ் 'க'ற்கும் கிரந்த 'க' இடையில் உள் உருவவியல் வேறுபாட்டைக் காண்க) சேர்த்துதான் 'ஷ' எழுதப்படல் வேண்டும். நாம் தமிழ் 'க'வை அடிப்படையாகக் கொண்டு 'க்ஷ' எழுதுவதன் மூலம் இருவேறு மொழிகளின் அடிப்படைக்கூறுகளை இணைப்பதோடு மட்டுமல்லாது தமிழிலே கூட்டு மெய் எனும் இல்லாத அம்சத்தையும் கொண்டுவருகின்றோம்.

நாம் 'க்ஷ'ஐ தமிழ் மொழி 'க' அடிப்படையாகக் கொண்டு எழுதுவது ஆங்கில மொழியில் உள்ள 'K' எழுத்துடன் கிரந்தத்தில் உள்ள 'ஷ'வைச் சேர்த்து உரு 2 இல் உள்ளது போன்று எழுதினால் ஏற்படும் நகைப்புக்கு எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல.

அவற்றினை எழுதியவர்களையும் தூக்கிவிட்டார்கள். இலக்கிய வடிவமோ, கலையழகோ கவனிக்கப்படவில்லை. மார்க்சியம் தழுவாத எழுத்தாளர்களை முற்றுமுழுதாகத் தூக்கி ஒதுக்கிவிட அவர்களால் முடிந்தது. அவர்களின் பெயர்களைக் கூடக் குறிப்பிடாது பார்த்துக் கொண்டார்கள். அதற்கொரு தேவை அப்போது இருந்ததாகச் சிவத்தம்பி இப்பொழுது கூறுகிறார். இரசிகமணி கனகசெந்திநாதன் ஒரு அப்பாவி விமர்சகர். இலக்கியக் கணிப்பீடு என்று வரும்போது எவரையும் ஒதுக்கிவிட அவரால் முடியாது. மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் வாசம் கண்டார். இலக்கிய விமர்சனம் என்பது பக்கம் சார்ந்ததன்று. கட்சி சார்ந்ததன்று. நடு நிலையானது எனக் கனக செந்திநாதன் கருதிச்செயற்பட்டார்.

6. ஆங்கில அறிவுடையவர்கள் பலர் நம்மிடையே இருந்தாலும் ஆங்கில இலக்கியப்புலமை உடையவர்களாகப் பேராசிரியர்கள் கைலாபதி, சிவத்தம்பி, ஏ. ஜே. கனகரெட்னா ஆகியோரைக் குறிப்பிடலாம். கைலாசபதி நிறைய வாசிப்பதில் விருப்புடையவர். தான் வாசித்து உணர்ந்தவற்றை பிறர் அறிய வைப்பதில் ஆவலுடையவராகவிருந்தார். சிந்தித்து ஆராய்ந்து நிறைய எழுதினார். கனகரெட்னா நிறைய வாசித்தாலும் பேசினாலும் அவருடைய பெரும்பொழுது ஆக்கமாகக் கழியாது அவமே கழிந்தது. பேராசிரியர் சிவத்தம்பிக்குப் பல சோலிகள். இலக்கியத்துக்கு அவர் ஒதுக்கிய நேரத்திலும் கூடிய நேரத்தைப் பொதுப் பணிகளில் செலவிட்டுள்ளார். என்று அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவரானாரோ அன்றே ஈழத்து நவீன இலக்கியத்தின் செல் நெறிகளைச் சுட்டுவதாக வெளிவந்த நூல்களை மனம் வைத்து வாசிப்பது அரிதாகியது. முன்னுரைக்காக அனுப்பிய நூல்களையும் வெளியீட்டு விழாக்களில் பேசுவதற்கான நூல்களையும் தவிர சமகாலத்து நூல்களை வாசித்துக் கணிப்பு செய்ய முடியாது போயுள்ளது. இது ஈழத்து இலக்கியத்துக்கு ஓரிழப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கை ஆழியான்................ நீங்களுமா?

## (ஓர் எதிர்வினை)

-லெ. முருகபூபதி

புலம் பெயர்ந்தவர்களைப்பற்றியும் - அவர்கள் மத்தியிலிருந்து எழுதிக்கொண்டிருப்போர் குறித்தும் ஈழத்திலிருக்கும் -தமிழ்நாட்டிலிருக்கும் எம்மவர்கள் (இங்கு எம்மவர்கள் என நான் சுட்டுவது எழுத்தாளர்களைத்தான்) சிலர் காலத்துக்குக் காலம் மேம்போக்காக ஏதாவது சொல்லிக்கொண்டுதானிருக்கிறார்கள்.

அந்தவரிசையில் இப்போது செங்கைஆழியானும் சேர்ந்துகொண்டார்.

ஜெயகாந்தன்- புலம்பெயர்ந்தோர் இலக்கியமா, அது புலம்பல் இலக்கியம் - என்றார். (இதுபற்றி- தினக்குரலில் நான் எழுதிய மறுபக்கம் என்ற தொடரில் (02-செப்-2000)பதிவுசெய்துள்ளேன்.

மல்லிகைஜீவா- ஒரு வாசகரின் கேள்விக்கு - பிரச்சினைகளுக்குப் பயந்து பிறந்த நாட்டையும் வாழ்ந்த வீட்டையும் இனசனங்களையும் விட்டு பிரதேசம் ஓடும் காகக்கூட்டத்தைப்பற்றி நினைத்துத்தான் நான் அடிக்கடி பச்சாதாபப் படுவதுண்டு- என்று பதிலளித்தார்.(தூண்டில் கேள்வி-பதில்)

கம்பவாரிதி ஜெயராஜ் -புலம்பெயர்ந்து சென்றோர் தாயகம் திரும்புவது கண்டு -வராதே வரவல்லாய்... என்று எழுதினார்.

கவிஞர் புதுவை ரத்தினதுரை தமது கவிதை ஒன்றில் வெளிநாடுகளுக்குப் பறந்தவர்களை கிண்டல் செய்திருந்தார்.

இப்பொழுது, செங்கைஆழியான் - புலம்பெயர் எழுத்தாளர்களே எங்கள் அவலங்களை உங்கள் இருப்புக்காகப் பயன்படுத்தாதீர்கள்.- என்று சொல்கிறார்.

இந்த வசனத்தை ஞானம் ஆசிரியர் முக்கியத்துவம்கொடுத்து இதழ்முகப்பிலும் குறிப்பிட்டு நேர்காணலில் தடித்த எழுத்துக்களில் பதிவுசெய்கிறார்.

செங்கைஆழியானின் கருத்தை அழுத்தம் திருத்தமாகசொல்வதற்காகவா அல்லது, இயந்திரமாக ஓடிக்கொண்டிருக்கும் புலம்பெயர் எழுத்தாளர்கள் சற்று நின்று அதற்கு பதில்சொல்லிவிட்டு ஓடட்டும் என்றா என்பது தெரியவில்லை.

எனினும் எனது கருத்துக்களைச்சொல்ல விரும்புகிறேன்.

மேம்போக்காக உணர்ச்சிவசப்பட்டு சொல்லப்படும் கருத்துக்கள் எப்பொழுதும் நிதானமிழந்தே பரவும். காலம்கடந்து யோசிக்கும்போது அந்த நிதானமிழப்பு புரியவரும். ஜெயகாந்தனின் கருத்தை பொருட்படுத்தத் தேவையில்லை. அவர் இலக்கிய உலகிலிருந்து அந்நியப்பட்டுப்போனவர்.

''யாரை காகக்கூட்டம்'' என்று ஜீவா வர்ணித்தாரோ இந்தப்பறவைகள்தான் அந்நியம் புகுந்தாலும் ஆகாயத்தில் பறந்தாலும் தான் பிறந்த மண்ணை மறக்கவில்ல என்பதற்கு சாட்சியாக மல்லிகை அவுஸ்திரேலியா சிறப்பு மலர் வெளிவர ஆவனசெய்தன.

ஜீவாவை ஐரோப்பாவுக்கு அழைத்து மரியாதை செலுத்தி கௌரவித்தன.

இத்தகவலை எனது மல்லிகை ஜீவா நினைவுகள் நூலில் (பக்கம்-120) (அக்டோபர் 2001) பதிவு செய்துள்ளேன்.

புதுவை ரத்தினதுரையின் - கவிதையில் கேலி செய்யப்பட்ட புலம் பெயர்ந்த தமிழர்கள்தான் அவரது பூவரசம்வேலியும் புலுனிக் குஞ்சுகளும் கவிதை நூலுக்கு மகோன்னதமான வரவேற்புக் கொடுத்த தமிழ்கள். தாம் புலம் பெய்ந்து வாழும் நாடுகள் தோறும் வெளியீட்டு விழாக்கள் நடத்தினர்.

ஜீவாவின் சயசரிதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டதும்- அவுஸ்திரேலியாவில் இருந்துதான் (மொழி பெய்த்தவர் நல்லைக்குமரன் க.குமாரசாமி)

கம்பவாரிதியின் கருத்துக்கு எதிர்வினையாக என்ன நடந்ததென்பதை மீண்டும் பதிவு செய்து அவரை அசிங்கப்படுத்த விரும்பவில்லை.

புலம் பெயர் இலக்கியம் பற்றிப்பேசுவதற்கும் எழுதுவதற்கும் முன்பு நாம் இடம் பெயர்ந்தோர் இலக்கியம் குறித்தும் சிந்திக்க வேண்டும்.

யாழ். குடாநாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்து சென்றவர்கள் எழுதிய இடப்பெயர்வு இலக்கியங்கள் ஏராளம். யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறி உள்நாட்டிலேயே வேறு பிரதேசங்களுக்குச்சென்றவர்களும் இலக்கியம் படைத்துள்ளனர்.

அவ்வாறு கொழும்புக்கு இடம்பெயர்ந்தவர் தான் மல்லிகைஜீவா. அவர் ஏன் இடம்பெயர்ந்தார்.?

கவிஞரும் விமர்சகருமான எம்.ஏ.நு.்.மான் ஏன் இடம்பெயர்ந்தார்? இடதுசாரிசிந்தனையாளரும் சண்முகதாஸன் டானியல் ஆகியோரின் நண்பருமான இக்பால் தென்னிலங்கைக்கு ஏன் இடம்பெயர்ந்தார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரதும் இடப்பெயர்வுக்கும் அந்நியதேச புலப்பெயர்வுக்கும் ஏதோ ஒரு நியாயமான காரணம் இருக்கு

1988 இல் வெளிவந்த எனது 'சமாந்தரங்கள்' கதைத்தொகுதிக்கு மல்லிகை ஒக்டோபர் இதழில் விமர்சித்த செங்கைஆழியானே பின்வருமாறு குறிப்பிடுகிறார்:- **1987ஆம் ஆண்டு ஈழத்து அரசியல்நிலைமைகள் அடித் தளத்தோடு ஆட்டம் கண்டபோது, அழிவுகள் நிதர்சனமாக எஞ்சிக்கொண்டிருந்தன. இத்தாங்கொணாத்துயரத்திலிருந்து விடுபட்டு தாய்நாட்டைவிட்டு அந்நிய நாடொன்றுக்குத் தப்பிச்சென்றுவிடவிழைந்த ஆயிரமாயிரம் இளைஞர்களில் ஒருவராக முருகபூபதி அவுஸ்திரேலியாவுக்கு இடம்பெயர்ந்துசென்றார்'**

செங்கைஆழியானின் இந்த வாக்குமூலம் புலம்பெயர்ந்த ஏனைய ஈழத்து எழுத்தாளர் களுக்கும் பொருந்தும்.

ஈழத்து எழுத்தாளர்கள் மட்டுமல்ல உலக நாடுகளில் பல எழுத்தாளர்கள் இவ்வாறு புலம்பெயர்ந்திருக்கிறார்கள்.

சொலமன் ருஷ்டி, சொல்சனிட்சின், விலடிமீர் நபகோவ், ஆன்.ஃ.பிராங்... இப்படி பலரைப் பட்டியலிடலாம். ஈழத்திலிருந்தால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று பலர் பேட்டிகளிலும் உரையாடல்களிலும் பொய்கூறுவதாக செங்கைஆழியான் சொல்கிறார். நானறிந்தவரையில் தமிழக இதழ்களில் எஸ்.பொ, அ. முத்துலிங்கம்,கவிஞர் அம்பி,ஷோபாசக்தி,சேரன்,ஜெயபாலன், புஷ்பராஜா, முதலானோர் பேட்டி அளித்துள்ளனர். ஒருவரைப்பேட்டிகாண்பதென்பது இதழின் தேவையைப்பொறுத்த விடயம். அதாவது செங்கை ஆழியானினதும், எஸ்.பொ.வினதும் பேராசிரியர் சிவத்தம்பியினதும் நேர்காணல்களை 'ஞானம்' இதழ் வெளியிட்டதுபோன்று தமிழக இதழ்களும் மேலே குறிப்பிடப்பட்டவர்களின் நேர்காணல்களை வெளியிட்டன. அவர்களின் இலக்கியப்படைப்புகளிலிருந்தே அவர்களின் புலப்பெயர்வுக்கான காரணங்கள் தெளிவானது. 'எங்கள் அவலங்களை உங்கள் இருப்புக்காகப் பயன்படுத்தாதீர்கள்' -என்று போதனாசிரியர் போன்று செங்கைஆழியான் சொல்கிறார்.

புலம்பெயர்ந்த ஈழத்துப்படைப்பாளிகளினால் தமிழ்இலக்கியத்திற்குக்கிடைத்த வரவு ஏராளம். இந்த சாதகமான அம்சங்களைப்பாராமல் மேம்போக்காக கருத்துச்சொல்கிறார். அவரது வாதத்தின்பிரகாரம் பார்த்தால், அவரும் எமது தமிழ்மக்களின் அவலங்களையே தமது இருப்புக்காகவும் பயன்படுத்தியுள்ளார் என்றுதான் சொல்லவேண்டும்.

முத்துலிங்கத்திற்கு ஆபிரிக்காவில் வேலைகிடைத்தது. போனார்.

செங்கைஆழியானுக்கு தாய்நாட்டுக் குள்ளேயே அடுத்தடுத்து நல்லபதவிகளுடன் வேலை கிடைத்தது. அவ்வளவுதான். அந்தப்படைப்பாளி சென்ற இடத்தில் எப்படி இருந்தான் என்ன எழுதினான் என்று பாருங்கள். செங்கைஆழியான் நெடுந்தீவுக்குச்சென்றார் 'வாடைக்காற்று' கிடைத்தது. செட்டிகுளம் சென்றார் 'காட்டாறு' கிடைத்தது.

முத்துலிங்கம் ஆபிரிக்கா உட்பட பலநாடுகளுக்கும் சென்றார் 'வியத்தலும் இலமே' 'பூமியின்பாதிவயது' கிடைத்தது. ஷோபாசக்தி ஐரோப்பா சென்றார். எமக்கு கொரில்லா, தேசத்துரோகி' 'ம்' என்பன கிடைத்தன.
அம்பியும் பலநாடுகளுக்குச்சென்றார் 'உலகளாவிய தமிழர்' வரவாகியது.
புஸ்பராஜா பிரான்ஸ் சென்றார் ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் கிடைத்தது. இவ்வாறு சொல்லிக்கொண்டேபோகலாம்.
எமது புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் ஐரோப்பிய மொழிகளைக்கற்றுத்தேர்ந்து நேரடியாக அம்மொழியில் இலக்கியம்படைக்கின்றார்கள், மொழிபெயர்க்கின்றார்கள்.

அவலங்களை அனுபவித்து எழுதும் எழுத்து பற்றியும் சொல்கிறார்.
வியட்நாமுக்குச் செல்லாமலேயே சிறந்த சிறுகதைகள் எழுதியவர்கள் செ. கதிர்காம நாதன், தாமரைச்செல்வி.
பீஜித்தீவுக்குப் போகமலேயே 'கேட்டிருப் பாய் காற்றே...' பாடினார் பாரதியார்.
இலங்கையின் மலையகத்தை எட்டிப் பார்க்காமலேயே துன்பக்கேணியில் படைத்தார் புதுமைப்பித்தன்.

சிறந்த படைப்புகள் வாழும். தரமற்றவை மறக்கப்பட்டுவிடும் என்ற இலக்கிய அரிச்சுவடி செங்கை ஆழியானுக்குத்தெரியாததல்ல.
''புலம்பெயர் தமிழ்இலக்கியம் இன்று எழுதுகின்ற பரம்பரையுடன் முற்றுப்பெற்றுவிடும் அதன்பின்னர் வருவது அந்தந்த நாட்டு மொழிகளில் ஈழத்துத் தமிழரின் வம்சாவழியினரின் எழுத்துக்களாக அமையும். அவர்கள் தமிழில் எழுதப்போவதில்லை.'' என்று தீர்க்கதரிசியாகவும் சொல்லிப்பார்க்கிறார்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நாம் என்னபேசிக்கொண்டிருந்தோம். மண்வாசைன, பிரதேசமொழிவழக்கு, தேசியஇலக்கியம்.
பிறகு 'போர்க்கால இலக்கியம்' 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்' என்று எப்பொழுதுமுதல்பேசத்தொடங்கினோம்.?
நடப்பது நடக்கும். உலகம் சுருங்கும். அப்பொழுது நானோ செங்கைஆழியானோ இருக்கமாட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தது மண்ணில்

வதிரி.சி.ரவீந்திரன்

தன்னுயிர், பிரியுமென்று
தானாக அவனுணர்ந்தான்
என்னாளும் நோயில்படுத்து
எல்லோரும் துயரில்வாட
எண்ணமே கொண்டானில்லை
மாறாது நோயென்று
மருத்துவர்கள் பேசவில்லை.
மாறாது நோயென்று
மனதாலே நினைத்திருந்தான்.
தன் வாயாலே பேச முடியாமல்
தானாகத் துன்பமுற்றான்.
பேனாவால் எழுதி எல்லாம்
பேச்சாகக் காட்டிவைத்தான்.
தானே தன் கருமங்களெல்லாம்
தடையின்றி செய்தோனுக்கு
பேசிப் பேசி வாழ்ந்து விட்டு
பேசாமல் இருப்பதென்றால்
பிறகென்ற வாழ்வென்றுணர்ந்தான்.

விழித்திருந்து விடியும்வரை
எழுத்தில் ஆழ்ந்திருப்பான்
எழுதிக்குவித்தவைகள்
எல்லாமே சேர்த்திட்டே
பத்திரமாய் தன்னவர்க்கு
பாரப்படுத்தி வைத்தான்
நாட்கள் சில மறைந்திட
நாளொருநாள் தன்னவர்கள்
சூழ்ந்திருக்கும் போதினிலே
தானாக உயிர் பிரிந்தான்.
நாளொருநாள் பார்த்து

இவன் எழுத்தில் என்ன உள்ளதென
எடுத்துப் பார்த்தனர்.
"என் மரணத்தின் பின்" என்று
ஆழப் பதிந்திருந்தது.
இறப்பு என்பது வாழ்வில்
இயற்கை என்பதனை
தன் எழுத்துகளில் அவன்
மீளத் தெளிவுபடுத்தி வைத்தான்
அகால மரணங்களில்
அழுது புலம்பும் எங்களுக்கு
அக்- காலமரணமானது
"பிறந்தது மண்ணில்
இறப்பதற்கென்றே என்று நாடகப் பாடலை
வைரமுத்துவின் இனியகுரலில்
கேட்பது போல் ஒலித்தது.

# ஆறின செய்திக்கு ஆர்காணும் அனுசரணை?

உப்புப் புளியில்லை ஒருவாய்க்கும் ருசியில்லை
தப்புத் தடலாய் மொழி பெயர்த்துத் தடக்கித் தடக்கி
துப்பித்துப்பி வாசிக்கிறதும் தூக்கிப் பிடிக்கிறதுமாய்
சப்புக் கட்டல் கொட்டுறதில சூடான செய்தியாம்!

சூடான செய்திக்கு சுறுக்காக முன்வந்து
கேடான கொம்பனிகள் அனுசரணை குடுக்கிறதாம்!
ஓடோடி பின்திரிஞ்சு கட்டுப்பணம் சேர்க்கிறதும்
பாடென்று வந்தவன் போனால் சூக்காட்டிறாக்கள்!

சூக்காட்டிப் பிழைக்கிறவன், ஆட்காட்டி அரைகுறை
வேக்காட்டுச் செய்திக்கு வடம் பிடிக்க லாந்தானே!
கூக்காட்டி லங்காபெல் எம்மதென்று கத்துறார்
சாக்காட்டி அமெரிக்கன் பெல்லென்றால் தெரியாதோ?

பெல்லென்ற பெயரோடு பிறநாட்டார் செய்தனுப்ப
பல்லிளித்துக் கொணர்ந்து பட்டிதொட்டி பூட்டிவிட்டு
பெல்வயர் லெஸ் பணத்தை பிறநாட்டுக் கனுப்பாதென
சில்லறைச் செய்தியளுக்கு சிலுசிலுப்புக் காட்டுறார்!

சிலுசிலுப்புக் காரருக்கு சிந்தனைதான் ஆதாரம்
வலுந்திழுத்து வளவளத்து மலிந்ததையே பேசுவார்
பொலுபொலென சனம் சாக பொய்ச்சாயம் பூசுவார்!
கொலுவிருக்கும் குடை சாய கோவணத் தோடோடாரோ!

கோவணத் துண்டொன்றை சால்வையென்று போர்த்துவார்
ஆவணம் ஏதுமற்ற அரைமதியர் பேச்சுகளை
சீவனம் செலுத்தலாய்ச் சோடனை செய்கிறார்!
தூவானப் பிசிறலாய் நாறுகின்ற தகைமையார்!

நாறிடும் பதவிக்காய் நாவிழுந்து பேசுகிறார்
காரிய அறிவில்லை கலைப்பண்பு மனமில்லை!
தேறின ஆளில்லை திறமைக்கு இடமில்லை!
ஆறின செய்திக்கு ஆர்காணும் அனுசரணை???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வெண்பா)
பொட்டுடல் மீதையம் கொண்டே ருளம்
விட்டே குண மறந்து- தட்டோடு
எட்டி தரையகச் செவ்விழி குமைய
பட்டுடல் தூக்கிக் கதறும்

(கலித்துறை)
கண்டுளம் பதறிடும் வண்டமிழ்ச் செய்யோன்
பண்டமிழ் தேசத்து பரதேசி ஆனதை
கொண்ட நம் மிறைவன்பால் சாற்றுவோம்
மண்டலப் பேதமை மாறுமே மமதையற

(விருத்தம்)
செந்தணல் நெஞ்சிலே செவ்விடர் மூட்டி(ச்)
  சங்கடம் மண்ணிலே சாபங்கள் ஓட்டி
குந்தளம் போலும் நீண்டு விழும் மத(க்)
  கல்லணை யெண்ணம் நீக்கியே புது
மந்தணம் கேட்டிளம் மாட்சிமை பகிரா
  மந்தப் பேய் மனம் பற்றியே தகரா
சுந்தரத்தே யமிழ் சோபனம் துதிட
  சரித்திரம் செய்குவோம்! சாதினமே!

(அகவல்)
மனதினில் தெம்பாய் ஓரடி நகர்த்தி
தம்மணிச் சுவடுகள் தேடி யகழ்ந்து
சித்திரம் போலொரு குன்றம்
செதுக்கிச் சிலையொடு கோபுரம் அமைக்க
சமரசம் செய்குவோம் மானிடரே

## மொழிகளின் தமிழர் வெளியேற்றமும் முதலிருந்து படுதலும்...

■ மும்தாஜ் ஹரீன்

சல்லாப மொழியும் குழவிகளின் கூத்தடிப்பும்
சீதளக் காற்றும் சில்லிடும் பனியும்
மலர்ந்த பூ, விரிந்த கா, வனம், பாலையெலாம்
மயிலொடு மந்தியும் மானுடனாட
மயங்கியே பாட குயிலினியும் இனியும்.

ஆதியருள் வேண்டி நித்தம்; சக்தி
திரளணியாய் பக்திப் பேரொலி முழங்க
கோடிச் சுகம் முத்தென கொத்தென மலர
கொள்கை கோசப் பாட்டிசைப்போம்
கோடியெலாம் ஒலிக்க தமிழின்பம்

மந்திரம் போதைகள் பிசாசு சாத்தான்
மற்றுமுள யக்ஷர் கூட்டம் குப்புறவிழ
சாதிகள் மறந்து சோதிகள் ஏற்கும்
சமத்துவம் எம்மில் நிலை கொள்மின்
சரித்திரம் செய்தல் திண்ணமதாகும்!

## கலாபூஷணம் புலோலியூர். க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி – 2007 முடிவுகள்



**முதலாம் பரிசு**
கருமுகில் தாண்டும் நிலவு - கார்த்திகாயினி சுபேஸ்,
*601/2, அளுத்மாவத்தை வீதி – கொழும்பு – 15.*

**இரண்டாம் பரிசு**
ஒடுக்கம் - கார்த்திகா பாலசுந்தரம்,
*மூப்பியாவளவு, விக்கினேஸ்வராக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.*

**மூன்றாம் பரிசு**
கற்றுக் கொள்வதற்கு! - கே. எஸ். சுதாகர், 28, Throsby Crescent, Deer park Victoria 3023, Australia.

### பரிசுச் சான்றிதழ் பெறும் கதைகள்

- நான் சாகமாட்டேன் - ச. முருகானந்தன், *81, 1/1, மன்னிங்பிளேஸ், கொழும்பு – 06.*
- மீளாமகன் - தர்மராஜா அஜந்தகுமார், *யார்வத்தை, வதிரி, கரவெட்டி.*
- பாடமாத்தி - சிவனு மனோகரன், *இல – 06, டன்பார்வீதி, ஹட்டன்.*
- கல்லடிப் பாலம் - 'தீரன்' ஆர். எம். நௌஸாத், *தபால் அலுவலகம், கல்முனை.*
- அறம் செய்ய - 'ஆவூரான்' சந்திரன் சண்முகம், No 5, Matthew, Court, Hampton park, Victoria 3976, Australia.
- தவம் கலைகிறது - 'கேணிப்பித்தன்' ச. அருளானந்தம், *37/7, மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலை.*
- தேடல் - 'கயிலை' தம்பையா கயிலாயர், 30 - 5/1 Ridgeway place, Colombo - 04.
- ஒரு நாள் - பிரமிளா செல்வராஜா, G/ Devithura T. K.V., Ethkandura, 80458
- கனவு கனவாயே - செல்வி ச. நிரஞ்சனி சபாரத்தினம், *பெரிய அரசடி, ஆசிரியர்வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.*

**நடுவர்கள்**
செங்கை ஆழியான்    புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்    கே. ஆர். டேவிட்
மு. தயாபரன்    கோகிலா மகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னுஞ் சொல்லாதவை 5

**தெணியான்**

**த**ட்டுவம்போல பச்சை ஓலைப்பிளாவில் பதநீர் குடிக்கிறது ஒரு ருசி. ''ஐஸ் வாட்டர்'' மாதிரி குளு குளென்று. . . . . தேனாக இனிக்கும். பனையில் இருந்து எத்தனை பிரயோசனம்! ''தாலவிலாசம்'' என்ற நூல் நூற்றுக்கு மேலே சொல்லி இருக்கு. தோட்டத்துப் பயிருக்கு பனையோலைப் பட்டையில் தண்ணீர் அள்ளி வார்ப்பார்கள். துலா மிதித்து இறைக்கிறதுக்கும் பனையோலையில் இழைத்த பெரிய பட்டைதான். ஈர்க்கை நெருக்கமாக அடுக்கி இணைத்து தலைக்குத் தொப்பி. எந்த மழைக்கும் ஒழுகாது. பனை ஓலையில் குடை செய்யாமல் விட்டுவிட்டார்கள். சிலர் காவோலையைத் தூக்கி தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு மழைக்குள் திரிவார்கள்.

எங்கள் வீட்டில் ஒரு தாழங்குடை இருந்தது. பெரிய குடை. மூன்று பேர் சேர்ந்து போகலாம். வட்டக்குடை. தாழை இலைகளை அடுக்கி மூங்கிலைப் பிளந்து இணைத்துக் கட்டின குடை. தாழை இலையை மடல் என்றும் சொல்வார்கள். எல்லோரிடமும் அந்தக் குடை இருக்கவில்லை. இரண்டொருவர் தான் வைத்திருந்தார்கள். மழை இல்லாத காலத்தில் வீட்டுக்குள்ளே கட்டித் தூக்கி விடுவார்கள். நான் அதைப் பார்த்து எப்ப மழை வரப் போகுது. . . எப்ப மழை வரப் போகுது . . என்று ஏங்கிக் கொண்டிருப்பேன். அதைப் பிடித்துக் கொண்டு திரிகிறதுக்கு நல்ல ஆசை. தூக்கிறது கொஞ்சம் கஷ்டம் தான். நான் தூக்கினால் ''முறிக்கப் போறான். . முறிக்கப் போறான். . .'' என்று பெரியையா சத்தம் போடுவார். அவசர தேவைக்கு மழை நேரம் சிலர் இரவல் கேட்டார்கள். ஐயா கொடுத்து விடுவார். பெரியையா சத்தம் போடுவார். ஐயாவை ஏசுவார். ஐயா வாய் திறக்க மாட்டார். தமையனுக்கு அப்படி ஒரு மதிப்பு. மரியாதை. பெரியையா குடும்பத்தில் மூத்தவர். அவர் போட்டது தான் சட்டம்.

பெரியையா கொஞ்சம் வித்தியாசமான ஆள். ஐயாவுக்கு நேரே மூத்தவர் செத்துப் போனார். அவருக்கு மூத்தவர் பெரியையா. ஐயாவைச் சின்னப்பிள்ளையாக எப்பவும் நினைப்பார். ஐம்பது வயதிலும் ஐயா அவருக்கு ஐந்து வயதுப் பொடியன் மாதிரி. அவர் சொல்லுக்கு மறுப்புச் சொல்லுகிறதில்லை. நேருக்கு அவர் நிமிர்ந்து கதைப்பது மில்லை. அப்படி ஒரு பண்பாடு.

பெரியையாவுக்கு யாருக்கும் தலைகுனியாத குணம். எவரையும் எடுத்தெறிந்து பேசுவார். ஆள் ஒரு நெருப்பன். ஐயா அப்படியல்ல. எல்லாரையும் மதித்து நடப்பார். இல்லாதவர்களுக்கு இரங்குவார். இட்டிடைஞ்சலுக்கு உதவுவார். நல்லுறவைப் பேணுவார்.

புதுவருஷம் பிறக்கிறதுக்கு முன்னம் பெரியையா பஞ்சாங்கம் வாங்கிப் போடுவார். வாக்கிய பஞ்சாங்கம், காண்டாவனம், கெற்போட்டு, அமாவாசை பறுவம், அட்டமி நவமி எல்லாம் அறிந்து வைத்திருப்பார். திவஷம் கொடுக்கிறவை, நாள் நட்சத்திரம் பார்க்கிறவை, நாட் காரியம் செய்கிறவை எல்லாரும் வருவார்கள். அவர்களுக்கெல்லாம் பெரியையா பஞ்சாங்கம் பார்த்துச் சொல்லுவார். பஞ்சாங்கம் ஒரு கை ஏடு, வாழ்க்கையில் பல காரியங்களுக்கான திசைகாட்டி, ஒழுங்கு முறைப்படி வழிநடத்தும் சட்டப் புத்தகம்.

பெரியையா எல்லாரோடும் சங்காத்தம் வைத்துக் கொள்ள மாட்டார். அவரோடு அளவாகத் தான் நடப்பார்கள். அவரை ''மலடன்'' என்று சொல்வார்கள். அவருக்கு மகன் பிறந்து செத்தது பலருக்குத் தெரியாது. பெரியையா எங்களிலே நல்ல பட்சம். தம்பியிலே வலு வாரப்பாடு. எங்களுக்குச் சூரன் போர் பார்க்க நல்ல ஆசை. மாலைப்பட்ட பிறகுதான் சூரன் ஆட்டுவார்கள். பந்தங்களைக் கொளுத்திக் கொண்டு சூரனுக்கு முன்னுக்கும் பின்னுக்கும் ஓடுவார்கள். அந்த வெளிச்சத்தில் தான் சூரனைப் பார்க்க வேணும். பெரியையா எங்களைச் சூரனுக்குக் கூட்டிக் கொண்டு போவார். நாங்கள் சின்னப் பிள்ளைகள். சனத்துக்குள்ளே எங்களுக்கு வடிவாக தெரியாது. சனம் மறைத்துப் போடும். பெரியையா என்னைத் தோளில் தூக்கி இருத்துவார். பிறகு தம்பியைத் தோளிலே சுமப்பார். கன நேரம் அவன் இருப்பான். நான் பாரம். அவனோடு அவர் நல்ல ஒட்டு. நல்ல பாந்தம். நாங்கள் சூரன் பார்க்கிறது தோளில் இருந்து பெரியையாவைச் சூரன் ஆட்டுகிறது போல இருக்கும். இன்றும் சூரன் போர் பார்க்கப் போனால் பெரியையா தோளில் இருந்தது ஞாபகம் வரும்.

எங்களுக்குப் பாரம்பரியமான ஒரு கோயில், எங்களுடைய பாட்டனுடைய பாட்டன் கட்டினது செட்டிதறை அண்ணாமார் கோயில். அப்ப ஒவ்வொரு வருஷமும் வேள்வி நடக்கும். நாங்கள் பொங்குவோம். காலைப் பூசை நேரம் பெரியையா ஒரு பாட்டுப் பாடுவார். அந்தப் பாடலை வேறு எங்கேயும் கேட்கேலாது. ''மடந்தையன் செய் தவத்தினாலே . . . '' எனப் பாடலிலே வரும். மடந்தையன் கட்டின கோயில். கோயில் வரலாறு சொல்லும் பாடல். சுவாமிக்குத் தீபம் காட்டுகிற நேரம் என்னை, தம்பியை மாறி மாறித் தூக்கி அந்தத் தீப ஒளியைக் காண்பிப்பார். அந்த ஒளி எங்கள் மீது விழ வேண்டும்; அந்த ஒளியை நாங்கள் காண வேணும் என்று அவர் எண்ணினார்.

பெரியையா வசதியான ஆள். அவரிடம் பணம் இருந்தது. மூன்றடி உயரத்தில் ஒரு பெட்டகம் இருந்தது. அது காணாதென்று ஏழாலையில் ஒரு பெட்டகம் செய்வித்தார். ஏழாலைப் பெட்டகம் வலுதிறமாம். வடக்கன் மாட்டுச் சோடி பூட்டின வண்டிலில் அதை ஏற்றி வந்தார்கள். அதை இறக்க, தூக்கி வைக்கப் பட்ட பாடு! ஐந்தடி உயரமிருக்கும். அதை எல்லாரும் திறக்கேலாது. இரும்புப் பெட்டி தோற்றுப் போய் விடும்.

பெரியையா வட்டிக்குக் கொடுக்கிறவர். நகை அடைவாக வாங்குவார். கடனைக் கொடுத்து நகையை மீட்க ஐயா இருக்கிற நேரம் பார்த்து வருவார்கள். பெரியையா வட்டிக்காசில் ஒரு சதம் கழித்து விட மாட்டார். வட்டியும் முதலும் கணக்குப் பார்த்து முழுவதும் வைக்கும் படி கறாராக நிற்பார். அப்பா வட்டியில் ஒரு பகுதியைக் கழித்துச் சொல்லி மிச்சத்தைக் கொடுத்துப் போட்டுப் போகச் சொல்லுவார். அப்ப. . . பெரியையா ஒரு பார்வை பார்ப்பார், ஐயாவை. நெற்றிக்கண் திறந்து நக்கீரனைச் சிவன் பார்த்த பார்வை இதுவாகத் தான் இருக்கும். ஆனால் ஒரு வார்த்தை பேச மாட்டார். வந்தவர் போன பிறகு, ''உனக்கேன் இந்த வேலை?'' என்று மாத்திரம் கேட்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அநியாய வட்டி என்ரை பிள்ளைளுக்கு வேண்டாம்" என்னுவார் ஐயா.

தம்பி, தம்பியின் பிள்ளைகளில் எப்பவும் கரிசனையாக இருந்தார் பெரியையா. இப்ப, அப்படி ஒரு தமையனை, பெரியையாவைக் காண இயலாது.

நான் மூன்றாம் வகுப்புப் படித்த காலம், வகுப்பு வாத்தியார் எங்களை ஒரு வரிசையில் போக விட்டு பின்னாலே தடியோடு வந்தார். பக்கத்துச் சனசமூக நிலையத்துக்கு போய்ச் சேர்ந்தோம். அங்கே தான் ஒரு ரேடியோ பெட்டி கிடந்தது. பிலிப்ஸ் ரேடியோ. வாத்தியார் அதைப் போட்டுக் காட்டினார். பாட்டு வந்தது. பேச்சு வந்தது. எங்களுக்கு நல்ல புளுகம். அதற்கு முந்தி "பொன்னுக்கிராம்" பெட்டி எனக்குத் தெரியும். எங்கள் வீட்டிலும் கொஞ்சக் காலம் ஒரு பெட்டி கிடந்தது. அந்தப் பெட்டிக்குள்ளே ஓராள் இருந்து பாடுகிறார் என்று பெரியாக்கள் சொல்லுவினம். நான் நம்பவில்லை. அது பொய்யென்று எனக்குத் தெரியும்.

அப்ப நாங்கள் இருந்தது ஓலை வீடு. இரண்டு வருஷத்துக்கு ஒருகால் ஓலையாலே வேய்கிறது. ஊரவை எல்லாரும் வந்து ஓலை வெட்டி, கரம் போட்டுத் தருவார்கள். பிறகு ஒருநாள் விடியற்புறம் வந்து எல்லாரும் ஒண்டுகூட்டாக வேய்ந்து முடிப்பார்கள். முடிய, காலைச் சாப்பாடு, பலகாரம். யாரும் கூலி வாங்குகிறதில்லை. எல்லா வீடுகளிலும் வீடு வேய்கிறது இப்படித் தான்.

ஓலையில் செய்கிற ஒரு ஏதனம் பிளா. அது கள்ளுக் குடிக்கிறதுக்கு. பிளாவில் மூன்று வகை. பிளாவைக் கோலி ஒரு கட்டுப் போட்டு, தளிரை கீழே மடித்துக் கட்டி நறுக்கினால், அது கொண்டைப் பிளா. அது உயர் சாதிக் குடிகாரருக்கு. தளிரை நீட்டி இரண்டு கட்டுக் கட்டி விட்டால் அது இடைச்சாதிக்காரருக்கு. ஒரு கட்டுப் பிளா தாழ்ந்த சாதிக்காரருக்கு.

ஊரில் கடற்கரை ஓரமாகவுள்ள பிரதான வீதி அருகில் எங்களுடைய கள்ளுக் கொட்டில். சின்னத் தவறணை போல. அங்கே தான் நாங்கள் கள்ளு விற்கிறது. ஐயா, பெரியையா கள்ளிறக்கினார்கள். அத்தான் எஸ். எஸ். ஸி. படித்தவர். படிப்பைக் குழப்பிப் போட்டார். அவரும் கொஞ்சக்காலம் தொழில் செய்தார். நான் ஓய்வு நேரம் உதவிக்குப் போவேன். மத்தியானம் என்னை விட்டு விட்டு சாப்பிட வந்து விடுவார்கள்.

கள்ளுக் கொட்டிலுக்கு முன்னுள்ள வீதியைத் தாண்டினால் கடற்கரை. நான் கடற்கரை மணலுக்குப் போய் நின்று விளையாடுவேன். கள்ளுக் கொடிலைக் கவனித்துக் கொள்வேன். ஒரு நாள் நான் விளையாடிக் கொண்டு நிற்க, பக்கத்து வீட்டுக்காரன் அங்கே போய் போத்திலோடு கள்ளைத் தூக்கிக் கொண்டு போனார். நான் கண்டு விட்டேன். போய்க் கேட்கப் பயம். பெரிய உருவம். வழுக்கைத் தலை, தொந்தி வயிறு, சண்டியன் என்று பேர். றோட்டில நின்று ஆதாளி போட்டு துள்ளிக் குதிப்பார். அவர் பொலிசுக்கும் பயமில்லையாம். அவருக்கு ஒரு அக்கா இருந்தவ பொலிசுக்காரர் அவவின் சொல்லுக் கேட்டு நடப்பினமாம். நான் பயந்து பயந்து கொண்டிருந்தேன்.

மாலைப் படுகிறதுக்கு முந்தி ஐயா, பெரியையா, அத்தான் எல்லோரும் வந்தார்கள். நான் ஐயாவுக்கு மெல்லச் சொன்னேன். விளையாடப் போனதுக்கு ஐயா ஏசப்போகிறார் என்று பயந்தேன். ஐயா அப்படி ஒன்றும் சொல்லவில்லை. "ஆ. வரட்டும்" என்று மட்டும் சொன்னார்.

பொழுதுபடுகிற நேரம். அவர் ஒரு போத்தலோடு வந்தார். ஒரு பத்துப் பேர் வரை அப்ப அங்கே இருந்தார்கள். ஐயா போத்தலில் கள்ளு அளந்து கொண்டிருந்தார். அவர் போத்தலை ஐயாவுக்கு முன் வைத்தார் கொண்டைப் பிளா ஒன்று கையில் எடுத்துக் கொண்டு நிலத்தில் குந்தினார். பெரியையா, அத்தானும் அங்கே நிற்கிறார்கள்.

"செய்தது சரியான காரியமே?" ஐயா அந்தச் சண்டியனைப் பார்த்துக் கேட்கிறார்.

"என்ன காரியம்?" சண்டியன் முறைக்கிறார்.

"அட்டமருகிலே இருக்கிறவையளை நம்பித்தானே என்ரை குழந்தைப் பிள்ளையைத் தனிய விட்டிட்டுப் போறனான்"

"அதுக்கு. . . ."

"அதுக்கோ. . . ? செய்யிறதையும் செய்து போட்டு ஒண்டும் தெரியாதது போல. . ."

"என்ன செய்து போட்டன் நான்?"

"கள்ளுப் போத்திலைத் தூக்கிக் கொண்டு போய்விட்டாய்"

"என்ன கதைக்கிறாய் நீ. . ." பிளாவைக் கீழே போட்டு விட்டுச் சண்டியன் கெம்பி எழும்புகிறார்.

அப்ப அத்தான் பட்டென்று பாய்ந்து அவர் கொண்டு வந்து வைத்த போத்தலைக் கையில் எடுத்து, பளார் பளார் என்று இரண்டு மூன்று அடி மின்னல் வேகத்தில் அவர் பளுவில் போடுகிறார். பிறகு போத்தலை நிலத்தில் எறிந்து விட்டு, "எடுத்துக் கொண்டு போ" என கையை காட்டுகிறார்.

அவர் ஒரு தடவை நிமிர்ந்து பார்க்கிறார். பிறகு போத்தலைக் கையில் தூக்கிக் கொண்டு தலை குனிந்து திரும்பி நடக்கிறார். அவருக்குத் தெரியும், இவர்களிடம் பாளை சீவும் கூர்மையான கத்தி இருக்கிறதென்று. ஆனால், என்னுடைய குடும்பத்தவர்கள் யாரோடும் சண்டை போடுகிறவர்கள் அல்ல. வெட்டுக் கொத்துக்காரரல்ல. "கோடே"றி வழக்காடுகிறவர்களுமல்ல. அடக்குமுறை, அதிகாரம் கண்டு பணிந்து போகின்றவர்களுமல்ல.

மூன்று நாள் கழிந்தது. அடங்கி, ஒடுங்கி வந்தார் சண்டியன். ஐயா இருக்கிற நேரம் பார்த்து "அண்ணை நான் பிழை செய்து போட்டன்" என்றார். "சரி. . .சரி. . .அதைவிடு" ஐயா சமாதானப்படுத்தினார்.

எனக்கென்றால் பெரிய புதுமை. பெரிய சண்டியன் மடங்கிப் போனார். யாரும் வாலாட்டேலாது. ஆனால் தனித்து நிற்கப் பயம். நான் தானே சண்டியனைக் காட்டிக் கொடுத்தது. அதை மனதில் வைத்து. . . நினைக்கப் பயம். கூப்பிட்டு ஏவல் சொல்லுவார். வேறு ஒன்றுமல்ல. கடைக்குப் போய் வீடி வாங்கி வரச் சொல்லுவார். நான் தயங்குவேன். "நான் பாக்கிறன் நீ போய்விட்டு வா, மருமேன்" என்று நெருக்கம் காட்டுவார். எனக்கு மறுக்க முடியாது. அரைகுறை மனத்தோடு போவேன். இது அடிக்கடி நடக்கும். கள்ளும் வீடியுந் தான் அவருக்குச் சாப்பாடு. "கள்ளுக்கொள்ளாத வயிறுமில்லை. முள்ளுக் கொள்ளாத வேலியுமில்லை" என்பது பழமொழி. அவர் வயிற்றைப் பார்த்துத் தான் அந்தப்பழமொழி வந்திருக்க வேணும். கள்ளு எங்கே போகிறது தெரியாது. ஊற்ற ஊற்ற உள்ளே போய்க் கொண்டிருக்கும். அதுக்கு இசைவாக வீடிப்புகை. கட்டுக்கட்டாக பீடி வாங்குவார். கையிருப்புத் தீர்ந்ததும் உடன்தேவைக்குக் கொஞ்சம் தேவை. அது எனக்குத் தொல்லை. மறுக்கவும் மனத் தைரியம் இல்லை. கடையை நோக்கி நடப்பேன். மனம் கறுவிக் கொண்டிருக்கும். கடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடி முடிந்திருக்க வேணுமென்று நேர்ந்து கொண்டு போவேன். என் நேர்த்தி ஒருநாளும் பலிக்கவில்லை.

எப்படியும் பழி வாங்க வேணும். என்ன செய்யலாம்? ஒவ்வொரு நாளும் யோசிப்பேன். வழி தான் தெரியவில்லை. இதைப் போய் ஐயாவுக்குச் சொல்லவும் விருப்பமில்லை. பிறகும் என்னாலே கரைச்சல். நான் எதையாவது செய்ய வேணும். பலநாள் கழிந்து போனது. கடைசியாக ஒரு வழி பிறந்தது. அவர் கண்டு பிடித்தால்... அவ்வளவு தான். அவர் ஒன்றும் செய்யாது விட்டாலும் ஐயாவுக்குச் சொல்லுவார். ஐயா கொஞ்சம் வித்தியாசமான ஆள். நேர்மை நீதிப்படி நடக்கிறவர். அறிந்தால் நான் தப்பேலாது. பயமாகத் தான் இருக்கிறது.

ஆனால் பழி வாங்கும் எண்ணம் மனதை விட்டுப் போகவில்லை. ஒருநாள் வீடி வாங்கி வர என்னை அனுப்பினார். நான் மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். வீடி வாங்கிக் கொண்டு திரும்பி வரும் போது மறைவான ஒரு இடத்துக்குப் போனேன். வாங்கின மூன்று வீடிகளின் தலைப்பிலும் சிறுநீர் கழித்தேன். அவரிடம் கொண்டு போய்க் கொடுத்தேன். அவர் ஒரு வீடியை எடுத்து வாயில் வைத்து நெருப்பு மூட்டி ஆனந்தமாகப் புகைக்கத் தொடங்கினார். அவருக்குப் போதை மயக்கம். மூத்திர உறண்டை அடிக்கவில்லை.

எனக்குப் பெரிய புளுகம். அவர் வாயில் வைத்து இழுத்திழுத்து புகைவிட்டுக் கொண்டிருந்தார். நான் ஆனந்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்ப எங்கள் வீட்டுக்கு ஒருவர் அடிக்கடி வருவார். கிழமைக்கு ஒருதரமாவது வரத் தவறுவதில்லை. அவர் வராவிட்டால் அவரின் மனிஷி வருவா. பக்கத்து வீடுகளுக்கும் போவார்கள். எங்களுடைய ஊத்தை உடுப்புகள் எல்லாம் மூட்டையாகக் கட்டிக் கொண்டு போவார்கள். அம்மா வளவுக்குள்ளே வேலிப் பூவரச மரத்தில் வைக்கிற சீலையும் எடுப்பார்கள். ஒரு கிழமைக்குள்ளே ஊத்தை இல்லாமல் கொண்டு வருவினம்.

அவர்கள் வந்தால் எப்பவும் வெற்றிலை தான் கவனம். வாய்க்குள்ள அதக்கினதை துப்பிப் போட்டு உடனே போடுவினம். கொண்டு சிவந்து உரிஞ்சுபோய்க் கிடக்கும். பல்லெல்லாம் மஞ்சள் காவியாகக் கிடக்கும். அவர்கள் சாப்பிடுகிறது வெற்றிலை தான் எண்டு நான் அப்ப நினைப்பேன். போகிற போது வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை எல்லாம் எடுத்து கைக்குள்ளே வைத்துக் கொண்டு போவினம். வீட்டில் வெத்திலை இல்லையாக்கும் என்று நான் நினைப்பேன்.

எங்கள் வீடுகளில் எல்லாத்துக்கும் வெற்றிலை வைத்துத் தானே படைக்கிறது! எப்பவும் வெற்றிலை வீட்டிலே கிடக்கும். அவர்களின் வீட்டில் படைக்கின்ற வெற்றிலையை என்ன செய்கிறார்கள்? என்று நினைப்பேன். பிறகு தான் தெரியும். அவர்கள் வெற்றிலை படைக்கிறதில்லையாம். வேதக்காரராம். கத்தோலிக்க வேதக்காரராம். எப்படி கத்தோலிக்க வேதக்காரர் ஆனார்கள்? அறிய ஆசை. சொல்லுவார் தான் இல்லை. பாவம்! அவர்களுக்கு வெற்றிலை இல்லைத் தானே! கனக்க எடுத்துக் கொண்டு போகட்டும் என்று நான் நினைப்பேன்.

ஒருநாள் பெரியொரு புதினம். காலைநேரம் அந்த ஆள் கால் வைத்த ஒரு வெற்றிலைத் தட்டத்திலே வரிசையாக வெற்றிலைகளை அடுக்கி வைத்துக் கொண்டு தூக்கி வந்தார். எங்களுடைய ஐயாவுக்கு முன்னால் அதை வைத்து ஏதோ சொன்னார். ஐயா அந்த வெற்றிலையில் கொஞ்சம் காசு வைத்தார். அவர் வெற்றிலைத் தட்டத்தைத் தூக்கிக் கொண்டு சந்தோஷமாக சொல்லிக்கொண்டு திரும்பிப் போனார். பிறகு தான் எனக்குத் தெரியும். அது தான் "வெத்திலை வைச்சு அழைக்கிறது" என்று. அவர் வீட்டில் நடந்த ஏதோ ஒரு கொண்டாட்டத்துக்கு, ஐயா பிறகு போய் வந்தார்.

*(இன்னும் சொல்லுவேன்)*


# 'ஞானம்' சந்தா விபரம்

**உள்நாடு**

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | : | **ரூபா 50/=** |
| ஆண்டுச் சந்தா | : | **ரூபா 600/=** |
| ஐந்து ஆண்டுச்சந்தா | : | **ரூபா 3000/=** |
| ஆயுள் சந்தா | : | **ரூபா 15000/=** |

சந்தா காசோலை மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம். மணியோடர் வெள்ளவத்தை தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**இலகுவாக மேலதிகச் செலவின்றி சந்தா அனுப்பும் வழி :-** உங்கள் பகுதியில் உள்ள ஹட்டன் நஷனல் வங்கியில் **T. Gnanasekaran, HNB - Wellawatte** நடைமுறைக் கணக்கு இலக்கம் – 0090672606 என்ற கணக்கில் வைப்பு செய்து வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.

***அனுப்ப வேண்டிய பெயர்/ முகவரி :***

**T. Gnanasekaran**
**Gnanam Branch Office**
3-B, 46 th Lane, Wellawatte.

**ஞானம் விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| பின் அட்டை | : | **ரூபா 7000/=** |
| முன் உள் அட்டை | : | **ரூபா 5000/=** |
| பின் உள் அட்டை | : | **ரூபா 5000/=** |
| உள் முழுப்பக்கம் | : | **ரூபா 3000/=** |
| உள் அரைப்பக்கம் | : | **ரூபா 1500/=** |

| **வெளிநாடு** | ஓராண்டு | இரண்டு ஆண்டு | மூன்று ஆண்டு |
|---|---|---|---|
| **Australia (AU$)** | **35** | **70** | **100** |
| **Europe (•)** | **25** | **50** | **70** |
| **India (Indian Rs.)** | **500** | **950** | **1400** |
| **Malaysia (RM)** | **50** | **95** | **140** |
| **Canada ($)** | **35** | **70** | **100** |
| **UK (£)** | **15** | **30** | **40** |
| **Other (US $)** | **25** | **50** | **70** |

**ஐந்து ஆண்டுச் சந்தாதாரர்களுக்கு ஒரு வருடம்**
**'ஞானம்' மேலதிகமாக அனுப்பப்படும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகா தர்மம்

-இலக்கியசச்சித்தன்

''கவிதை எண்டு சொல்லி எப்படியெல்லாமோ எழுதிக் கொண்டிருக்கினம்; பத்திரிகை ஆசிரியர்களும் அந்தக் கவிதைகளைக் கொண்டு, பக்கங்களை நிரப்புகினம். வரியை முறிச்சால் வாறது கவிதை எண்டு கனபேர் நினைக்கினம். கன காலத்துக்குப் பிறகு, நல்ல மரபுக் கவிதை ஒண்டைப் போன வாரம் வாசிச்சனான்... உங்களை நேரிலை சந்தித்துப் பாராட்டவேணும் எண்டு நினைச்சன்... வந்திட்டன்''.

''இப்பவும் நல்ல மரபுக் கவிதைகள் வெளியாகின்றன என்பதை கேட்கவே சந்தோஷமாய்க் கிடக்குது. அதுசரி... நீங்கள் ஆற்றை கவிதையை வாசிச்சனீங்கள்?''

''உங்களுடையதுதான்...நீங்கள் எழுதிய கவிதையைப் பற்றித்தான்...''

''என்னுடையதோ...எந்தப் பத்திரிகையிலை வந்திருக்குது?''

தன்னுடைய ஞாபகத்தை மீட்டுப் பார்க்க முயல்வதை அவருடைய முகபாவம் காட்டியது.

''வேறை ஆக்களின்ரை கவிதையெண்டால், நான் ஏன் உங்களைப் பாராட்ட ஓடியாறன்...?'' என்று கேட்டுவிட்டுப் பத்திரிகையின் பெயரைச் சொன்னேன்; கவிதையின் தலைப்பைச் சொன்னேன். முதல் தடவை வாசித்தபோதே, என் மனதிற் பதிந்துவிட்ட சில அடிகளையும் திருப்பிச் சொன்னேன்.

ஆரம்பத்தில் அவரிடம் காணப்பட்ட உற்சாகமும் பூரிப்பும், அந்த வரிகளை நான் சொல்லி முடிக்கும்வரை நீடித்ததாகச் சொல்ல முடியாது. முகத்தில் ஏற்பட்ட வாட்டத்தை அவர் மறைக்க முயலவில்லை.

'திக்' கென்றது எனக்கு

கவிதை அடிகளைத் தப்பும் தவறுமாக ஒப்புவித்து விட்டேனோ...?

'வேறு யாரோ எழுதிய கவிதையை, இவர்தான் எழுதினார் என்று பிழையாக முடிவு செய்து விட்டேனோ?'

என்னுடைய தடுமாற்றத்தை – குழப்பத்தை உணர அவருக்கு அதிக நேரம் ஆகவில்லை. எழுத்தாளரல்லவா?

''அந்தக் கவிதையை நான் ஒருக்காப் பாக்கலாமா?'' என்றார். ஆவலுடன்.

'உங்களுக்கு அனுப்ப வேண்டிய பிரதியை அவை அனுப்பியிருப்பினம் எண்டு நினைச்சன்...' என்றேன் ஒருவித குற்ற உணர்வுடன்.

''அவை எண்டால் எவை? பத்திரிகைக் காறரோ?''

''என்னுடைய கவிதை வெளிவந்தது, நீங்கள் இப்ப சொல்லும் வரைக்கும் எனக்குத் தெரியாது... எவ்வளவோ காலத்துக்கு முந்தி நான் அனுப்பிய கவிதை அது'' என்று சொன்னவர் தொடர்ந்தார்.

''ஒரு முப்பது வருஷமாய் நானும் எழுதிக் கொண்டிருக்கிறன்... பத்திரிகை ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள் பலருடன் பழகியிருக்கிறன். அவை எனக்குக் கொடுத்த ஊக்கத்தினாலைதான் நான் இன்னமும் இந்தத் துறையிலை நிலைச்சிருக்கிறன். பத்திரிகையை வெளியிட்டவர்களிடம் வியாபார நோக்கம் இருக்கவில்லை எனச் சொல்ல முடியாது. பத்திரிகை ஆசியர்களும் சம்பளத்திற்காகத்தான் வேலை செய்தவை. ஆனால் எல்லாரிடமும் ''பத்திரிகை தர்மம் சம்பந்தமான அறிவு நிறைய இருந்தது. எதை எழுதவேண்டும். அதை எப்படி எழுத வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் மிகவும் தெளிவாகவே தெரிந்து வைத்திருந்தார்கள். எழுத்தாளர்களை மதிக்கிற பண்பும் இருந்தது. கதை, கவிதையை நாங்கள் அனுப்பினால், அவற்றைப் படித்துப் பார்த்து, அவை வெளியிடப்படுமா? எப்போது வெளியிடப்படும்? என்ற விபரங்களை எழுத்தாளர்களுக்கு அறிவிக்கும் வழக்கம் இருந்தது. வெளியிடத் தகுதியில்லாதவற்றை, உற்சாகமூட்டும் குறிப்புக்களுடன் திருப்பியனுப்புவார்கள். கதை, கவிதை வெளிவரும் இதழ்களை, எழுதியவர்களுக்கு அனுப்புவார்கள். ஆனால் இன்றைய நிலைமை என்ன? பத்திரிகை அலுவலகங்கள் எல்லாம் நவீனமயப்பட்டுவிட்டன. கவர்ச்சிகரமான முறையிலே சஞ்சிகைகள் வெளியிடப் படுகின்றன. ஆனால் மேற்சொன்ன அந்தப் பண்புகள்தான் மறைந்துவிட்டன. தன்னுடைய ஆக்கம், வெளிவருமா? எப்போது வெளிவரும்? என்பனவற்றை அறியும் வாய்ப்பு எழுத்தாளனுக்கு இல்லை; வெளிவந்ததாகக் கேள்விப் பட்டாலும், தன்னுடைய பணத்தைக் கொடுத்து, குறிப்பிட்ட சஞ்சிகையையோ பத்திரிகையையோ வாங்கா விட்டால், தன் ஆக்கத்தை அச்சில் பார்க்கும் வாய்ப்பும் அவனுக்குக் கிடைக்காது. நீங்கள் இப்ப சொல்லியிருக்காவிட்டால், என் கவிதை பிரசுரமான சங்கதி எனக்கே தெரியாமற் போயிருக்கும்'' – தனக்கு அவமானம் இழைக்கப்பட்டதான ஆத்திரத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு எனக்கு விடைதந்தார்.

என் வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்த பொழுது, சமீபத்தில் மாத சஞ்சிகையொன்றில் வெளியான ஓர் ஆசிரியருக்குக் கடிதம் என் நினைவுக்கு வந்தது. அந்தச் சஞ்சிகை ஆசிரியரின் விரிவான பேட்டியொன்று வேறொரு சஞ்சிகையில் வெளிவந்ததாம். ஆனால், பேட்டிகொடுத்த; ஆசிரியர், இன்னமும் தன்னுடைய பேட்டியை வாசித்துப் பார்க்கவில்லையாம்! காரணம், பேட்டிக்கட்டுரை, வெளிவந்த இதழ், இன்னமும் அவருக்கு அனுப்படவில்லையாம். 'தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்' என்பதை எல்லாத் தரப்பினரும் உணர்ந்தால்...!

**உங்களுக்கு:** வாரப் பதிப்புக்கள், சஞ்சிகைகளில் நல்ல ஆக்கங்களை வாசிக்க நேர்ந்ததால் அவற்றை எழுதியவரைப் பாராட்டிக் கடிதம் அனுப்புவது என்னுடைய வழக்கம். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நான் செய்யும் ''மகத்தான பணி'' இது! என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்! அந்த வழக்கத்திற்கமைய, ஒரு கவிஞரைப் பாராட்டச் சென்றபோது, நடந்தவற்றை எனக்குத் தெரிந்த ஒரு வடிவத்தில் எழுதியுள்ளேன். இதை ஒரு சிறு கதை என்று நினைத்து வாசித்துவிட்டு, 'ப்பூ... இவ்வளதானா?' என்று உதட்டைப் பிதுக்கலாம்; இப்போதைய பத்திரிகை நிறுவனங்களையும், பத்திரிகை ஆசிரியர்களையும் 'நாசூக்' காகத் தாக்கியிருக்கிறார் எனப் பரவசப்படலாம். அர்த்தமற்ற இந்த விஷயத்துக்காக 'ஞானம்' இதழின் சில பக்கங்களைப் பாழாக்கிவிட்டாரே என என்னைக் கண்டிக்கலாம். உங்களுடைய பார்வையின் கோணங்களைப் பொறுத்தது நீங்கள் எதையும் செய்யலாம்! அது வாசக தர்மம்! ஆனால் ஒன்று: ஊடக சுதந்திரம் சம்பந்தமான சட்டங்கள், பத்திரிகையாளர்களின் ஒழுக்கக் கோவை என்பவை வேறு; நான் குறிப்பிட்ட பத்திரிகா தர்மம் என்பது வேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பொய் சொல்லும் சமூகத்தைச் சேர்ந்தவனல்ல!

-சை. பீர்முகம்மது, *மலேசியா*

'2002ல் இலங்கையில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாடு – சில விளக்கங்கள்' என்ற மதிப்புமிகு அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் கட்டுரையைப் படித்த பொழுது வேதனைப்பட்டதைவிட அவரின், தகவல் போதமை கண்டு சிரிக்கவே முடிந்தது.

அரசியல் கலந்த மாநாடு எப்படி இருக்கும், அப்படி கலக்காத மாநாடு எப்படி இருக்கும்? என்று நான் விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டுள்ளார்.

அரசியல் கலந்த மாநாடு 2002ல் நடந்த கொழும்பு மாநாடு போல் இருக்கும்.

'இனப்பிரச்சினை சம்பந்தமாக பேசுவதற்கு இலங்கை வந்திருந்த வெளிநாட்டுப் பிரமுகரை பிரதமர் உடனே சந்திக்க வேண்டியிருந்தால் அவர் அரங்கை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் சில முக்கியஸ்தர்களுக்கான கௌரவத்தை வழங்க வேண்டியிருந்தது' என்று சொல்லியுள்ளார். அதோடு கௌரவ 'அமைச்சர்' நிகழ்ச்சி நிரலை மாற்றும்படி உத்தரவிட்டார். என்றும் கூறியுள்ளார்.

பிரதம மந்திரி அரசியல் வாதி – ரவூப் ஹக்கீம் அரசியல் வாதி – இவர்களுக்கு நேரம் கிடைப்பதே அபூர்வம். ஒர் இலக்கிய விழாவை முழுமையாக நடத்த முடியாமல் போனதற்கு அவர்கள் மட்டுமா காரணம்?

சரி டத்தோ இக்பாலை ரணில் விக்கிரமசிங்கே இருக்கும் பொழுதே பேச வைத்திருக்க வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லையே! – அவர் சென்ற பிறகாவது எங்கள் 'மலேசியக் குரலை ஒலிக்க வைத்திருக்கலாம்.'

அரச செலவில் நடந்த மாநாடு அது என்று கூறுகிறார். சரி அதற்கு ஏன் எங்களை அழைத்தீர்கள்? எங்கள் சொந்தச் செலவில் வந்து உங்கள் விருந்து சாப்பிடவா? 38 பேராளர்கள் மலேசியாவிலிருந்து வந்தோம். இலங்கை இலக்கிய வாதிகளை நினைவுக்கு வருகிறது.

''முஸ்லிம் காங்கிரசில் உட்கட்சி பிரச்சினை ஆரம்பித்து விட்டது. ரவூப் ஹக்கிமின் தலைமைத்துவத்தை ஏற்காத சிலர் பிரச்சினைகள் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். அதை சரிக்கட்டவே அரசே பணம் கொடுத்து இந்த மாநாட்டை நடத்துகிறது'' என்று கூறினார் – அது முற்றிலும் சரியாகவே இருக்கிறது.

மாநாடு முடிந்து நாங்கள் திரும்பிய பிறகு முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்து விட்டது. எந்தக் காலத்திலும் முஸ்லீம்கள் அரசியலைப் பொறுத்தவரையில் அது இலங்கை யாகட்டும் – தமிழ் நாடாகட்டும் – பாகிஸ்தானாகட்டும் வேறு எந்த முஸ்லிம் நாடுகளிலும் ஒத்துக்குரல் இருந்ததில்லை. பதவி சுகம் தேடும் இவர்களை விளாவாரியாக சொல்ல தேவையில்லை. என்னிடம் நீண்ட பட்டியலே உள்ளது.

'ரவூப் ஹக்கிம் கவிதை படிப்பதற்காக ஒரு மாநாடா' என்று கேட்டுவிடலாம். அது நாகரிகமா இலங்கை முஸ்லிம்களுக்கு விருந்தாளிகளை எப்படி நடத்த வேண்டுமென்பது இன்னும் தெரியவில்லை.

உங்கள் அரசியல் வாதிகளை மணிக்கணக்கில் பேச வைப்பீர்கள், கவிதை மழை பொழிய வைப்பீர்கள், ஆனால் மலேசியாவிலிருந்து வந்த பேராளர்களின் தலைவரை கூப்பிட்டு மேடையில் அமரவைத்து பேச விடாமல் அனுப்பிவிடுவீர்கள்.

மலேசியர்கள் எட்டு பேருக்கு கௌரவம் அளிப்பதாக நான் சொன்னது 'பொய்' என்று அஷ்ரஃப் சிஹாப்தீன் கூறுகிறார்.

பொய் சொல்லும் மதத்திலிருந்து வந்தவனல்ல நான்! அப்படியான குடும்பச் சூழலிலும் வளர்க்கப்பட்டவனல்ல! என்னைப்பற்றி சரியாக தெரிந்தவர் அல்ல இவர்.

இங்கே மலேசியாவிலிருந்து மாநாட்டுக்குப் புறப்படும் பொழுதே அந்த எட்டுப் பேரின் விபரங்களைக் கேட்டு வாங்கினார்கள் – பிறகு அவர்களின் விபரங்கள் மாநாட்டின் இணையதளத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. உங்கள் இணையதளம் அடிக்கடி 'இடம் மாறுவதை' நாங்கள் எப்படி தெரிந்து கொள்வது. ரணில் விக்கிரமசிங்கேயின், கப்பல் துறை அமைச்சுக்கு விபரங்கள் போய் சேரவில்லை போலும். ஏன் என்றால் அதன் பிறகு ராஜபக்சேயின் அமைச்சரவை முகவரி எங்களுக்குத் தெரியவில்லை, நீங்கள் அடிக்கடி இடம் மாறுவது எங்கள் தப்பா? இலங்கை இலக்கிய வாதிகளுக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து சிறப்பு செய்தீர்கள் அவர்களின் விபரங்களை, இலக்கியப் பணிகளை சிறப்பாகச் சொல்லி செய்யாமல் ரவூப் ஹக்கிம் கவிதை படிப்பதற்காகவே நேரத்தை ஒதுக்கினீர்கள். அவசரம் அவசரமாக இலக்கியவாதிகள் மாலைகள் பொன்னாடைகளை வாங்கிக் கொண்டு போனது பார்க்க படு வேடிக்கையாக இருந்தது.

நான் பொய் சொல்கிறேன் என்று நீங்கள் சொல்வது உங்கள் ஞாபக மறதி காரணமாக இருக்கலாம். தயவு செய்து மலேசிய இஸ்லாமிய அறவாரியத் தலைவர் டத்தோ டாக்டர் இக்பால் அவர்களிடம் நான் சொன்னது பொய்யா, உண்மையா என்பதை கேட்டு தெளிவு படுத்திக் கொள்ளுங்கள்.

அடுத்து 'ஆரம்ப நாள் நிகழ்ச்சி முடிவடைவதற்குள்ளேயே வானொலியில் மாநாடு பற்றிக் குறை சொன்னார் நபர்' என்று என்னை சொல்லியுள்ளீர்கள் உங்களுக்கு என்னவாயிற்று அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களே?

மாநாடு 22, 23, 24, அக்டோபர் 2002ல் நடந்தது எனது வானொலி பேட்டி 2002. 10. 25 – திங்கட்கிழமை வந்தது 'பேட்டி எடுத்தவர் அல்ஹாஜ். M.Z. அகமது முனுவர் இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி அமைப்பாளர். அது நேரிடை ஒலிபரப்பு என்பதால் பல முஸ்லீம் பெண்களும் பிரமுகர்களும் என்னிடம் கேள்வி கேட்டார்கள். அவர்களின் கேள்விகளுக்கே நான் அந்த பேட்டியின் பெரும் பகுதிகளுக்கு பதில் தந்தேன். நீங்களே 'பொய்யர்' நானல்ல. தயவு செய்து S. L. B. Cக்கு தொடர்பு கொண்டு எனது பேட்டி எப்பொழுது வந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை தெரிந்து கொள்ளுங்கள். மாநாட்டின் முதல் நாளே குறை சொல்ல நான் மடையன் இல்லை.

நான் ஏதோ எனது கட்டுரை பற்றி மட்டுமே பேசியதாக அவர் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளார் நீங்கள் கொடுத்த இணையதள முகவரிக்கே மைதீ. சுல்தானின் கவிரயங்கக் கவிதை அனுப்பட்டது. அதே நாளில் மலாயா பல்கலைக்கழகப் பேராசியர்கள் டாக்டர் இராஜேந்திரன், டாக்டர் சபாபதி, டாக்டர். சிவபாலனின் கட்டுரைகளும் அதே முகவரிக்கு அனுப்பப்பட்டது. அவை ஏன் இடம் பெறவில்லை? உங்கள் மாநாட்டுக்கு முஸ்லிம் காங்கிரசின் அப்போதைய நிலையை சரி கட்டுவதே நோக்கமாக இருந்துள்ளது.

கொழும்பு மாநாட்டின் தீர்மானங்கள் என்ன? படித்த கட்டுரைகளின் மேல் எடுத்த முடிவுகள் என்ன? அடுத்த கட்ட இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்கு தூர நோக்குப் பார்வை அந்த மாநாட்டில் உருவானதா?

கட்டுரை வாசிப்பாளர்களுக்கு நான்கு முதல் ஐந்து நிமிடங்களே கொடுக்கப்பட்டது. மாநாட்டின் முக்கியத்துவமே கட்டுரைகளின் ஆய்வில் தான் உள்ளது. நீங்களோ அரசு விழா, அரசே பணம் கொடுத்தது எனவே அரசியல் வாதியான தலைவர் சொல்படியே நடக்க வேண்டியது எங்கள் கடமை என்பது போல் பேசுகிறீர்கள். இங்கேதான் அரசியல் மாநாட்டிற்கும் இலக்கிய மாநாட்டிற்கும் உள்ள வேற்றுமைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஓர் அனைத்துலக மாநாடு என்பது மிகப்பெரிய கட்டமைப்பைக் கொண்டது. நிர்வாகத் திறன் இதில் மிகமிக அவசியம். கொஞ்சம் கூட நிர்வாகத் திறனற்ற முறையில் நாம் மாநாடுகளை நடத்த முடியாது.

நான் மலேசியாவில் முதல் தமிழாராய்ச்சி மாநாடு முதல் ஆஸ்திரேலியாவில் நடந்த 'நீதியுடன் கூடிய சமாதானம்' என்ற இலங்கை இனப்பிரச்சனை பற்றிய மாநாட்டிலும் – நேபாளத்தில் நடந்த ஆசிய பசுபிக் குத்தகையாளர்கள் மாநாட்டிலும் மலேசிய தமிழ் இளைஞர் மணி மன்றங்களின் ஏழு மாநாடுகளிலும் கலந்து கொண்டவன் மட்டுமல்ல அதில் முக்கியப் பங்களிப்பவனாகவும் இருந்துள்ளேன். மாநாடு எதற்காக கூட்டுகிறோமோ அதன் நோக்கமே முதன்மை பெற வேண்டும். அரசியல் காரணங்களுக்காக நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்வது எப்படி இலக்கிய மாநாடாக இருக்க முடியும்?

# "நிழல்கள்"

## தமிழ் குறும்பட விழா– அவுஸ்திரேலியா

–கே. எஸ். சுதாகர்

மெல்பர்ன் தமிழ்ச்சங்கத்தின் இரண்டாவது தமிழ்க் குறுந்திரைப்பட விழா. அண்மையில் மெல்பர்னில் உள்ள மல்கிரேவ் என்ற இடத்தில் CCTC திரையரங்கில், மண்டபம் நிறைந்த இரசிகர்களின் முன்னிலையில் நடைபெற்றது. விக்டோரிய பல்லின கலாச்சார ஆணையத்தின் (Victorian Multicultural Commission) ஆதரவில் நடைபெற்ற இவ் விழாவின் வரவேற்புரையை மெல்பர்ண் தமிழ்ச்சங்கத்தின் ஸ்தாபகர் திரு. ந. சுந்தரேசனும், துவக்கவுரையை பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த விக்டோரிய பல்லின கலாசார கழகத்தின் ஆணையாளர் திருமதி உஷா சர்மா அவர்களும் நிகழ்த்தினார்கள். "தமிழ்க்குறும்படத்துறை – ஓர் கண்ணோட்டம்" என்ற தலைப்பில் திரு. லெ. முருகபூபதி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர் தமதுரையில்– திரைப்படத்துறையின் வளர்ச்சி, விஞ்ஞானத் தொழில் நுட்பத்தினால் அதனில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிக் கூறினார். தொலைக்காட்சி, கம்பியூட்டர்களின் வருகையின் பிற்பாடு படப்பிடிப்புகள் நிகழ்த்தப்படும் ஸ்ருடியோ, மற்றும் சினிமா தியேட்டர்களுக்கு நடந்த அவலங்கள் பற்றி தெரிவித்த அவர், இந்தக் கசப்பான உண்மைகளின் பின்னணியிலிருந்து தான் இந்தக் குறும்படத்துறை வேகமாக முன்னேறி வருகின்றது என்றார்.

இந்தக்குறும்பட விழாவில் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட பத்துப் படங்கள் காண்பிக்கப்பட்டன. படங்களின் தலைப்புக்களும் அதை இயக்கியவர்களின் பெயர்களும்– மறைபொருள் (பொன் சுதா), ஒரு அழகிய பூங்காவில் சில நிகழ்வுகள் (ராம்), தாய்நாட்டு அகதிகள் (ஜீவரத்தினம்), SENSE (மூர்த்தி), திருமணங்கள் சொர்க்கத்திலா (லெட்சுமி), மறக்கப்பட்ட மனிதர் (சுகவனம்), தோல்கூத்து (சரவணன்), சுதந்திரம் (ரூபன்), தேரு வருதே (பாலகுமார்), அட்சய பாத்திரம் (சஞ்சய்). இடைவேளைக்கு முன்பும் பின்புமாக இரண்டு பகுதிகளாக இப்படங்கள் காண்பிக்கப்பட்டன. இறுதியாக பேராசிரியர் கா. சிவத்தம்பியின் உரையுடன், "சிவாஜி– ஒரு பண்பாட்டியற் குறிப்பு" என்ற ஆவணப்படம் காண்பிக்கப்பட்டது. செவாலியர் சிவாஜிகணேசனை நினைவு கூருமுகமாக இந்த ஆவணப்படம், முதல் தடவையாக அவுஸ்திரேலியாவில் காண்பிக்கப்பட்டது. இதன் ஒளிப்பதிவு, தொகுப்பு, இயக்கம் என்பவற்றை இலங்கையைச் சேர்ந்த தற்போது சிங்கப்பூர் பொது நூலகத்தில் பணியாற்றும் கலைஞர் திரு. மூர்த்தி என்பவர் செய்திருந்தார்.

இந்தக் குறும்படங்களில் சில மிகக்குறுகிய நேரத்தையும், சில நீண்ட நேரத்தையும் எடுத்துக் கொண்டன. "தோல்கூத்து" என்ற படம் மனிதர்கள் அல்லாது முற்றுமுழுதாக செருப்புகளை வைத்து வித்தியாசமாக எடுக்கப்பட்டிருந்தது. சில படங்களில் மனிதக் குரல்கள் அற்று உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

சில படங்களிற்கு ஒலி, ஒளி அமைப்பில் இன்னும் சற்றுக் கூடுதல் கவனம் எடுத்திருக்கலாம் போலத் தோன்றியது.

இக்குறும் படங்களை வகைப்படுத்தும் நடுவர்களாக இலங்கையிலிருந்து வருகை தந்த வானொலி ஊடகவியலாளர், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தொகுப்பாளர் அபர்ணா சுதன் அவர்களும், எழுத்தாளர்கள் திருமதி உஷா சிவநாதன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் இருந்தார்கள். அவர்களின் பார்வையில் "சுதந்திரம்" முதலாவது இடத்தையும், "அட்சயபாத்திரம்" இரண்டாவது இடத்தையும், "தோல்கூத்து" மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன.

மெல்பர்ண் தமிழ்ச்சங்கம் இங்கு வதியும் தமிழ் மக்களின் மத்தியில் குறும்படங்களைப் பார்க்கும் பழக்கத்தை உருவாக்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்


கலாநிதி. துரைமனோகரன்

## இசையமைப்பாளர்கள் - அன்றும் இன்றும்

தமிழ்த்திரையிசை காலந்தோறும் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாக வளர்ந்து வந்துள்ளது. பல இசையமைப்பாளர்கள் தமிழ்த் திரையிசைக்கு மக்கள் மத்தியில் புகழ்தேடித் தந்துள்ளனர். கர்நாடக இசையை மக்கள் ரசிக்கும் வண்ணம் திரையிசைக்குள் பல இசையமைப்பாளர்கள் கொண்டு வந்தனர். ஜி. ராமநாதன், சுதர்சனம், டி.ஜி. லிங்கப்பா, சுப்பையா நாயுடு, ரி.ஆர். பாப்பா, கே.வி. மகாதேவன், விஸ்வநாதன் – ராமமூர்த்தி, இளையராஜா உட்படப் பலர் தமது திறமையாலும் உழைப்பாலும் தமிழ்த் திரையிசையை வளர்த்து வந்துள்ளனர். இவர்களோடு, பாடகர்களாக இருந்து இசையமைப்பாளர்களாக விளங்கிய கண்டசாலா, ஏ.எம். ராஜா போன்றோரும் தமிழ்த் திரையிசை வளர்ச்சிக்கு உதவியவர்கள்.

பழைய இசையமைப்பாளர்களின் திரையிசைப் பாடல்களில் இசையினிமை, குரல் இனிமை, உச்சரிப்புச் சுத்தம் போன்றவை சிறந்து விளங்கும். அவர்களது இசை, இனிய தென்றலைப் போன்று செவிகளை வருடிச் செல்லும். பாடலின் பொருள் தெளிவாகப் புரியக்கூடிய முறையில் பாடகர்களின் குரல்வளத்தைச் சேதப்படுத்தாமல் வாத்தியங்கள் அளவோடு இனிமையாக இயங்கும். பாடல்களுக்குத்தான் வாத்தியங்களே தவிர, வாத்தியங்களுக்காகப் பாடல்கள் அல்ல என்பதை அன்றைய இசையமைப்பாளர்கள் உணர்ந்திருந்தனர்.

திரைப்படங்களில் எந்த எந்த நடிகர், நடிகைகளுக்கு எவரெவரின் பின்னணிக்குரல் பொருத்தமானது என்பதிலும் அன்றைய காலத்தில் கவனம் செலுத்தப்பட்டது. இசையமைப்பாளர் மட்டுமன்றி, தயாரிப்பாளர்களும் இவ்விடயத்தில் போதிய அக்கறை செலுத்தினர், இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். ஏ.வி.எம். மின் திரைப்படம் ஒன்றில் சிவாஜிகணேசனும், சிவகுமாரும் நடித்தனர். அத்திரைப்படத்தில் சிவகுமாருக்கும் பின்னணி பாடவேண்டிய நிலையில், சிவாஜிகணேசனுக்கான பாடல் என்று கருதிக்கொண்டு அவருக்கேற்ற முறையில் ரி.எம். சௌந்தரராஜன் சுசீலாவுடன் ஒரு பாடலைப் பாடினார். பாடல் ஒலிப்பதிவின் பின் அப்பாடலைக் கேட்டுப் பார்த்த ஏ.வி. மெய்யப்பச் செட்டியார், ''இது சிவகுமாருக்குரிய பாடல், சிவாஜிக்குப் பாடுவது போலப் பாடாமல், சற்று மென்மையாகப் பாடவேண்டும்'' என்று ரி.எம். சௌந்தரராஜனிடம் கேட்டுக்கொண்டார். ரி.எம்.எஸ். ஸும் அவரது கருத்தை ஏற்று, சிவகுமாருக்கு ஏற்ற முறையில் அப்பாடலைத் திரும்பப் பாடினார். பழைய திரையிசையைப் பொறுத்தவரை, தயாரிப்பாளர், இயக்குநர் முதற்கொண்டு இசையமைப்பாளர், பாடகர், பாடகிகள் அனைவருமே அர்ப்பணிப்பு உணர்வோடு திரையிசையை வளர்த்தனர். அதனால், எத்தனையோ அற்புதமான பாடல்கள் உருவாகி இன்றும் காலத்தால் அழியாத இடத்தைப் பெற்றுள்ளன.



இளையராஜா காலம்வரைக்கும் தமிழ்த்திரையிசை காலந்தோறும் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பெற்று வந்திருக்கிறது. சிறந்த பாடகரான ரி.எம். சௌந்தரராஜனைப் புறக்கணித்து நடந்து கொண்டார் என்பதைத் தவிர்த்துப் பார்க்கும்போது, இளையராஜாவின் இசையில் வளம் இருக்கிறது. ஆனால், அவருக்குப் பின்னர் புகழ்பெறத் தொடங்கிய ஏ.ஆர். ரஹ்மான் காலம் முதல் தமிழ்த் திரையிசைக்கு மங்குதிசை ஏற்படத் தொடங்கிவிட்டது. ரஹ்மான் திறமையான இசையமைப்பாளர் என்பதில் கருத்துவேறுபாட்டுக்கு இடமில்லை. அவரது சில பாடல்கள் தமிழ்த் திரையிசையின் புதிய பரிமாணத்தையும், வளத்தையும் காட்டுகின்றன. அதேவேளை, பல பாடல்கள் பாடல் பொருள் விளங்காத, உச்சரிப்புத் தெளிவில்லாத, ஆங்கிலச் சொற்களையும் மேலைத்தேயப் பாணியையும் தேவையின்றிப் புகுத்துகின்ற, காதுகளுக்குப் கர்ணகடூரமாக ஒலிக்கும் வாத்தியச் சத்தங்களைக் கொண்ட காட்டுக் கூச்சல்களாகவே விளங்குகின்றன. பின்வந்த சில புதிய இசையமைப்பாளர்களும் ரஹ்மானையே பின்பற்ற முயல்வதாகத் தெரிகிறது. யுவன் சங்கர்ராஜா தமது தந்தை இளையராஜாவைப் பின்பற்றுவதை விட ரஹ்மானையே அதிகம் பின்பற்ற விரும்புகிறார் என்று தோன்றுகிறது. கார்த்திக்ராஜாவும் ஏறத்தாழ அதேபோலத்தான்.

இப்போதெல்லாம் நடிக, நடிகைகளை மனங்கொண்டு பாடகர், பாடகிகளைப் பாட வைப்பதில்லை. குரல் பொருத்தம் இருக்கிறதோ இல்லையோ, யாரையாவது வைத்துப் பாடல்களைப் பாடுவித்தால் போதும் என்ற நிலையே காணப்படுகிறது. முன்னர்போலத் தயாரிப்பாளர், இயக்குநர், நடிக நடிகைகள் குரல் பொருத்தம் பற்றிப் பெரும்பாலும் கவலைப்படுவதில்லை. இப்போதைய பல ஆண்குரல்களில் குளிர்ச்சி இல்லை. பல பெண் குரல்கள் கீச்சுக் குரல்களாக உள்ளன. யார் பாடுகிறார்கள் என்பதைக் குரலிலிருந்து இனம் காணமுடியாமல் இருக்கிறது. பெயரைக் கேட்டுத்தான் பாடுபவர் யார் என்று தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. ஏதோ தங்கள் வேலை முடிந்து, பணம் தங்களது கைக்குக் கிடைத்தால் போதும் என்ற முறையிலேயே பல இசையமைப்பாளர்கள் இயங்குகின்றனர். இன்றைய இசையமைப்பாளர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களில் ஓர் அவசரகோலத்தையே தரிசிக்க முடிகிறது. அருமையாகவே சில பாடல்கள் எம்மைக் கவரும் வண்ணம் தரம் கொண்டவையாக விளங்குகின்றன.

இப்போதைய இசையமைப்பாளரிடம் இன்னொரு கோமாளித்தனத்தையும் காணமுடிகிறது. பழைய இசையமைப்பாளர்களின் கடின உழைப்பால் உருவாகிய சில பாடல்கள் 'ரீ மிக்ஸ்' என்ற பெயரில், இடையிடையே தேவையின்றிச் சில ஆங்கில வார்த்தைகளும் சேர்க்கப்பட்டு புதிய இசையமைப்பாளர்களினால் திரைப்படங்களில் உலா வருகின்றன. பழைய அந்த இனிய பாடல்களைக் கேட்டுச் சுவைத்த நமது காதுகளுக்கு இந்த 'ரீ மிக்ஸ்' பாடல்கள் எரிச்சலை ஏற்படுத்துகின்றன. வரவர இசையமைப் பாளர்களிடம் சோம்பேறித்தனம் மேலோங்கி வருகிறது.

இசையமைப்பாளர்கள் சிலர் இசையமைப்பதோடு பாடியும் வந்துள்ளனர். குறிப்பாக, ஜி. ராமநாதன், விஸ்வநாதன், இளையராஜா, தேவா, ஏ.ஆர். ரஹ்மான் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்கள் பாடுவதைக் கேட்கும்போது, பேசாமல் இவர்கள் தங்கள் இசையமைப்போடேயே நின்றிருக்கலாம் என்று தோன்றும். அதிலும் ஏ.ஆர். ரஹ்மான் பாடும்போது காதுகளைப் பிய்த்து எறியவேண்டும் போலத் தோன்றுகிறது.

தமிழ்த் திரையிசையில் முதன்முதலில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியவராக ஜி. ராமநாதனைக் குறிப்பிடலாம். அவரையடுத்து அதனை இன்னொரு தளத்துக்குக் கொண்டு சென்றவர்கள், விஸ்வநாதன்–ராமமூர்த்தி (கே.வி. மகாதேவன் இவர்களோடு சேர்த்துப் பார்க்கப்பட வேண்டியவர்). இவர்களுக்கு பின் தமிழ்த்திரையிசையில் புதிய பரிமாணத்தைப் புகுத்தியவர், இளையராஜா. அவருக்குப் பின் இன்னொரு திருப்பத்தை ஏற்படுத்தியவர், ஏ.ஆர். ரஹ்மான். ரஹ்மான் காலத்திலிருந்து தமிழ்த் திரையிசை உச்சத்தையும், படுபாதாளத்தையும் எட்டியிருக்கிறது.

## இராமர் படும் பாடு

இராமாயணக்கதை பாமரர் முதல் படித்தவர் வரை பலரையும் கவர்ந்துள்ளது. இந்தியாவில் பல மொழிகளில் இராமாயணக்கதை பாடப்பட்டுள்ளது. தமிழில் கம்பராமாயணத்தின் சிறப்பு பலரும் அறிந்ததே. இராமாயணத்தை ஒட்டிப் பல கருத்துமோதல்களும் ஏற்பட்டன. ஆரிய – திராவிட மோதல்களாக இராம – இராவண யுத்தத்தைக் காண்பவர்களும் உளர். இராவணனை மேம்படுத்தும் முயற்சிகளும் இடம் பெற்றன. "அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன்" என்று இராவணனைப் பெருமைப்படுத்தினார், பாரதிதாசன். இராமாயணத்துக்கு எதிராக எம்.ஆர். ராதாவின் கீமாயணம் அமைந்தது. கம்பராமாயணத்தைத் தீயிட்டுக் கொளுத்தவேண்டும் என்ற கோஷங்களும் ஒரு காலத்தில் எழுந்தன. இவ்வாறு, பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்டது இராமாயணம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இராமர் பெயரால் இந்து– இஸ்லாம் மதக்கலவரங்களும் ஏற்பட்டன. அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அங்கு இராமர் கோயில் கட்டவேண்டும் என்றும் ஒரு சாரார் ஆர்வம் காட்டினர்.

அப்பிரச்சினை ஓரளவுக்குத் தணிந்திருந்த நிலையில் இராமர் பெயரால் புதுப் பிரச்சினையொன்று தொடங்கியிருக்கிறது. இந்தப் பிரச்சினை இந்திய அரசையே ஓர் உலுக்கு உலுக்கியிருக்கிறது. இராமர் பாலம் விடயம் இன்று ஓர் எரியும் பிரச்சினையாகி விட்டது. இராமாயணக்கதையில் இராமருக்கு வில்லன் இராவணன். தற்போதைய நிலையின் படி இராமருக்குக் கிடைத்த புதிய வில்லன் கருணாநிதி. இராமர் பாலம் விடயத்தில் கருணாநிதி ஒரு மாநிலத்தின் முதல்வர் போல நடந்து கொள்ளாமல் பட்டிமன்றப் பேச்சாளர் போலவே நடந்துகொள்கிறார். இராமர் தொடர்பாகப் பல்வேறு சர்ச்சைகளும், பிரச்சினைகளும் எழுந்தாலும் அவர் மக்கள் மனங்களில் பதிந்துவிட்ட ஒருவர். தேவையின்றி இராமர் விடயத்தில் தலையிட்டு தமக்கிருக்கும் கொஞ்சநஞ்ச மரியாதையையும் கெடுத்துக் கொள்கிறார் கருணாநிதி. பகுத்தறிவு வாதியாகத் தன்மைக் காட்டிக்கொள்ளும் கருணாநிதி இந்து மத விடயத்தில் காட்டும் துணிச்சலை பிற மதங்களிலும் காட்டுவதற்கு துணிவாரா?

# மூச்சும் சூழலும்

*த. ஜெயசீலன்*

உன்னுடைய மூச்சால் உயிர்த்து இராகங்கள்
எண்ணற்றிசைக்கும்
புல்லாங்குழல் எங்கே?
வெற்றுச் சடமாய் விறைத்திருந்த குழல்; கண்முன்
முற்றும் துறந்த முனிபோல் மரத்த சூழல்;
மேனகை இரம்பையென
மோகம் பொழிந்தபடி
கானம் இறைத்ததன்றோ நின்கருணை மூச்சாலே!
உன்மூச்சு... குழலை
ஊடுருவ ஊடுருவ
உன் விரல்கள் – குழலின் துளைகளிலே நர்த்திக்க
ஆனந்த இராகங்கள்
ஆயிரம் பிறந்திந்தச்
சூழலில் சொரிந்து சொக்கவைத்த தூரையெல்லாம்!
உடலினை மட்டும் உசுப்புகிற
மூச்சு... ஊரின்
உயிரை மனதை உறையவைத்த துன் குழலால்.
மாயக் குழலாய்... வேய்ங்குழலாய்...
உயிர்ப்பசுக்கள்
பால்சொரிந்து தம்மை மறந்தனவே நின்மூச்சால்
அந்தக் குழலெங்கே?
அதையியக்கும் நின் மூச்சின்
சந்தம்தா னெங்கே?
சகலருமே கேட்கின்றோம்!
விந்தையென நீயும் விரைந்தொளிந்து போன தெங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலேசிய மடல்**

## கோலாலம்பூரில் நடைபெற்ற

# 10ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு –ஓர் அலசல்!

-ஆ. குணநாதன்

கடந்த 20, 21, 22 ஜூலை மாதம் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்று முடிந்த 10ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு பல கேள்விகளை என் மனதில் எழுப்பியுள்ளது. இதுவும் ஒரு கூடி கலைந்து விட்ட மாநாடு தான் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும் இணைந்து இம்மாநாட்டினை ஏற்பாடு செய்தன. கோலாலம்பூரில் உள்ள மலாயப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை இம்மாநாட்டின் இணை ஏற்பாட்டாளர் என்று தெரிவிக்கப்பட்டது.

மலேசியத் தமிழர்கள் அண்மைக் காலமாக தேசிய மற்றும் உலக அளவில் மாநாடுகள் நடத்திடத் துடிக்கிறார்கள். ஆனால் ஏதும் பெரும் பயன்விளைந்ததாகவோ, முறையான தூர நோக்குத் திட்டமோ இருப்பதாகத் தெரியவில்லை!

10ஆவது உலகத் தமிழ்ப் பண்பாடு மாநாடு நடப்பதாக பெரும்பாலானோர்க்குத் தெரியவில்லை. மிகக்குறுகிய கால அவகாசத்துடன் பத்திரிகை அறிக்கைகள் வந்தன. மேலும் ஆய்வுக்கட்டுரைகள் படைக்க நாளிதழ், இதர வானொலி போன்றவற்றில் அறிவிப்புகள் இல்லை.

இந்திய ஆய்வியல் துறை 50ஆவது பொன்விழாவைக் கொண்டாடுகிறது என்று பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி. மகிழ்ச்சியானது என்ற போதிலும், அங்கு பணியாற்றும் இரண்டொரு பேராசிரியர்களைத் தவிர மற்றவர்கள் மாநாடு நடக்கும் இடத்தில் தலை வைத்துக் கூட படுக்கவில்லை!

பேராளர்களுக்கு மலேசிய ரிங் 50. 00 கட்டணமாக வசூலிக்கப்பட்டது. தங்குமிடம் வேண்டுவோர் தனியாகக் கட்டணம் செலுத்தினர். பார்வையாளக்குக் கட்டணம் இல்லை எனவே ஆய்வுக்கட்டுரைகள் படைக்கப்பட்ட அரங்குகளிலும், உணவு வழங்குமிடத்திலும் கொஞ்சமும் கூச்சமின்றி இவர்களது ஆதிக்கம் இருந்தது. மூன்று நாளும் இப்படி வயிறு புடைக்கச் சாப்பிட்டவர்களில் பல பிரபலங்களும் அடங்குவர்!

தொடக்க விழா 20– 07–2007 இரவு 8.00க்கு மலாயப் பல்கலைக்கழக பெர்டானா சிஸ்வா அரங்கில் தமிழகத்து கோமாளி அரசியல் வாதிகள் புடை சூழ நடந்தேறியது.

மலேசிய உள்நாட்டு வாணிபம், பயனீட்டாளர் விவகாரத்துறை துணையமைச்சர் டத்தோ. சு. வீரசிங்கம் கலந்து கொண்டார். வரவேற்புரையை மாநாட்டுப் பொறுப்பாளர் ஒருவர் மட்டுமே நிகழ்த்தியது நெருடலை ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டின் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் இராமதாஸ் வழக்கம் போல சினிமா நடிகர்களை ஒரு பிடி பிடித்தார். இலங்கை அமைச்சர் சந்திரசேகரனின் பேச்சு காரசாரமாக இருந்தது. தமிழீழ விடுதலைக்கு ஆதரவாக இவரது பேச்சின் சாரம் இருந்தது.

தமிழகத்து பேராளர்கள் பெருமளவில் வந்திருந்தனர். அறிஞர் கா. ப. அறவாணன் போன்றவர்களை இம்மாநாடு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டது. நல்ல அறிஞர் பெருமக்கள், தமிழர் வரலாறு, பண்பாடு, சமூகவியல், கலை,தொடர்பானவர்களை அழைத்து வர வேண்டும். ஏதோ மலேசியாவைச் சுற்றிப் பார்க்கப் பலரை அழைத்து வந்தது போல் இருந்தது.

இரண்டாம் நாள் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. ஒரு சில அரங்குகளில் கட்டுரையாளர்கள் இல்லை! முன்கூட்டியே கட்டுரைகளை அனுப்பி விட்டு, மாநாட்டுக்கு வராமல் இப்படி காலை வாரி விட்டவர்கள் பண்பாட்டைப் பற்றி இனி எங்கும் பேசக் கூடாது!

அயல்நாட்டுப் பேராளர்களில் இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி, ஆஸ்திரேலியா, நார்வே நாடுகளிலிருந்து ஈழத்தமிழர்கள் மிகுதியாக வந்திருந்தனர் – மாநாட்டில் தமிழீழ விடுதலை தொடர்பாக, பேச வந்தவர்கள் அனைவரும் வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு முழக்கமிட்டனர்.

மலேசிய அரசாங்கத்தின் பார்வையில் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதும் பயங்கரவாதக்குழு. வேறு ஒரு நாட்டின் அரசியல் பற்றி இங்கு பகிரங்கமாகப் பேசக்கூடாது. எனவே ஈழத்தமிழ்ப் பிரதிநிதிகள் பேச்சின் ஊடாக தமிழ் ஈழம் மலரும் என்றும், தமிழ் ஈழ மக்களின் நிலை பற்றியும், பேசிய போது மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் தர்ம சங்கடத்தில் நெளிந்ததை அனைவராலும் காண முடிந்தது. இலங்கையிலிருந்து நாடாளமன்ற உறுப்பினர்கள் வருவதாக முன்பு அறிவிப்பு வந்தது. இறுதியில் ஈழ வேந்தன் மட்டுமே வந்து தமிழிலும், ஆங்கிலத்திலும் வீரமுழக்கமிட்டார்.

இறுதி நாளன்று நட்சத்திரப் பேச்சாளர் தமிழகத்தின் தொல். திருமாவளவன் வழக்கம் போல் அரைத்த மாவையே அரைத்தார். தமிழ்நாட்டு இறக்குமதி ''சாதி'' பற்றி அனைவரும் இலவசமாக அறிவுரை வழங்கினார்.

இறுதிநாள் நிறைவு விழாவில் தீர்மானங்கள் வாசிக்கப்படவில்லை. அடுத்த மாநாடு பற்றி அறிவிப்பு இல்லை! ஆனால் அரசல் புரசலாகக் காதில் விழுந்த தகவல்– அடுத்த மாநாடு நோர்வே நாட்டில் என்று கூறப்பட்டது.

மாநாட்டில் நிறைவுகளும் இருந்தன. நல்ல கட்டுரைத் தொகுப்பு. அறிஞர் கா. ப. அறவாணன் தலைமையில் குழு சிறப்பாகத் தயாரித்திருந்தது. கலைவிழாவும் நன்றாக இருந்தது. மூன்று நாளும் மாநாட்டு உணவு பிரமாதம். ஆனால் மாநாட்டு நினைவுமலர் நிறைவாக இல்லை. கடைசி நேரத் தயாரிப்பு என்பது அப்பட்டமாகத் தெரிந்தது. பல பிரமுகர்களின் உரை அல்லது வாழ்த்துகளுக்குக் கீழ் அவர்களின் பொறுப்பு குறிப்பிடாதது ஒரு குறையே!

மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் எழுத்தாளர் ப. கு. சண்முகம் தலைமையிலான குழு கடுமையாகப் பாடுபட்டது என்பது மறுப்பதற்கில்லை! இருப்பினும் அவர்களின் இந்த உழைப்பு பயன் தராமல் போய்விட்டதே! என்பதை எண்ணும் போது வேதனையே மிஞ்சுகிறது.

இனி வருங்காலங்களில் நன்கு திட்டமிட்டு பலரின் ஒத்துழைப்பையும் பெற்று வெற்றிகரமாக மாநாட்டை நடத்துவதே சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நவீனஇலக்கியமும்,தொழிற் சங்கங்களும்

“இலங்கை நவீன இலக்கியத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளவர்கள் யார்?” என்று கேட்டால் “நம்ம சிற்றேடுகள் தான்” என சட்டென விழுந்தடித்துக் கொண்டு பதில் சொல்லி விடுவார்கள். அத்தோடு முடிவதில்லை. தேசியப் பத்திரிகைகள் தாம் தான் என்று மௌனப் புன்னகை சிந்த, ஒவ்வொரு குழுவும் நாம் தான்! நாம் தான்! என்று மாரடித்துக் கொள்ளும். பத்தி எழுத்தாளர்களுக்கு கொஞ்சம் கோபம் தான். எந்த நூலென்றாலும் படித்து விட்டு அந்த பத்திரிகை இந்தப் பத்திரிகை என்றெல்லாம் எழுதித்தள்ளி நாட்டின் நான்கு முனைகளுக்கும் காவிச் செல்லும் காக்கைகளாக செயல்படும் அவர்களை எவரும் கண்டு கொள்வதில்லை. “அட அது தான் எழுதிட்டானே, ஆளை விடு” என்ற மனோபாவம் பல எழுத்தாளர்களுக்கு உடன் பிறந்தது என்பதை பத்தி எழுத்தாளர்கள் அறிவார்கள். அதனால் அந்தக் கோபம்.

சரி, அது கிடக்கட்டும். இப்போது புதிய குரலொன்று ஒலிக்கிறது. அதற்கு கொஞ்சம் செவி கொடுக்க வேண்டும். “இலங்கை இலக்கியத்திற்கு தொழிற்சங்கங்கள் பெரிய அளவில் பங்களிப்புச் செய்துள்ளன. அதனை இலக்கிய விமர்சகர்கள் கண்டு கொள்வதில்லை” என்ற மன ஆதங்கத்தை மூத்த தொழிற்சங்கவாதியான ஓ. ஏ. இராமையா வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஓ. ஏ. இராமையா பெருந்தோட்ட தொழிற்சங்கத்துறையில் அரைநூற்றாண்டுகளுக்கும் அதிகமான காலத்தை செலவிட்டவர். அவருடைய அனுபவங்கள் உள்வாங்கத் தக்கவை.

அவர் ஒரு படைப்பாளி அல்லர். ஆனால் இலக்கிய ஆர்வலர். பத்திரிகை ஆசிரியராகவிருந்தவர், வெளியிட்டவர், பத்திகள் எழுதியவர், தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் ஆக்கங்கள் தந்தவர், எச். எம். பி. மொகிதீன், ரொசாரியோ பெர்ணான்டோ, சுபைர் இளங்கீரன், பேராசிரியர் கைலாசபதி, தீப்பொறி ஆசிரியர் அந்தனிசில், டொமினிக் ஜீவா, பெனடிக் பாலன், மல்லிகை சி. குமார், பானா தங்கம் போன்ற நாட்டின் பிரபலமான எழுத்தாளர்களுடனெல்லாம் இணைந்து எழுத்துப் பணி செய்தவர்.

இத்தகைய ஒருவர் சொல்கிறார். “மலையகக் கலை இலக்கியத்துறைகளில் பெருந்தோட்டத்துறை தொழிற் சங்கங்கள் நிறைய பங்களிப்புச் செய்துள்ளன. எனினும் ஈழத்து இலக்கிய வரலாற்றையும், ஆய்வுகளையும் மேற்கொள்ளத் தக்கவர்கள் தொழிற்சங்கங்களால் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை முற்றாக புறக்கணித்து விட்டனர்”

இது தான் அவர் மன ஆதங்கம். இலங்கை தேசிய பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் இந்த மனக்குமுறலை இராமையா வெளிப்படுத்தியிருக்கிறார்.

“அப்படிப்போடு!” என்று சபாஷ் போடச் சொல்கிறது மனம். இனியாவது நமது பார்வைகள், ஆய்வுகள் அகல மலரட்டும். பல்முனைகளிலிருந்தும் வரும் அனைத்து அம்சங்களையும் உள்வாங்கி ஒரு விரிவான பரிணாமத்தில் நமது ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அது எப்படிப் போனாலும் இதோ காதோடு காதாக ஒரு சமாச்சாரம். இவ்வளவு சொல்லுராரே இவங்க நடேச ஐயருக்கும், சி. வி. வேலுப்பிள்ளைக்கும் என்னத்த செஞ்சி கிழிச்சுப் போட்டாங்கன்னு! மலையக இலக்கியத்துடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் ஒருவர் மனம் நொந்துபோய் கேட்கிறார்.

## அன்னை கடவுளுக்கு எழுதிய கடிதங்கள்

அன்னை திரேசா மறைந்து பத்தாண்டுகள் கடந்து விட்டன. நினைவு தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. அவர் கடவுளுக்கு எழுதிய கடிதங்கள் “கம் பீ மை லைப்” எனும் பெயரில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. இதில் 40 கடிதங்கள் உள்ளன. அன்னையின் ஆழ்மனத்தூறல்களாக அவை வருஷிக்கின்றன.

தனிமை, வறட்சி, இருள், சித்திரவதை வாழ்வின் அநுபவங்களானதாகவும், நரக வேதனை தன்னை ஆட்டிப் படைத்த நாட்களும் உண்டெனவும், இவை கடவுள் இருக்கிறாரா என்ற அவநம்பிக்கைக்கு தன்னை இட்டுச் சென்றதாகவும் அன்னை கண்கலங்கியுள்ளார், என்பதை அக் கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன.

“புன்னகை என்பது வெறும் முகமூடி. அது மனத்துள் இருப்பதை மறைப்பதற்காக அணியப்படுகின்றது”

“எங்கே எனது நம்பிக்கை? ஆழ்ந்து சிந்திக்கும் போது வெறுமையும் இருளுமே மிஞ்சுகின்றன” என்றெல்லாம் கடித வரிகள் துன்பத்தில் தோய்ந்து எழுதப்பட்டவைகளாக இருக்கின்றன.

கடவுள் மீது அவநம்பிக்கை ஏற்பட்டதாக குறிப்பிடும் அன்னைக்கு “புனிதர் பட்டம்” வழங்கப்படலாமா? என்ற பிரச்சனை இப்பொழுது எழுந்திருக்கிறது.

வணக்கத்திற்குரிய போப் பதினாறாம் பெனடிக் இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ளார். “கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கும் இயல்பாக ஏற்படுகின்ற ஒரு சிந்தனை தான் அன்னை தெரேசாவுக்கும் ஏற்பட்டிருக்கிறது. கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் இறைவனின் மௌனத்தை அறிவார்கள். அருளிரக்கம் கொண்டவரும் நம்பிக்கையின் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுக் கொண்டவருமான அன்னை திரேசா இறைவனின் மௌனத்தால் வேதனை அடைந்துள்ளார்'' என்கிறார்.

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அன்னையின் ஆழ்மன வேதனைகளை பத்தாண்டுகளுக்குப் பின்னர் அவர் எழுதிய கடிதங்கள் வெளிக்கொணர்ந்துள்ளன.

''எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி
அங்கே எனக்கோர் இடம் வேண்டும்''

என அன்னை மனதிற்குள் கதறிய நாட்களும் இருந்திருக்கின்றன. புனிதராகப் போகும் ஒருவரின் காயத்திலே இத்தனை வேதனைப் புண்கள் என்றால் சாதாரணமான மனிதன் எத்தனை சுமைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதை எண்ணிப் பார்க்க முடிகிறதா?

## புனித றமழான் பிறை தோன்றிய நாளில் ஓர் அதிசய நிகழ்வு

அரசியல்வாதிக்கும், வாக்குறுதிக்கும் இடைவெளி என்பது மகா மகா மகா நீட்டமானது. ''அட நீங்கவொன்று, இப்பவெல்லாம் அது எல்லாருக்கும் பொருத்தம்!'' என்றார் இலக்கிய நண்பர்.

தமிழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு நடந்தது அல்லவா? அப்போது முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு உமறுப்புலவர் விருது வழங்கிக் கௌரவித்தார்கள். அத்தோடு ஒரு கோரிக்கையும் முன்வைத்தார்கள். ''கர்நாடாவிலும் ஆந்திராவிலும் முஸ்லீம்களுக்கு நான்கு சதவீத இட ஒதுக்கீடு வழங்குகிறார்கள். அதே போல தமிழகத்திலும் வழங்க வேண்டும் என்பது தான் கோரிக்கை.

''இந்த மாநிலங்களில் முஸ்லிம்களுக்கு தனி ஒதுக்கீடு இருக்குமேயானால் அதற்கான அரசாணையை வெளியிடத் தயாராக உள்ளேன்.'' என்ற உறுதி மொழியை அளித்த கலைஞர் ''வாக்குறுதி அளித்தல்'' தொடர்பாக ஒரு கதை சொன்னார்.

''சீறாப்புராணத்தில் மானுக்கு துணை நின்ற படலம்'' என்ற ஒன்றிருக்கிறது. நபிகள் நாயகம் மான் ஒன்றைக் காப்பாற்றுவதற்காக ஜாமீன் கொடுத்தது தான் அந்தப் பகுதி.

காட்டிலே ஒரு மான் கூட்டம். ஆண்மான், பெண்மான், அதன் குட்டியும் இருந்தன. ஒரு வேடன் இவற்றை குறி வைத்தான். ஆண்மான் தப்பி ஓடி விடுகிறது. குட்டி அகப்பட்டு விடுமே என்று கலங்கிய பெண்மான் தானாகவே வேடனிடம் அகப்பட்டுக் கொண்டது. வேடன் அதனைக் கட்டி இழுத்துக் கொண்டு போனான்.

அவ்வழியாக நபிகள் நாயகம் வந்தார்கள். அவரைக்கண்ட பெண்மான் அழுதது. ''என்னைக் காணாமல் ஆண்மான் வருந்திக் கொண்டிருக்கும். என்குட்டியும் பசியால் வாடும். நான் போய் என் கணவரைப் பார்த்து, என் குட்டிக்கும் பாலூட்டிவிட்டு வருகிறேன். அனுமதி பெற்றுத் தாருங்கள்'' என்று கெஞ்சியது. நாயகம் அவர்களும் மானுக்காக வேடனிடம் இறைஞ்சினார்கள். வேடன் மறுத்து விட்டான். உடனே நபிகள் நாயகம் ''மான் போய் வரும் வரை அதற்கு நான் ஜாமீனாக இருப்பதாக'' கூறவே வேடனும் ஒப்புக் கொண்டான்.

மான் போய் கணவரையும் பார்த்துவிட்டு குழந்தைக்கும் பாலூட்டி வேடனிடம் திரும்பி வர முற்பட்ட போது ஏனைய மான்களெல்லாம் அதனைத் தடுத்து ''என்ன பெரிய முட்டாளாக இருக்கிறாயே'' என்றன. அப்போது மான் சொன்னது, ''நேர்மை நாணயம் மிக்க நபிகள் நாயகம் எனக்குப் பிணையேற்றியிருக்கிறார். நான் அவருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்'' என்று புறப்பட்டது.

மான் திரும்பி வந்து விட்டதைக் கண்டதும் வேடனுக்கு ஆச்சரியமாகவிருந்தது. 'ஏன் திரும்பி வந்தாய்? என்று கேட்டான். மான் நடந்தவற்றைக் கூறியது. வேடன் வியந்து போனான். வாக்குறுதியை காப்பாற்றிய மானின் நேர்மையைக் கண்டு மனம் உருகி நாயகம் அவர்களிடம் மன்னிப்பும் கேட்டு மானையும் விடுதலை செய்தான். இது தான் கதை. புராதன காலத்தில் மான் போன்ற ஐந்தறிவு பிராணிகளே வாக்குறுதியை காப்பாற்றியுள்ளன. சகல வழிகளிலும் உயர்வு கண்டுள்ள இன்றைய விஞ்ஞான உலகில் மனிதனே வாக்குறுதியை காப்பாற்றுவதில்லை. வாக்குறுதிகளை அள்ளியள்ளி வழங்கும் அரசியல் வாதிகள் அவற்றை அம்போவென கை நழுவ விடுவதனாலே தான் இலங்கை முதல் பல நாடுகளில் மனித உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன.

அது கிடக்கட்டும். நம்ம கலைஞர் என்ன செய்யப் போகிறார். ஏற்கனவே ஒரு டசினுக்கும் அதிகமான முறைகள் இந்தக் கதையை இஸ்லாமியர்கள் மத்தியில் சொல்லியிருக்கிறார்.

இம்முறை புனித றமழான் பிறை தோன்றிய நாளில் வாக்குறுதியையும் காப்பாற்றி விட்ட அதிசயம் நிகழ்ந்திருக்கிறது.

---

# எது வெக்கம்

ரூபராணி

-ரூபராணி

அழகம்மா கொஞ்சம் இஞ்சவா சொல்றதக் கேளு
அன்னமணியப் போறவழியில ஒழுங்கையில் கண்டன்
பழகின நேசம் பாத்துக் கனகாலம் புழுகத்தில்
பாசமுடன் ''வாகாபுள்ள'' எண்டு சொல்லிக் கூப்பிட்டன்
பக்கெண்டு சிரிச்சி பகிடிபண்ணி கோபிச்சாள்
பதறிப்போய் குளறி ஏன் எண்டு கேட்டன்
மக்குமனிசியே சவூதி போய் வந்த என்னைநீ
மரியாத இல்லாமல் 'வாகா' எண்டு கூப்பிடலாமா
பக்கத்தில வந்து பட்டாசாய் வெடிச்சிப் போனாள்
பெரிய வெக்கத்தோடு ஆக்கள் புதினம் பாத்தாங்க
அடியே, அன்னமணி அவள் பணியாளாய் போனவள்
அருமை தெரியாதா அவளுக்கு நம்மஊர் காவுக்கு
ஆடவர் தோளிலும் கா. அரிவையர் நாவிலும்கா எண்டு
அறிஞர்சதாசிவஐயர் பாராட்டிச் சொன்னாராம் எப்பவோ
போடிஎது வெக்கம் புரியாதஹாயும் (H1) பாயும்தான் (BYE)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்

குறிஞ்சி நாடன்

### மூன்றாம் பரிணாமம் வெளியீடு

எழுத்தாளரும் கவிஞருமான ரா. நித்தியானந்தனின் மூன்றாம் பரிணாமம் நூல் வெளியீட்டு விழா 09. 09. 2007 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வெகு விமரிசையாக நடந்தது. மேற்படி நிகழ்வுக்கு கொழும்பு கல்விப்பீட பேராசிரியர் சோ. சந்திரசேகரம் தலைமை தாங்கினார். மலையக நிகழ்வை விபரிக்கும் கதைகளாக மூன்றாம் பரிணாமம் அமைந்தது. தொடக்கவுரையை கொழுந்து ஆசிரியர் அந்தனி ஜீவாவும் ,வெளியீட்டுரையை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத் தலைவர் அ. ராமனும் நிகழ்த்தினர். நூல் நயவுரை வழங்கிய மலையக கலை இலக்கிய பேரவைத் தலைவர் சாரல் நாடன் பேசுகையில் 1993ல் ஆசிரியர் வெளியிட்ட கவிதைத் தொகுதிக்கு பின்னர் 13 ஆண்டுகளின் பின்னர் இச்சிறுகதை நூலை ஆசிரியர் வெளியிடுகின்றார். சிறுகதைத் தலைப்புகள் சில இடத்தில் பொருந்தவில்லை என்றார். மலையக மண்வாசனை வீசுகிறது என்றும் குறிப்பிட்டார். விழுது மேம்பாட்டு ஆற்றல் மன்றத்தின் பணிப்பாளர் சாந்தி சச்சிதானந்தன் பேசும் போது அப்புச்சி ஆத்தா கதை பெண்கள் சீர்திருத்தக் கதை என்றும் சிலகதைகளின் போக்கு அவசரமாக எழுதப்பட்டுள்ளதாகவும் கூறினார். மேற்படி நிகழ்வில் அமைச்சர். பெ. இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராக வந்து சிறப்பித்தார்.

### வீரகேசரி ஆசிரியர் தேவராஜ் பாராட்டப்பட்டார்

மலையக கல்வி அபிவிருத்தி மன்றமும், மக்கள் கலை அபிவிருத்தி நிலையமும் நடத்திய மூன்றாம் பரிணாமம் சிறுகதை வெளியீட்டு விழாவில் வீரகேசரி, மித்திரன் ஜீனியஸ், மெற்றோ இதழ்களின் பிரதம ஆசிரியர் வீ. டி. தேவராஜ் பொன்னாடை போர்த்தி ஞாபகச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். வரவேற்புரையை மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் காப்பாளர் செ. மோகன் ராஜ் நிகழ்த்தினார் பாரட்டுரையை வழங்கிய 'ஞானம்' இதழின் ஆசிரியர் தி. ஞானசேகரன் இலங்கை தமிழ்ச் சமூகம் விசேடமாக மலையகம் வாழ் மக்களுக்கும் சிறப்பான சேவை செய்ததுடன் எழுத்தாளர்களை ஊக்குவித்து வளர்த்து வருபவர் என்றார். பிரதம விருந்தினர். அமைச்சர் பெ. இராதாகிருஷ்ணன் பலபடி புகழ்ந்ததுடன் ஞாயிறு குறிஞ்சிப் பரல்களை தான் ஆர்வமுடன் படிப்பதாகவும் கூறினார்.

### இலக்கியங்களில் 'கண்கள்' தயானந்தா அவர்கள்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 'படித்ததும் பிடித்ததும்' என்னும் நிகழ்ச்சி 07.09.2007 சங்கரப் பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. வானொலியில் முன்னர் பிரபலமாயிருந்த பேச்சாளரும் கவிஞருமான இளையதம்பி தயானந்தா இலக்கியங்களில் கண்கள் என்னும் தலைப்பில் பல்வேறு நூல்களில் இருந்து திரட்டப்பட்ட விடயங்களை மிகவும் சுவாரஸ்யமாக எடுத்துக் கூறினார். ஆற்றல் வாய்ந்த அவரது பேச்சைக் கேட்டு சபை ஆனந்தத்தில் மூழ்கியது. நிகழ்வுக்கு திரு. எழில் வேந்தன் தலைமை தாங்கினார். தயானந்தா பேசும்போது இலக்கியவாதிகளும் கவிஞர்களும் கண்களைத் தொடாத இடமே இல்லை என்றார். திருவள்ளுவர் முதல் இன்றைய சினிமாக் கவிஞர் வரை எல்லோரும் தொட்டிருக்கிறார். காதல் பாடல் மட்டுமல்ல ஒப்பாரி பாடல்களிலும் கண் உண்டு. ஒப்பாரியில், வியாபாரியான கணவன் இறந்தபோது மனைவி ஒப்பாரியில் கருத்தவிழி கணக்கெழுதும் வெள்ளை விழி கடை பார்க்கும். என்றதுடன் வள்ளுவர் அதிகாரம் ஒன்றில் பத்துப்பாடல்களில் ஒன்பது பாடல்களில் கண்ணைப் பற்றி வர்ணித்துள்ளார். கவி காளமேகம் நிந்தாஸ்துதி பாடும்போது சிவனுக்கு அரைக் கண் என்று பாடுகிறார். கண்ணதாசனின் பெரும்பான்மையான பாடல்களில் கண்ணைக் காணலாம். பாரதி ஒளிபடைத்த கண்களைப் பாடினார். மனிதர் கண்கள் மேல் நோக்கும் அவதார புருஷர்கள் கண்கள் கீழ் நோக்கும். அடிகளைப் பார்க்கும். கண்ணப்பனும் கண்கொடுத்தான் அவனைப் பற்றியும் புராணம் கூறுகின்றது. கண்களை ஔவை, எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் என்றெல்லாம் கூறியுள்ளனர் எனச் சுவைபடக் கூறியது இலக்கிய நெஞ்சங்களுக்கு இனிய விருந்தாக அமைந்தது. நிகழ்ச்சியை ஒழுங்கு செய்த கொழும்பு தமிழ்ச் சங்க பொதுச் செயலாளருக்கு எமது பாராட்டுக்கள்.

### வீரகேசரி பரிசளிப்பு விழா

வீரகேசரி நிறுவனத்தின் எழுபத்தைந்தாம் ஆண்டு பவளவிழா சிறுகதைப் போட்டி நூல் வெளியீடும் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் கொழும்பு குளோபல் டவர்ஸ் ஹோட்டல் புகுமுக மண்டபத்தில் இடம் பெற்றது. கொழும்பு பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கருணாநிதி வீரகேசரி பொது முகாமையாளர் எம். கந்தசாமி ஆகியோருடன் பலரும் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். நிகழ்ச்சி நிகழ்வுகளை வானொலி அறிவிப்பாளர் நாகபூஷணி கறுப்பையா தொகுத்து வழங்கினார். சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற எம். ஏ. எல் அஸூமத் மற்றும் கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற செல்வி டேவிற் தர்ஷினி ஆகியோர் ஓய்வு பெற்ற நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் அவர்களிடமிருந்து பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழுந்து வெளிவந்துள்ளது

இருமாத சஞ்சிகையாக வெளிவரும் கொழுந்து ஜுலை ஆகஸ்ட் இதழ் வெளிவந்துள்ளது. திரு. அந்தனி ஜீவாவை ஆசிரியராகக் கொண்டு கண்டியில் இருந்து வெளிவருகின்றது. இந்த இதழில் பொன்னாடையும் பூமாலையும் என்ற கட்டுரையும் நீர்த்தேக்கங்களின் நினைவுகள் என்னும் தலைப்பில் மாரி மகேந்திரன் எழுதிய கவிதையும் என். விஜயலட்சுமி எழுதிய சுமைதாங்கி சிறுகதையும் வாசகனின் சிந்தனைத் தூண்டும்

## இலக்கியச் சந்திப்பு

அண்மையில் ஹட்டன் நகரில் செங்கொடிச் சங்க மண்டப கேட்போர் கூட்டத்தில் ஓர் இலக்கிய சந்திப்பு இடம் பெற்றது. மேற்படி கூட்டத்தில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள் இலக்கியத்திற்கு மலையகம் அளித்த காத்திரமான படைப்புகள் பற்றி விதந்துரைத்தார். செங்கொடிச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் மூத்த எழுத்தாளருமான ஓ. ஏ. இராமையா தலைமையில் அட்டன் தமிழ்ச் சங்கத் தலைவர் சு. முரளிதரன், செயலாளர் பி. எம். லிங்கம், மஸ்கேலியா தமிழ்ச் சங்கத் தலைவர் ப. தங்கம் மலையக கலை இலக்கிய பேரவையின் செயலர் அந்தனி ஜீவா, தேசிய கலை இலக்கிய பேரவையின் சார்பில் எம். ரவீந்திரன், பூபால சிங்கம் புத்தக சாலை உரிமையாளர் ஸ்ரீதர்சிங், மேலதிக கல்விப் பணிப்பாளர். மெய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அட்டனில் இலக்கிய விழா வொன்றையும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

## சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு விருது

அமெரிக்காவில், ஹவாய் சைவ ஆதினம் இயங்கி வருகிறது. இச்சைவ ஆதீனம் சிறந்த ஆன்மீகப் பணியாளருக்கு வருடாவருடம் விருது வழங்கிக் கௌரவிக்கிறது. இவ்வருடத்திற்கான இந்து மறுமலர்ச்சி விருது, யாழ்ப்பாணம் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டிக்கு வழங்கப்பட்டது. ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தில் வைத்து மேற்படி விருதினை அவரிடம் வழங்கினார். செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனும் உடன் இருந்தார்.

## மோட்ச முழக்கம் நூல் வெளியீடு

லுணுகல–ஸ்ரீயின் மோட்ச முழக்கம் கவிதை நூல் வெளியீட்டு விழா 02.09.2007 கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம் பெற்றது. மேற்படி விழாவுக்கு திருமிகு கம்பவாரிதி. இ. ஜெயராஜ் தலைமை தாங்கினார். பிரதம அதிதியாக பிரதியமைச்சர் கௌரவ பெ. இராதாகிருஷ்ணன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் சோ. சந்திரசேகரம், திருமதி சாந்தி நாவுக்கரசன் தமிழ்ச் சங்கச் செயலாளர் ரகுபதி பாலஸ்ரீதரன் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி. ஞானசேகரன், இளையதம்பி தயானந்தா, பூபால சிங்கம் புத்தகசாலை உரிமையாளர் ஆர். பி. ஸ்ரீதர்சிங், கொழுந்து பிரதம ஆசிரியர் அந்தனி ஜீவா, பிரபல விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன் முதலியோரும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர் முதற்பிரதியை அல்ஹாஜ் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார். அறிவிப்பாளராக சூரியன் எப். எம். எஸ். நவநீதன் நெறிப்படுத்தினார். விழா மிகவும் சிறப்பாக அமைந்தது.

## நூல் வெளியீடு

திரு. என். ஸ்ரீரஞ்சன் எழுதிய வணிக சொல் விளக்க அகராதி பற்றிய கலந்துரையாடல் 25.08.2007 சனிக்கிழமை கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடத் தலைவர் பேராசிரியர் சந்திர சேகரம் அவர்களின் தலைமையின் கீழ் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம் பெற்றது. பேராசிரியர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பேராசிரியர் சோ. சந்திரசேகரம் பேசும் போது உலகத்தில் பல்வேறு நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்தும் ஆண்டு ஒன்று முதல் பதின்மூன்று வரை சுயமொழியில் கற்பிக்கும் பாடநெறி இலங்கையில் மட்டுமே உண்டு. மலாயா, சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளில் இல்லாத கல்வித் திட்டம் இலங்கையில் உண்டு. சுமார் 40 லட்சம் மாணவர் சுயமொழி மூலமும் சர்வதேச பாடசாலைகள் மூலம் சுமார் 19 ஆயிரம் மாணவர்களும் படிக்கின்றனர் என்றார். நூலாசிரியர் என். ஸ்ரீரஞ்சன் வணிகச் சொல்விளக்க அகராதி தேவையைப் பற்றிப் பேசினார். திரு மதுசூதனன், திரு. பாலகிருஷ்ணன் ஆகியோரும் பேசினர். பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் அகராதிகள் தோன்றிய வரலாறு பற்றிப் பேசினார்.

## அமுதம் சஞ்சிகை வெளியீடு

அண்மையில் அமுதம் சஞ்சிகை வெளியீட்டு விழா கொழும்பு கொள்ளுப்பிட்டி சுற்றுலா சபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. வீரகேசரி நிறுவன பொது முகாமையாளர் எம். கந்தசாமி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கரு ஜயசூரியா முன்னிலையில் முதற்பிரதியை புரவலர் ஹாஸிம் உமரிடம் வழங்கினார். தேசபந்து கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன், பேராசிரியர். சோ. சந்திர சேகரம், உயர் கல்வி பிரதியமைச்சர் மயோன் முஸ்தப்பா, கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் தில்லை நடராஜா, வன்னி முன்னாள் பிரதியமைச்சர் நூர்தீன் மசூர் ஜனாதிபதி ஆலோசகர் எம். எச். எம். அஸ்வர் பிரதியமைச்சர் பெ.இராதா கிருஷ்ணன் ஆகியோருடன் இன்னும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

## நினைவுச் சொற்பொழிவு

தனிநாயக அடிகளாரின் நினைவுச் சொற்பொழிவு 01.09.2007 அன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம் பெற்றது. மேற்படி நிகழ்வுக்கு செ. மதுசூதனன் தலைமை தாங்கினார். தனிநாயக அடிகளார் தொல்லியல் மானிடவியல் புவியியல் என்பனவற்றில் ஆர்வம் கொண்டவர். தமிழ்மேல் கொண்ட பற்றின் காரணமாக தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நிகழக் காரணமாக விருந்தவர். அடிகளார் தமிழ் மீதும் போராட்ட இயக்கம் மீதும் ஆர்வம் செலுத்தியதால் இலங்கை அரசு அவரை விசாரணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தது. இவர் மலேசியா சென்று தமிழாய்வு மையம் அமைத்தார். உண்மையில் தனது 32வது வயதிலேதான் தமிழ் கற்க ஆரம்பித்தார். இவர் பன்னிரண்டு மொழிகளில் பேசும் வல்லமை பெற்றவராக விளங்கினார். தமிழ் ஆராய்ச்சி மகாநாடு இன்று தமிழக அரசின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பது வேதனைக்குரியது என்று நினைவு சொற்பொழிவு நடத்திய பேராசிரியர் அன்ரனி நோபர்ட் கூறினார்.

## 'சைவ ஞான விளக்கம்' பண்டிதர் கந்தையாவின் நூல் வெளியீடு

மறைஞானம் சம்பந்தமாக பண்டிதர் கந்தையாவின் நூல் வெளியீட்டு விழா 12.09.2007ல் கொழும்பில் இடம் பெற்றது. நூல் வெளியீட்டுக்கு முன்னதாக கொழும்பு சிவத்திரு மன்றத்தினர் ஞான சம்பந்தர் குரு பூசையை முதலில் நடத்தினர். சிவன் உமை பிள்ளையார், முருகன் கூடிய படமொன்று வைக்கப்பட்டு பூசை வழிபாடு நடந்தது. சிவத்திரு மன்ற அடியார்களின் பண்ணிசை இடம் பெற்றது. இனிமையான குரலில் பாடி சபையோரை கிறங்க வைக்க சபையும் பக்திப் பரவசத்தில் மூழ்கியது. நூலின் நயவுரையை இந்துசமய கலாசார அமைச்சைச் சேர்ந்த பவானி முகுந்தன் நிகழ்த்தினார். மேற்படி நிகழ்வுக்கு மன்றத்தலைவர் ஆ. நடராசா அவர்கள் தலைமை தாங்கினார். புலவர் சு. செல்லத்துரை பேசும்போது அகச் சந்தானக்குரவர் வழிவந்த புறச் சந்தான குரவர்கள் மெய்கண்டார், உமாபதிச் சிவாச்சார்களின் சைவ சித்தாந்தம் பற்றிய கோட்பாடுகளை முறையாக எடுத்துரைத்தார். இடையில் 'சுனாமி' செய்தி வந்து அவரது முழுச் சொற்பொழிவையும் கேட்கத் தடையாக இருந்ததால் கூட்டம் இடையில் அவசரம் அவசரமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

## ஓர் உன்னதத் தமிழனின் கதை

பாலா சங்குப் பிள்ளையின் ஓர் உன்னதத் தமிழனின் கதை வெளியீட்டு விழா அண்மையில் ஹற்றனில் நடைபெற்றது ஹற்றன் மதுரத் தமிழ் இலக்கியப் பேரவை இவ்விழாவை நடத்தியது. பிரபல எழுத்தாளர் சாரல் நாடன் நூலை வெளியிட்டு வைத்தார். சிவனு மனோகரன் உட்பட பலர் நூல் விமர்சனம் செய்தனர்.

## நகையகம் நூல் வெளியீட்டு விழா

அருட்திரு மரிய சேவியரின் மொழிபெயர்ப்பு நூலான "நகையகம்" கிளிநொச்சி திருமறைக் கலாமன்றத்தினரால் அண்மையில் வெளியிடப்பட்டது. திருமறைக் கலாமன்றம் 'புதுயுகத்தை நோக்கி' என்ற கலை நிகழ்ச்சியையும் நடத்தியது, அருட்திரு பீற்றர் அடிகளார் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். ஊடகவியலாளர் பு. சத்தியமூர்த்தி உட்பட பலர் உரையாற்றினர்.

## 'பெரிய எழுத்து' நூல் வெளியீட்டு விழா

மட்டக்களப்பு ஆரையம் பதியைச் சேர்ந்த மலர்ச் செல்வன் எழுதிய 'பெரிய எழுத்து' என்னும் நூல் வெளியீட்டு விழா மட்டக்களப்பில் அண்மையில் இடம் பெற்றது. தலைமை உரையை கலாநிதி, செ. யோகராசா நடத்தினார். நூல் விமர்சன உரையை கவிஞர் சண்முகம் சிவலிங்கம் நடத்தினார். சிறப்புரையை பேராசிரியை சந்திர லேகா மௌன குரு நடத்தினார். எழுத்தாளர் உமா வரதராஜன் முதற் பிரதியை எழுத்தாளர் ஓ. கே. குணநாதனுக்கு வழங்கினார். எழுத்தாளர்கள் கலைஞர்கள் பலர் கலந்து கொண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

## கம்பவாரிதியின் சொற்பொழிவு

திரு. கதிர்காமம் பிள்ளையின் ஞாபகச் சொற்பொழிவாகக் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களின் கம்பராமாயண தொடர் சொற்பொழிவு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. திரு. கதிர் காமம் பிள்ளை அவர்களின் குடும்பத்தார் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர். கம்பவாரிதி தனது சொற்பொழிவில் அருமையான கருத்துக்களை முன் வைத்தார். இராமாயணம் ஆயிரம் வருஷமாக வாழ்கிறது. இன்றைய இலக்கியங்கள் வந்த சுவடு தெரியாமல் மறைந்து விடுகின்றன இராமாயணம் வாழ்வியல் காவியம். அதைப் படித்தால் வெற்றி பெருகும் நெறியான வாழ்வு அமையும். சான்றோர் இரண்டு காவியங்களை மக்கள் வாழ்க்கை நெறிக்காக எடுத்துக்கொண்டனர் ஒன்று இராமாயணம், மற்றது மகாபாரதம். விதித்தனவற்றை செய் என்பது இராமாயணம். விதியாதனவற்றைச் செய்யாதே என்பது மகாபாரதம். படிக்கும் மாணவர்க்கு அறத்தைச் சொல்லி கல்வியை புகட்ட வேண்டும். அப்படிச் செய்தால் 'அறம்' என்னும் இரண்டு வரம்புகளுக்கிடையே அவனது வாழ்க்கை அமையும். துன்பமும் துயரமும் வாட்டாது. வாழ்வு சிறக்கும். எடுத்த கருமம் வெற்றியைத் தரும். இறைவன் மீது நம்பிக்கை வைக்காத எவரும் முன்னேற்றம் காணமுடியாது. உலகை ஆக்கியவன் அவன். நடத்துபவன் அவன். உலக இயக்கம் அவன் விருப்பப்படியே நடக்கும். மனிதனால் ஆவது எதுவும் இல்லை. மனிதன் பிறப்பு அவன்கையில் இல்லை. வாழ்வு அவன் விருப்பப்படி இல்லை. சாவும் அவன் விருப்பப்படி நடப்பது இல்லை. எல்லாம் எவனால் நடக்கிறதோ, எல்லா இயக்கத்திற்கும் எவன் மூலகாரணமோ அவனை வணங்கவேண்டும். மனிதன் இயற்கையோடு வாழவேண்டும். இயற்கைக்கு முரணான செயல்கள் எல்லாம் இறைவனுக்கு எதிரான செயல்களே. எரிமலை பொங்குகிறது, புயல் அடிக்கிறது, சுனாமி வருகிறது, வெள்ளம் பெருக்கெடுத்து அழிவைத் தருகிறது. இவைகள் இயற்கை அறத்தை மறந்ததால் ஏற்படும் விளைவுகள். இது கலிகாலம் ஆகையால் அறத்திற்கு எதிரான செயல்களே நடைபெறுகின்றன. எப்போ நாம் அறவழியில் செல்வோமோ அப்பொழுது இயற்கையின் சீற்றம் குறையும். வாழ்வு வளமாகும். ஓம் என்பது அ+உ–ம் என்னும் எழுத்துக்கள் சேர்ந்தவை 'அ' தோற்றத்தையும் 'உ' இருப்பையும் 'ம்' முடிவாகிய அழிவையும் குறிக்கும். இந்த பிரணவமந்திரத்தை எப்போதும் மனதில் இருத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இராமகிருஷ்ண மிசன் தலைவர் ஆசி வழங்க, முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் வி. விக்னேஸ்வரன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மற்றவை நேரில்

இளைய அப்துல்லாஹ்

## மதம் படுத்தும் பாடு

லண்டனில் அண்மையில் எனது நண்பர் ஒருவரின் திருமண வீட்டுக்கு சென்றிந்தேன். Harrow என்னும் பகுதியில் வீட்டில் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சொல்லி செய்யப்பட்ட எளிமையான திருமண விருந்து. அவர் கவலையாக இருந்தார். விசாரித்த பொழுது சொன்னார். "மூத்தக்கா டென்மார்க்கில் இருந்து வரவில்லை" ஏன்? "அவ மதம் மாறிட்டா. மாறின மதக்காரர் மிகக் கடுமையாக அனுஷ்டிக்கிறவை. தோடு, சங்கிலி போடமாட்டினம். வெறுங்காதும் கழுத்துமாகத்தான் திரிவினம். ஆசைப்படமாட்டினம். கலியாணங்காட்சிகளுக்கு போகமாட்டினம். அப்படியான சாப்பாடுவீடுகளிலை கலந்து கொள்ளமாட்டினம். அது சொந்தக்காரராக இருந்தாலும் சரிதான். இரத்தச்சொந்தம் பார்க்க மாட்டினம். வானத்தில் இருந்து தேவ ஒளியை தரிசிக்கினமாம். என்னோடு மிகவும் பாசமான மூத்தக்கா. ஊரிலை இருக்கும் போதும் இலங்கை வந்தாப்பிறகும் தம்பீ... தப்பீ.. என்று உருகி பாசமா இருந்தவா. எல்லா ஒட்டுறவும் இல்லாமல் போச்சுது..." கண்கலங்கிவிட்டார் நண்பர்.

பாசம் அவரை அழவைத்தது. மதம் பற்றிய அக்கறை தமிழர்கள் மத்தியில் மனப்பூர்வமாக ஆழமாக வேரூன்றாமையே மத மாற்றத்திற்கும் பிறழ்வுக்கும் காரணமாக அமைந்து வருகிறது. பல மதக்குழுக்களின் தொடர்ச்சியான அணுகுமுறையின் காரணமாக மற்றும் தொடர்கவனிப்பின் காரணமாக பல நூறு இந்துக்கள் கிறிஸ்தவமதத்துக்கு செல்கிறார்கள். இது ஐரோப்பாவில் கணிசமாக உயர்ந்திருக்கிறது. இந்து மதம் தொடர்பான தன்நிலை அக்கறையை கோவில்கள் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தாமல், மக்கள் பற்றிய அக்கறை இல்லாமல் இருப்பதும் ஐரோப்பாவில் பல இலங்கை இந்துக்கள் மதம் மாறுவதற்கு காரணமாக அமைந்துவிடுகின்றன.

வெறும் பணம் சேர்க்கும் அக்கறையோடு மட்டும் இருக்கும் ஆலயங்கள், இந்து மதத்தைக் காப்பாற்றும், பேணும் எந்தத் திட்டங்களையும் கொண்டிருக்கவில்லை. பல நூறு சம்பவங்கள் எங்கள் கண்களுக்கு முன்னாலேயே நடக்கின்றன. தமிழர்கள் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கின்றமையும் பணத்திற்கு கஷ்டப்படுகிற தன்மையையும் மிக அவதானமாக இனங்காணும் அமைப்புகள் தமது நுணுக்கமான வலைப்பின்னலூடாக தமிழர்களை மதம் மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றன.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டு இயங்கும் குறித்த அமைப்பு ஒன்று தமிழர்களால் அறியப்பட்ட அமைப்பு, புலம் பெயர்நாடுகளில் கஷ்டப்படுகிற தமிழர்களை இனங்கண்டு தொடர்ச்சியாக அவர்களின் வீடுகளுக்குப் போய்ச் சந்திப்பதன் மூலம் இயேசுவிடம் அழைத்துச் செல்வதாக வாக்குத்தத்தம் செய்து பணம் தேவையெனில் அதனையும் கொடுத்து நாசூக்காக தமது திட்டமிட்ட கருமங்களையாற்றி வருகின்றது. பலரும் இந்த வலையில் விழுந்து விடுகின்றார்கள்.

மதம் என்பது ஒவ்வொருவரினதும் சொந்த விருப்பம். அதனைக் கேட்பதற்குயார் இவர்கள்? என்ற தனிமனித சுதந்திரகேள்விகளுக்கு அப்பால் சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் ஏற்படும் பிறழ்வுகளுக்கும் நெருக்குதல்களுக்கும் சமூகம் மாட்டப்படும் ஒரு பேரபாயம் இருக்கிறது.

ஜேர்மனியில் வெற்றிலைக் கேணியைச் சேர்ந்த ஒரு இளைஞனும் அதே இடத்தை சேர்ந்த யுவதியும் திருமணம் முடித்து இரண்டு பெண் குழந்தைகளுக்கு பெற்றோராக இருந்த போது...

புலம்பெயர் நாட்டில் வீடு, வீட்டுவாடகை செலவு சித்தாயங்கள் மிகவும் அதிகமாக இருக்கும் ஒரு சூழ்நிலை அழுத்தும் போது சிலரால் மீள முடியாத பணக்கஷ்டம் ஏற்படும் பொழுது தாங்க முடியாமல் தவித்துப் போய் விடுவார்கள். அப்படி எத்தனையோ அகதிகளைக் கண்டிருக்கிறோம்.

அப்படி ஒரு பணக் கஷ்டத்தினை நீக்க வந்த அமைப்பு ஒன்று மதம் மாறச் சொல்லி வற்புறுத்தியது. அவர்களும் வேறுவழியின்றி மதம் மாறிவிட்டனர். பணம் கிடைத்தது சிறிது காலம் கூட்டங்கள். ஆராதனைகள் என்று வாழ்வு கழிந்து போனது. பென்ஸ்காரிலும் படாடோப வீடுகளிலும் வாழும் நல்ல குரல் வளமுள்ள கோட் சூட் போட்ட தமிழ் பாதிரியார் ஒருவர் இவர்களை வழிநடத்துவார். தேவ அருள் அவர்கள் மூலமாகவே வருவதாகவும் அவர்கள் சொற்படியே நடக்க வேண்டும் என்றும் வலியுறுத்துவார்கள்.

பிரசாரத்துக்கு இந்தப் பெண் வேறொரு ஆணுடன் இணைத்து அனுப்பப்பட்டபோது தான் குடும்பத்தில் பிரச்சினை எழுந்தது. கணவன் போகவேண்டாம் என்று சொல்ல மனைவி மதத்தில் ஊறித் திளைத்துவிட்டவளாக மாறிவிட்டாள்.

மனைவியோ செக்கும் சிவலிங்கமும் ஒன்றாகவே தெரியும் ஆத்மார்த்த நிலைக்குச் சென்றுவிட்டார். மனித அற்பனாக கணவனைக் கண்டார். கணவனுக்காக பணிவிடை செய்வதை நிறுத்தி தேவனுடைய பிரசாரப்பணிகளுக்குச் செல்ல ஆரம்பித்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரக்தியடைந்த கணவன் தற்கொலை செய்து கொண்டான். சபை கைவிட்ட நிலையில் மனைவி பைத்தியமாகி ஒரு மூலையில் வீட்டில் வெறித்த பார்வையினளாய் இருக்கிறார். கண்டேன். பிள்ளைகள் அநாதைகளாக...

இந்துமதம் மீதான நம்பிக்கையீனம் இந்துக்களிடையே அதிகரித்து வருகிறது. இளையசமுதாயத்தினர் மத்தியில் அவர்களுக்கு புரியும் மொழியில் ஆத்மீகம் சொல்லப்படுவதில்லை.

"தேவாரத்தைப் பாடமாக்கு..." என்றுவிட்டு பெரியவர்கள் தங்கள் தங்கள் வேலையில் ஈடுபட்டு விடுகிறார்கள். குழந்தைகளுக்கான தெளிவான ஒரு சமய பாடப்புத்தகங்களோ விளக்கங்களோ இல்லை. அடுத்த தலைமுறை கலாசாரத்தை மதத்தை விட்டு ஓடப்போகிறதோ என்ற கவலையும் ஏக்கமும் கொண்டோர் அதனை விளக்குவதற்கான எந்தக் கரிசனையும் இல்லாமல் இருக்கின்றனர்.

எனக்குத் தெரிந்த ஒரு பிரபல நடிகரின் குடும்பத்தில் இந்த மத மாற்றத்தால் ஏற்பட்ட ஒரு உயிரிழப்பைப் பார்த்து அதிந்து போனேன்.

கணவனுக்கு சுகவீனம்... கொடூரமான வருத்தம். தனியறைக்குள் கணவனைப் பூட்டி வைத்துவிட்டு யாரையும் மனைவி பார்க்க அனுமதிக்காமல் "செபம்" மட்டும் செய்து குணமாக்க முடியும். "தேவன்" குணமாக்குவார் என்று சொல்லி "செபம்" பண்ணிக்கொண்டிருக்க 41 ஆவது நாள் கணவன் மருந்து கொடுக்கப்படாமல் அநியாயமாகச் செத்துப்போனான்.

ஆத்மீக பலம் பற்றிய கேள்விகளுக்கு அப்பால் எமது கலாசாரம் மற்றும் உயிர்கள் மீதான அதீத துணிச்சலால் வரும் அசட்டுத் தனத்தை இந்த புதிய மதங்கள் தோற்றுவிப்பதால் எத்தனையோ பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். எத்னையோ பேர் நோய் வந்து மருந்து உட்கொள்ளாமல் செத்துப்போகிறார்கள்.

இது ஒரு வகையில் இந்து மதம், மற்றும் தமிழர்கள் மீதான அடார்ந்தேறு முறைதான். இதனை இப்படியே தொடரவிடுவோமானால் புலம்பெயர் சூழலில் ஒரு மத மற்ற பைத்தியக்காரத் தமிழர்களையே எம்மால் மிச்சமாகப் பார்க்க கூடியதாக இருக்கும்.

இளைஞர்கள் மதம் தொடர்பான எந்த அக்கறையும் இல்லாமல் தம் மனம் போன போக்கில் நடந்து கொள்கிறார்கள். அடுத்த சமுதாயம் இந்து சமயத்தைத் தெரியாமல் வாழப் பழகிக் கொண்டுவிட்டது. அது ஒரு மதமற்ற சமுதாயமாகவே இருக்கப் போகிறது. அதனை யாராலும் தடுத்து விட முடியாது. இதற்கான எந்தச் செயற்பாட்டிலும் ஈடுபடாமல் வெறும் கூட்டங்களாலும் மாநாடுகளாலும் எந்தச் சாதனையையும் இந்து அமைப்புக்கள் செய்யப் போவதில்லை.

அடுத்து, இந்து சமய வழிபாட்டு முறைகள் மீதான இலகுபடுத்தல் அல்லது இளைஞர்களை மத அனுட்டானங்கள் மீதான ஆர்வத்தைத் தூண்டுதல் நடைபெறுவதில்லை.

"எனக்கு கோவிலுக்கு போக முடியாது 'காபெட்' ஒரே மணம்" என்று ஒரு வாலிபன் சொல்லி அசூசைப்பட்டான். கோவில்கள் சுத்தம் பேணும் விசயத்தில் எந்தவித அக்கறையையும் செலுத்துவதில்லை என்ற குறைபாடு லண்டனில் உள்ள பல கோவில்களில் இருக்கிறது. எல்லா நேரமும் சுத்தமாக இருந்து பழகியவர்கள் இளைஞர்கள். சுத்தமில்லாத கோவில்களுக்கு வரவிருப்பப்படுகிறார்களில்லை.

சமய வகுப்புகளில் "தோடுடைய செவியன் விடையேறியோன்..." சொல்லிக் கொடுப்பதே பெரிய விடயம் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றார்.

சேரும் ஆயிரக்கணக்கான யுரோக்கள் அல்லது பவுண்களை பணவசதி குறைந்தவர்கள் நோயாளிகளை, அவர்கள் இனங்காண முதல் சைவ சமய அமைப்புகள் இனங்கண்டு உதவி செய்வது கடமையாகும். அப்பொழுது பணத்துக்காக அதன் கஷ்டத்துக்காக இந்து மதத்தை விட்டு மாறும் இலங்கையரை கொஞ்சமாவது காப்பாற்ற முடியும்.

இப்பொழுது இந்தப் பிரச்சினை எத்தனையோ சந்தோஷமாய் இருந்த குடும்பங்களை, உறவுகளைப் பிரித்து வைத்திருக்கிறது. இப்படி சுகதுக்கங்களில் கலந்து கொள்ளாதவர்களுடைய குடும்பங்கள் இலங்கையில் இருக்கும் அவர்களது உறவினர்களையும் பிளவுபடுத்துகிறது.

தமிழர்கள் இனம், சாதி, இடம், பிரதேசம் என்று பிளவுபட்டும் போய் இப்பொழுது முளைக்கும் மத மாற்றத்தால் புலம்பெயர் நாடுகளிலும் அதன் தொடர்ச்சியாக இலங்கையிலும் பாரிய குடும்ப பிளவுகளைப் பார்க்கிறோம்.

கூட்டுக்குடும்பமாய் வாழ்ந்த எமது உறவு முறைகள் இதன் தொடர்ச்சியாய் சின்னாபின்னப்பட்டுப் போய் வருவதனை நேரில் காண்கின்றோம்.

இப்பொழுது எனது நண்பரின் அக்காவுக்கும் அவரது குடும்பத்துக்குமான உறவு அறுபட்ட நிலையில் உள்ளது. லண்டனிலும் இலங்கையிலும்...

பிள்ளைகள் தாய் தந்தையரின் சொற்களைக் கேட்கத் தயாராக இல்லை. மதம் மாறிய அல்லது புதிய மதத்தில் சேர்ந்து அம்மாவும் அப்பாவும் அழைப்பினை மேற்கொள்ளச் செல்ல, பிள்ளைகள் எதுவுமறியாது மன நிம்மதிக்காக பியர் காடின்களை நோக்கிப் போகின்றனர்.

ஆகவே, இந்து சமயக் காவலர்கள் இது தொடர்பான அக்கறை கொள்ளாவிடில், அடுத்த எமது தமிழ்த் தலைமுறை மதமற்ற ஒரு தலைமுறையாக வளருவதை நாம் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டி வரும்.

## விவாதங்கள், வாசகர் கடிதங்கள், படைப்புக்கள்

விவாதங்கள் 500 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். 'வாசகர் பேசுகிறார் பகுதிக்கான கடிதங்கள்' 200 சொற்களுக்குள் அடங்குதல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்ந்துவரும் இதழில் இடம்பெறும். புனைபெயரில் எழுத்துபவர்கள், தமது சொந்தப் பெயர் முகவரியை வேறாக இணைத்தல் வேண்டும். படைப்புக்கள் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படின் ஒரு மாதத்திற்குள் அறிவிக்கப்படும்.

—ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் என்பது சமூகத்தின் வளர்ச்சிக்கு உந்துதலாக இருக்கவேண்டுமேயொழிய வீழ்ச்சிக்கு துணையாக அமையக்கூடாது

## *ஓர் எதிர்வினை*

S.S. *தர்ஷினி, கொழும்பு பல்கலைகழகம்.*
*கலைப்பீடம், இலங்கை சட்டக்கல்லூரி.*

கலை இலக்கிய யுகத்திலே தடம்பதித்து வருகின்ற 'ஞானம்' சஞ்சிகையை தொடர்ந்து வாசித்து வரும் வாசகியில் யானும் ஒருத்தி. மலையக கவிஞர்களுக்கு களம் அமைத்துக்கொடுப்பது ஞானத்தின் மேன்மையே. அந்தவகையில் கடந்த ''ஞானம்'' சஞ்சிகைகளில் வெளிவந்த மலையக தந்தைமார் தொடர்பான விவாதமேடையில் வெளிவந்த, கவிஞர்களான கவிஞர் பாலாசங்குபிள்ளை மற்றும் கவிஞர் லுணுகலை ஸ்ரீ ஆகியோரின் கருத்துக்கள் தொடர்பாகவும், எனது கருத்துக்களையும் ஒப்புவிக்கலாம் என நினைக்கின்றேன்.

மலையகக்கவிஞர்களின் உன்னத வளர்ச்சிகண்டு யாம் பெருமை கொண்டோம். அதே நேரம் அவர்களின் முரண்பட்ட சில கருத்துக்களைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. மலையகத்தின் மகிமையைப் பிறர் மலிவாய் நினைக்கக்கூடிய வகையில் எம் கவிஞர்கள் மலையகத்தின் தகுதியினை நிர்ணயித்து விட்டமை மனம் சஞ்சலத்திற்குரிய விடயமே.

கவிஞர் லுணுகலை ஸ்ரீயின் கருத்துக்களானவை ஏற்றுக்கொள்ளக் கூடியவையே. யதார்த்தத்தை அல்லவா கூறியுள்ளார். எத்தனையோ தந்தைமார் தம் சுய சந்தோஷத்தை விட்டு தமது பிள்ளையின் சந்தோஷமே என எண்ணி மாடாய் உழைக்கும் உன்னத புருஷர்களுக்கு வழங்கப்படும் வாழ்த்துப்பாக்களோ இவை (மலையக கவிதைகள்) எனவல்லலோ எண்ணத்தோன்றுகின்றது.

உண்மையில் மலையககவிதைகள், சிறுகதைகள் என்பன தந்தையரை, ஆண்வர்க்கத்தினரை குடிகாரர்களாகவும், தூஷண வார்த்தை பேசுபவர்களாகவும் சித்தரித்துள்ளமை கண்கூடு. ஒரு விடயம் இல்லை, இல்லை என்றால் இல்லை தான். அதே போல ஒரு விடயம் உண்டு, உண்டு என்றால் அது உண்டுதான். ஆனால் சில நேரங்களில் இல்லை என்பதுவும் உண்டு என்றாகி விடுகின்றது அல்லவா. அதே போலத்தான் மலையகமும் ஒரு சூழ்நிலை கைதி.

கவிஞர் பாலாசங்குபிள்ளை அவர்கள் இது தொடர்பாக, ''இப்படியான இழிவுநிலைகளை வெளிப்படுத்துவதனால் மலையகத்தின் பண்புகளுக்கோ அல்லது அதன் செழுமைக்கோ மாசுவிளைவதில்லை'' என்ற கருத்தை இயம்பியிருந்தார். கவிஞர் அவர்கள் எதனை இழிவுநிலை என்கின்றார் என்பது புரியவில்லை. ஏன் பாதையிலே சிசு பிரசவித்துவிடும் போல் அமைந்திருக்கும் பாதை இழிவு நிலை இல்லையா? இன்றும் மலையக மக்களின் அடிப்படை உரிமைகள் என்னவென்று தெரியாமல் இருக்கின்றார்களே இது இழிவுநிலை இல்லையா? அரசியல் சூட்சுமத்திற்குள் சிக்கிதவிக்கும் அவர்களின் அறியாமை இழிவு நிலை இல்லையா? இன்னும் எத்தனையோ இழிவு நிலைகள் இருக்கின்றன. இவையனைத்தும் நீக்கி மலையகம் என்றால் குடியும், தூஷணமுமே என்று வரைவிலக்கணப்படுத்துவது எவ்விதத்தில் தகும்.

ஆரம்பக்காலங்களில் இருந்த குடியை விட தற்போது எவ்வளவோ அவர்களின் தன்மை மாறிவிட்டது. தற்போது மலையகமக்களிடையே சேமிப்பு பழக்கம் அதிகரித்து வருகின்றது. குடும்பத்தை பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை புரிந்து கொண்டவர்களாக காணப்படுகின்றனர். பொருளாதார பிரச்சினைக்கு காரணம் குடிப்பழக்கம் மட்டுமே என்பது ஏற்றுக்கொள்ள முடியாத கருத்து. இன்று அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றமே முக்கியமானதொரு காரணியாக காணப்படுகின்றது. ஒரு தனிமனிதனின் பொருளாதாரத்தில் அவன் வாழும் குடும்பம், சமூகம் மற்றும் நாட்டின் பொருளாதாரநிலை என்பன செல்வாக்கு செலுத்துகின்றன. குடியை மட்டும் குறித்து கூற முடியாது.

மலையகத்தில் மதுபான கடைகள் அதிகம் அதிலும் குறிப்பாக மத்திய மலை நாடு என குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு காரணம் யார்? முழுபொறுப்பு யாருடையது? யார் உந்துசக்தி? என்பன யாவும் யாம் அறிந்ததே. அறிந்தும் அதனை தனித்தே மலையகத்தவர்கள் மீது பழிபோடுவது சிறந்ததல்ல.

மலையக மாணவர்கள் இன்று கலை, சட்டம், மருத்துவம், பொறியியல், தகவல்தொழில்நுட்பம் போன்ற இன்னும் பல துறைகளில் பட்டங்களை பெற்றுக்கொண்டிருக்கின்றனர். இதற்கு கர்த்தா யார்? சான்றுகள் பறைச்சாற்றுகின்றன. அவர்களை வெறும் குடிகாரர்களாக மட்டும் பார்ப்பது மகாதவறு.

ஒரு விடயத்தினை இலக்கியத்தினூடாக யாம் தெரிவிக்கும் போது அவ்விசயமானது பெறுமதிவாய்ந்த தாகவும், இலகுவில் மக்களை சென்றடையக் கூடியதாகவும் காணப்படும். இலக்கியம் என்பது சமூகத்தின் வளர்ச்சிக்கு உந்துதலாக இருக்க வேண்டுமே ஒழிய அதன் வளர்ச்சியின் வீழ்ச்சிக்கு உறுதுணையாக அமையக்கூடாது.

குடிப்பவன் என்று அடிக்கடி சுட்டிகாட்டும் போது அவன் உளவியல் ரீதியாக தாக்கமடைகின்றான். அதனால் அவன் மேலும் குடிக்க தொடங்குகிறான். அதே நேரம் அவனை சிறிது சிறிதாக குடியிலிருந்து விடுபடச் செய்ய வழிகாட்டுதல்கள் வழங்கும் போது அதனை உணர்ந்து குடியை முற்றுமுழுதாக விட்டுவிடக் கூடும். ஆகவே அவனை உளவியல் ரீதியாக அணுகுவது முறையாகும். எனவே கவிஞர்கள் கவியாக்கும் போது அதற்கான வழிகளை பின்பற்றுவது வரவேற்கத்தக்கதாகும்.

*ஊக்க மருந்தென்றவர்களோ*
*இன்று,*
*உன்னத நிலையில்.*
*உழைத்து தேய்ந்த,*
*நீங்களோ*
*இன்று?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டா முறையிலான இட ஒதுக்கீட்டுக்கு இது அரசியல் அல்ல கவிதை
### ஸ்ரீ. பிரசாந்தனின் கட்டுரைக்கு எதிர்வினை

# மலையகக் கவிதைகள் தரங்குறைந்தவையா?

"20ஆம் நூற்றாண்டின் ஈழத்துக்கவிதைகள்" தொகுப்பில் முறையாக மலையகக்கவிஞர்களின் கவிதைகள் இடம்பெறவில்லை என்பதே அந்தனிஜீவாவின் ஆதங்கமாகும்.

இதற்கு ஸ்ரீ. பிரசாந்தனின் பதில் தனது பக்கத்தை நியாயப்படுத்துவதற்காக அளிக்கப்பட்டது போல் படுகிறது. அவர் ஒரு தொகுப்பை தொகுக்கும் வேளையில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தது ஒருவகை. மற்றது மலையகத்தின் தொகுப்புக் களை, கவிதைகளைத் தேடி பெற்றிருத்தல் வேண்டும். அது அவரது கடமையும் சமூகப் பணியுமாகும்.

பாடநூல்களில் மலையகக் கவிஞர்கள் பலரின் கவிதைகள் அவ்வப்போது வெளிவந்துள்ளன. தரமற்றவை எனின் அவை எவ்வாறு 'தரமானதாக' தெரிவு செய்யப்பட்டன.

ஸி. எஸ். காந்தி, ஜெயம் (கோமஸ்), பூண்டுலோயா தர்மு, மல்லிகை சி. குமார், ஸி. வி. வேலுப்பிள்ளை, சி. இராஜேந்திரன், இறாகலை பன்னீர்செல்வம் போன்றோரின் கவிதைகளை இங்கு உதாரணமாகக் குறிப்பிட இயலும்.

செழுமையான இலக்கியப் படைப்புக்களை மலையகம் தந்து கொண்டு தான் இருக்கின்றது. பலரது கவிதைகள் நூலுருப் பெறாமை ஒரு முழுமையான நல்ல விமரிசனத்திற்கு தடையாக உள்ளது. இது ஒரு பொதுவான நிலையாகும். இது ஏனைய பிரதேசத்திற்கும் ஓரளவு பொருந்தும்.

மலையகத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு மைல் கல்லாகத் திகழ்ந்த சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் தனது கவிதைகளை ஆங்கிலத்தில் தந்தவர். அவைகளை தமிழில் கே. கணேசு, சக்தீ அ. பாலையா போன்றோர் தந்தது வேறு விடயம். இங்கு தரமான கவிதைகளை மலையகத்திலிருந்து "ஆங்கில மொழியில்" தந்தது குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமே.

பலரது கவிதைகள் தரமானதாக கருதி மொழிபெயர்ப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. "விழிப்பு" சஞ்சிகையில் வெளி வந்த புஸல்லாவை இஸ்மாலிகா, மல்லிகை சி. குமார் போன்றோர் கவிதைகளைக் கூறலாம்.

தினகரன் வாரமஞ்சரி கவிதைச்சோலையில் 17/8/85 அளவில் "செந்தீ" எனும் தலைப்பில் வெளிவந்த மொழிவரதனின் கவிதை கணையாழி களஞ்சியம் (பாகம் இரண்டு) பக்கம் 597, 598ஆம் பக்கங்களில் சிறந்த கவிதையாக பிரசுரம் பெற்றிருக்கின்றது.

இந்நிலையில் அந்தனி ஜீவாவின் முயற்சி பாராட்டப்பட வேண்டியதே. அவரது தொகுப்புக்கு மலையகக் கவிஞர்கள் தமது கவிதைகளை தொகுப்புக்களை அளிப்பதன் மூலமே மலையகத்தின் தரமான கவிதை சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி கிடைக்கும்.

*- மொழிவரதன்*

# ஒரு அனுதாபம்

"தமிழ் முஸ்லிம் உலகின் ஒரு எஃகு பாலமாகத் திகழ்ந்தவர் ஏ. எஸ். மணவைத்தம்பி. அவருடைய மறைவு எம்மை பெரும் துயரில் ஆழ்த்தியுள்ளது."

ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகார ஆலோசகரும் ஊடக ஆலாட்சியாளருமான அல்ஹாஜ் ஏ. எச். எம் அஸ்வர் அவர்கள் ஏ. எஸ். மணவைத் தம்பியின் மறைவையொட்டி வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இவ்விதம் கூறியுள்ளார்.

"இலங்கையின் தி. மு. க. செடிக்கு பசளையிட்டு நீர் ஊற்றி வளர்த்தவர் மணவைத்தம்பி. கொழும்பிலும் ஏனைய ஊர்களிலும் தி. மு. கவின் குறிப்பாக, முஸ்லிம்களுடைய மனம் கவர்ந்தவர் மணவைத்தம்பி. அன்று கொழும்பு புறக்கோட்டையில் சமுதாயச் செம்மல் மர்ஹூம் எஸ். எம் சஹாப்தீன் காக்கா தலைமையில் இயங்கிய திருக்குர் ஆன் இயக்கத்தோடு இணைந்து செயற்பட்ட ஒரு தமிழ் அன்பர் அவர். புறக்கோட்டை, செட்டித்தெருவில் வருடாந்த நிகழ்ச்சியாக 30 வருட காலம் நடைபெற்ற மீலாத் விழாக்களின் வெற்றிக்காகவும் தம் பங்களிப்பை அளித்து சமயங்களுக்கிடையே புரிந்துணர்வை, நல்லெண்ணத்தை உருவாக்க உதவியவர் அவர்.

ஆரம்பத்தில் இ. வெ. இரா பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து அதன் கொள்கைகளை இலங்கையில் பரப்புவதற்கு தம் பங்கினை அளித்தார். இந்திய யூனியன் முஸ்லிம் லீக், அகில இலங்கை முஸ்லிம் லீக் ஆகியவற்றில் தலைவர்களான காகிதே மில்லத் முஹம்மத் இஸ்மாயில் சாஹிம், டாக்டர் எம். சி. எம். கலீல் ஆகியோருடன் நேசத்தோடும், பாசத்தோடும் பழகியவர் மணவைத்தம்பி. அரசியல் தலைவர்களான பிரதமர் டட்லி சேனநாயக்க, ஜனாதிபதிகள் ஜே. ஆர். ஜயவர்த்தன, ஆர். பிரேமதாச ஆகியோரோடு மிகவும் நெருங்கிப் பழகியவர் ஆவார்.

இந்தியா மீண்ட பிறகு, புலம் பெயர்ந்தோரின் நலனுக்காக சங்கமமைத்து அரிய பல சேவைகளை ஆற்றியதை நாம் தென்னிந்தியா ஏகிய பொழுதெல்லாம் நேரில் கண்டு பூரித்துப் போவதுண்டு.

மலை நாட்டு மக்களின் நலன் காக்கும் பணியிலும் பூரணமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் மணவைத் தம்பி.


எமது அரசியல் தலைவர்களுக்கு அன்று முதன் முதலில் ஆள் உயர மாலை போட்டு வண்ணப் பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தவர் மணவைத் தம்பி. இந்தியாவுக்கு செல்லுகின்ற அனைத்து அரசியல் சமூகத் தலைவர்களும் மேற்கு மாம்பலத்தில் உள்ள அவரின் இல்லத்துக்குச் சென்று மணவைத் தம்பியைச் சந்தித்து குசலம் விசாரிப்பதற்கு தவறுவதில்லை என்ற உண்மை மணவைத்தம்பி மீது இவர்கள் எவ்வளவு மனம் பறி கொடுத்திருந்தனர் என்பதற்கு நற்சான்றாகும்.


அவரது 78வது வயதில் அவர் தம் இன்னுயிரை நீத்தார். அவரின் அன்புத் துணைவி பாப்பாத்தி அம்மாவுக்கும், அருமை மகன் அசோகன், இளங்கோவன் உட்பட ஏனைய பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன், என்றும் அல்காஜ் அஸ்வர் மேலும் தனது செய்திகளில் குறிப்பிட்டுள்ளார்.

*-அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர்*
ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகார ஆலோசகர், ஊடக ஆலாட்சியாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் : வதிரி
பூவற்கரையான்
பதிகமாலை
ஆசிரியர்:
கண. எதிர்வீரசிங்கம்
வெளியீடு: கிருஷ்ணராஜன்
வியாசன் ஆவரங்கால்
கிழக்கு, புத்தூர்.
முதற்பதிப்பு: 2007 ஆடி

**வ**திரி பூவற்கரையான் பதிகமாலை என்னும் இந் நூலானது அண்மையில் கண. எதிர்வீரசிங்கம் அவர்களால் இயற்றப்பட்டு, வியாசன் வெளியீடாக வந்துள்ளது. 30 பக்கங்களைக் கொண்டுள்ள இந்நூல் இரண்டு பகுதிகளை யுடையது. முதலாவது பகுதி பல ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச் செய்திகளையும், இத்தொகுப்பைப் பற்றிய கண்ணோட்டங்களையும் சிறு கட்டுரை களாகவும் பாடல்களாகவும் அமைந்துள்ளது. இரண்டாவது பகுதியில் பத்துப் பாமாலைகள் இடம்பெற்றுள்ளன.

நாம் படுகிற இன்னல்களுக்கு ஒரு தீர்வு வராதா என்ற ஏக்கம் மக்கள் மத்தியில் தொடர்கதையாக இருக்கின்ற இத் தருணத்தில் கண. எதிர்வீரசிங்கம் மக்கள் சார்பாக வதிரி பூவற்கரையானைத் துதித்து இறைஞ்சும் பாடல்களாக இப்பதிக மாலை அமைந்துள்ளது.

இந்தத் தொகுப்பிலே மொத்தமாகப் பத்துப் பாடல்கள் இடம்பெறுகின்றன. எளிய மொழிநடையில், நிறைந்த பொருளுடன் இசையோடு பாடுவதற்குப் பொருத்தமான முறையில் அமைந்த பாடல்கள் யாவும் படிப்போரைக் கவருகின்றன; மனதை நெகிழ வைக்கின்றன. பூவற்கரையில் அமைந்துள்ள விநாயகருக்கு எடுக்கப்படும் பத்து நாள் திருவிழாக்கள் ஒவ்வொன்றினையும் விசேடமாகக் குறிப்பிட்டு, அந்நாட்களில் விநாயகனின் கோலம், அடியார் வேண்டுதல், அருள் ஆகியன பாடு பொருளாக அமைந்துள்ளன.

கண. எதிர்வீரசிங்கம் தாம் யாத்த இப்பாமாலைக்கு இசைவடிவம் கொடுக்கும் முயற்சியிலும் வெற்றிகண்டுள்ளார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர் திரு. தவநாதன் றொபேர்ட் அவர்களின் இசையமைப்புடன் இறுவட்டு ஒன்றினையும் வெளியிட்டுள்ளார்கள். இந்த இறுவட்டானது கேட்போரை இன்புறச் செய்து வருகின்றது.

மனித விழுமியங்கள் அருகி வரும் காலகட்டத்தில் அவை பக்தி வெளியீடாகப் பேணப்படல் வேண்டும் என்ற உயரிய குறிக்கோளோடு கண. எதிர்வீரசிங்கம் மேற்கொண்ட இம் முயற்சியானது பெரியோர், இளையோர் மற்றும் சிறுபிள்ளைகள் மத்தியில் நல்லெண்ணங்களை விதைக்குமென நம்புகிறோம்.

-மா. கருணாநிதி



நூல் : "குந்தி இருக்க ஒரு குடிநிலம்"
(சிறுகதைத் தொகுதி)
ஆசிரியர் : செங்கை ஆழியான்
வெளியீடு : கமலம் பதிப்பகம்,
75/10 A, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
விலை : ரூ. 180/=

**ஈ**ழத்து இலக்கிய வரலாற்றில் கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வரும் செங்கைஆழியான் அவர்களின் 5ஆவது சிறுகதைத் தொகுதியாக வெளிவந்துள்ளதே "குந்தி இருக்க ஒரு குடி நிலம்" சிறுகதைத் தொகுதி. இலங்கை தேசிய நூல் அபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் வெளிவந்துள்ள இந்நூலில் ஆசிரியரின் பல்துறை ஆளுமையின் வெளிப்பாடு முற்றிலும் மாறுபட்ட முறையில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இச்சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள 15 சிறுகதைகளில் 5 சிறுகதைகள் கலைக்கதிர் இதழ்களிலும், 4 சிறுகதைகள் வெளிச்சம் இதழ்களிலும், 2 சிறுகதைகள் ஈழநாடு பத்திரிகையிலும் ஏனைய மூன்று சிறுகதைகள் தலா ஒன்று வீதம் தீராநதி, கலைமகள், நுண்ணறிவியல் வெளியீடுகளிலும் பிரசுரமாகியுள்ளன.

ஒரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களையும் கலாசார விழுமியங்களையும் கட்டிக்காப்பது ஒவ்வொருவருடைய பொறுப்பென்ற போதிலும் அந்தச் சமூகப் பெறுமானத்தை உணர்ந்து செயற்படுபவர்கள் அரிதாகவே உள்ளனர். இன்று விஞ்ஞான வளர்ச்சி, நாகரீகம் என்ற பெயர்களில் சத்தம் சந்தடி இல்லாமல் பண்பாட்டுக் கூறுகளை அழித்தொழித்து வாழ்வதற்கு நம்மில் பெரும்பாலானோர் இசைவாக்கம் அடைந்துள்ளமை கண்கூடு. இந்தத் துர்லப நிலைக்கு விதிவிலக்காக எமது பிராந்திய பண்பாட்டுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்து அவற்றைப் பற்றிய குறிப்புக்களையும் வருங்கால சந்ததியினருக்கு ஊடு கடத்த வேண்டும் என்பதில் செங்கை ஆழியான் அவர்கள் அதிக சிரத்தை எடுத்துள்ளதை இத்தொகுதியில் உள்ள "ஆடுகால் துலா", "ஆவுரோஞ்சிக் கல்", "குட்டுக்காய்", "வேலிப்பொட்டு" கதைகள் மூலம் உணர முடிகிறது.

நகைச்சுவைக் கதைகள் என்ற வகையறாவில் வருபவை வெறுமனே வாசகனுக்கு சிரிப்பை மாத்திரம் உண்டு பண்ணாமல் அதன் ஊடு சரடாக மக்களுடைய அறியாமை இருளைப் போக்கும் அகல்விளக்காகவும் அவை திகழ வேண்டும் என்பதைக் "கிராமத்துள் புகுந்த மாய மனிதன்",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஊர் பார்க்க வந்த யானைகள்'' சிறுகதைகள் மூலம் துலக்கிக் காட்டுகின்றார். இவற்றுள் ''ஊர் பார்க்க வந்த யானைகள்'' சிறுகதையானது உருதுமொழி இலக்கிய கர்த்தாவான கிருஷ்ண சந்தரின் '' ஒரு கழுதையின் பட்டினப் பிரவேசம்'' அங்கத நாவலை நினைவூட்டுவதாக உள்ளது.


மேலும் ''குந்தி இருக்க ஒரு குடிநிலம்'', ''மனிதம்'' ஆகிய இரண்டு சிறுகதைகளும் அவை எழுதப்பட்ட காலத்தின் யதார்த்த நிலைப்பண்புகள் மெய்மை குன்றா வண்ணம் இனத்துவ முரண்பாட்டின் பின்னணியில் செய் நேர்த்தியுடன் புனையப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக தொகுதியின் தலைப்பாக அமைந்த ''குந்தி இருக்க ஒரு குடிநிலம்'' சிறுகதை ஆனது தமிழக இதழான ''தீராநதி'' யில் இடம்பெற்றமை ஈழத் தமிழர்கள் எவ்வாறு ஏதிலிகளானார்கள் என்பதன் நதிமூலத்தை தமிழகமக்களும் அறிவதற்கான வாய்ப்பை அளித்ததனால் கூடுதல் சிறப்புப் பெறுகிறது.

ஈழத்து இலக்கியத்தைப் பொறுத்தவரையில் ''அறிவியல் கதைகளின்'' முகிழ்ப்பு செங்கை ஆழியான் அவர்களாலேயே கால் கோளாக்கப்பட்டிருக்கின்றது. இதனை ''அறிவியல் துறையில் ஈழத்தில் எவரும் சிறுகதைகள் படைக்கவில்லை'' என்ற அவரது முன்னுரை வாக்குமூலத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். இவ்வாறான கருப்பொருளைக் கொண்டமைந்த ஏழு சிறுகதைகளில் பெரும்பாலானவை பாரம்பரிய வரன்முறையில் இருந்து விலகி பிசிறின்றிச் சித்தரிக்கப் பட்டாலும், கையாளப்பட்டுள்ள சில சொற்பிரயோகங்களின் கருத்துப்புலப்பாடு இலகுவானதாக இல்லை.

பொதுவாகவே அறிவியல் கதைகளில் பிரயோகிக்கப்படும் மொழிக்கையாளுகைகள் வாசகனது அகவயப்பட்ட சிந்திப்புக்கு சவாலாக அமைந்து விடுவது தவிர்க்க முடியாதது என்ற வகையில் அந்தக்குறையும் அமிழ்ந்து போகின்றது.

செங்கை ஆழியான் அவர்களிடம் இயல்பாகக் குடிகொண்ட புவியியல்துறை அறிவுவிசாலிப்பு கதைகளை நுண்ணயத்துடன் தீட்டுவதற்கு கைகொடுத்தாலும் அறிவியல் துறையின் புதுமைகளை புவியியல்துறை என்றதொரு எல்லைக்குள் மாத்திரம் உள்ளடக்காமல் அதனைத் தாண்டியும் சென்றிருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

-*சி. விமலன்*




நூல்: நடையில் நாமூன்று நாட்கள்
*ஆசிரியர் :*
தாபி. சுப்பிரமணியம்
வெளியீடு :
ஈழத்து இலக்கியச் சோலை
21, ஔவையார் வீதி,
திரிகோணமலை.
முதற்பதிப்பு : 2006 மார்கழி
விலை : ரூபாய் 100/=

**தா**பி சுப்பிரமணியம் அவர்கள் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சமூக சிந்தனையாளர். ஆசிரியராகவும் கல்விப் பணிப்பாளராகவும் விளங்கியவர். இவர் எழுத்தாளராக, நடிகராக, நாடகத் தயாரிப்பாளராகத் திகழ்ந்தவர். இவரது முதல் சிறுகதை 'விடா முயற்சி' அறிவுச் சுடரில் வெளிவந்தது. இது பின்னர் இந்தியாவில் இருந்து வந்த 'கரும்பு' என்னும் பத்திரிகையிலும் வெளிவந்தது. 'இதயங்கள் அழுகின்றன' கோயிலும் சுனையும், குடும்ப வழிகாட்டி போன்ற நூலின் ஆசிரியர், திருகோணமலையில் இருந்து வெளிவந்த 'தாகம்', 'உதயம்', 'கமலை' என்ற இதழ்களிலும் எழுதியுள்ளார். தனது மகனை யாழ்ப்பாணத்திற்கு பார்க்கப் போன அவர் போர்க்கால சூழ்நிலையில் தான் திரும்பி வரமுடியாமல் பட்ட அவஸ்தைகளையும் அவலங்களையும், துன்பங்களையும் விபரிப்பதே குறுநாவலாகப் பரிணமித்துள்ளது. பசி தாகம் பிரயாண கஸ்டம் என்பனவற்றை விளக்குகிறது. கஸ்டத்தின் மத்தியிலும் தனக்கு உதவிய இனிய நெஞ்சங்களை நினைவு கூறுகின்றார். திக்கற்றவனுக்கு தெய்வமே துணை என்பதை அவர் தேவாலயங்களில் பிரார்த்தனை செய்வதில் இருந்து அறியலாம். இதுவரை இடர்காலத்தில் இடம்பெயர்ந்த அனுபவம் இல்லாதவரை சிந்திக்கத் தூண்டும் இந்நூல். எண்பது பக்கம் கொண்ட இந்நூலில் 28 பக்கங்கள் அணிந்துரை என்னுரை, வெளியீட்டுரை விழுங்கி விட்டது. வெளியீட்டுரை மிக நீண்டு விட்டது. வாசகர் உள்ளே நுழைவதற்கு இடையூறாக அமைந்துள்ளது. மேலும் 73–76 பக்கங்கள் மீண்டும் மீண்டும் இடம் பெற்றுள்ளது. இதனைத் தடுத்திருக்கலாம். அட்டைப் படம் மனதுக்கு குளிர்ச்சியளிக்கிறது.




நூல் : இந்திரர்கள் நாடும் அகலிகைகள்
*ஆசிரியர் :* திருமலை
வீ. என். சந்திரகாந்தி
வெளியீடு : 28. 12. 2006
வெளியிடுவோர் :
தி. ஜெயகாந்தி, கலை
கலாசார விளையாட்டு
மேம்பாட்டுக் கழகம்
திருகோணமலை


**இ**ந்திரர்கள் நாடும் அகலிகைகள்' நூலாசிரியர் வீ. என். சந்திரகாந்தி ஓர் நாடறிந்த எழுத்தாளர். சுமார் அறுபதிற்கும் மேற்பட்ட சிறுதைகளையும் இரண்டு நாவல்களையும் இலக்கிய உலகில் தவழவிட்டவர். சமூகப் பிரச்சினைகளை பிரக்ஞையோடு– துடிப்போடு எழுதிவரும் அசகாயசூரர். இவரது எழுத்துக்கள் வெறும் கற்பனையல்ல. நிஜங்களின் நிஜம் இவர் ஏற்கனவே வெளியிட்ட 'ஸ்திரி லட்சணம்' 'தொடரும் தலைமுறைகள்' வாசகர்களால் பெரிதும் உள்வாங்கப்பட்டவை. 'இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி...' இவரது படைப்புக்கள் காலத்தின் பதிவேடு களாகவும் திகழ்கின்றன என்று கலாபூஷணம் சித்தி அமரசிங்கம் குறிப்பிடுவது சாலப்பொருத்தமானது. 'ஒரு சிறுகதை வாசிப்பவர் உள்ளத்தில் ஒரு சிறு தாக்கத்தையேனும் ஏற்படுத்தி அதனையிட்டு வாசிப்பவரை அசைபோட வைத்தாலே போதும். அதுநல்ல சிறுகதையாக அமைந்துவிடும் என்று கேணிப்பித்தன் கூறுவதன் உண்மையான தரிசனத்தை இத் தொகுதியிலுள்ள பன்னிரண்டு சிறுகதைகளும் எடுத்துக் காட்டுவனவாயுள்ளன. ஒவ்வொரு கதையிலும் பசியும் பட்டினிச்சாவும் ஏக்கமும், பாசமும் பரிவும் இழைந்தோடுவதை அவதானிக்க முடிகிறது. மனிதரின் ஆசை, மண், பொன், பெண் இவற்றில் மூழ்கி ஆராத் துயரத்தை இதிகாசம் தொடங்கி இற்றைவரை ஒரு தொடர் கதையாய் இருந்து வருகிறது. 'சொரியல்' இதற்கு உதாரணம். 'நித்திய சமர்ப்பணம்' நன்றியில்லா தன்மையை அம்பலப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உள்ளார்த்தம்' என்பதற்கு சுந்தரம் அம்மான் வியாக்யானம் சிந்தனையைத் தூண்டுகிறது. சுனாமி மாமிபோல் எல்லோருக்கும் மாமியார் கிடைக்கமாட்டாளா என்ற எதிர்பார்ப்பை தோற்றிவிக்கிறது. மாமியின் அனுபவ முத்திரையை கதையில் காணமுடிகிறது. ஆண்களின் சபலங்களில் இருந்து தப்புவதற்கு மனோ ரஞ்சிதம் தெரிவு செய்த முடிவு ஏற்றுக்கொள்ளக் கூடியது. பாதுகாப்பு மிக்கது என்பதை 'அரவாணிகள்' கதை யோசிக்க வைக்கிறது. 'வழித்துணை இழந்தவர்கள்' கதை போர்க்கால சூழ்நிலை பற்றியும் மக்கள் படும் அவலங்கள், அவஸ்தைகள் என்பனவற்றை தத்வரூபமாக படம் பிடித்துக் காட்டுகிறது. போர்ச்சூழல் மறைந்தாலும் இக்கதை சரித்திரமாக என்றும் பேசப்படும் இன்றைய நிலையை அப்படியே காட்டும் படம் 'சம்ஹாரம்' வெள்ளை வேனுக்குப் பயந்து இராத்தூக்கம் இல்லாமல் கிடக்கும் எமக்கு நம்கதையை சொல்வது போல் இருக்கும். கட்டளையை மட்டும் தலைக்குள் சுமந்து கொண்டு கசாப்புக் காரர்களாக மாற்றப்படும் இன்றைய இளைய தலைமுறையினரை எண்ண இதயம் வெடிக்கிறது. கிராமிய மணத்தோடும் மொழிநடையோடும் உலாவரும் சிறுகதைகளில் கதை நகர்வு வேகமாக இல்லையே என்ற உணர்வு வாசகனுக்கு ஏற்படாதிருக்குமானால் மேலும் சிறப்பாய் இருக்கும். முன்பின் அட்டைகள் மிகவும் கவர்ச்சிகரமாகவும் சிந்தனையை தூண்டும் விதத்திலும் அமைந்துள்ளது பாராட்டப்பட வேண்டியதாகும்.

குறிஞ்சி நாடன்




நூல் : வெளிச்சத்தின் வேர்கள் (செபம் பற்றிய சில புரிதல்கள்)
ஆசிரியர் : தமிழ்நேசன்
வெளியீடு : மன்னா பதிப்பகம்

பாவிலு கிறிஸ்து நேசரட்ணம் என்ற இயற்பெயரைக் கொண்ட அருட்தந்தை தமிழ்நேசன் அவர்களால் எழுதப்பட்ட "வெளிச்சத்தின் வேர்கள்" என்ற நூல் "மன்னா பதிப்பகத்தி" னூடாக வெளிவந்துள்ளது. "இந்நூல் விவிலியக் கண்ணோட்டத்தில் செபம் பற்றிய சில புரிதல்களை உள்ளடக்கியுள்ளது" என்ற செய்தியை நூலாசிரியர், நூலின் முன்னட்டையில் குறிப்பிட்டதன் மூலம் இந்நூலின் உள்ளடக்கத்தை வாசகர்களுக்கு இலகுவாகப் புலப்படுத்தியுள்ளனர்.

பொதுவாகவே மதங்கள் அனைத்தும் மக்கள் மத்தியில் புரியப்படாத நிலையில் மரபுநிலைக்குட்பட்ட ஒரு செயலாகவே இயங்கி வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்த அவதானத்தின் பிற்புலத்தில் நின்று அருட்தந்தை தமிழ் நேசனின் இந்நூலை நோக்கும் போது, விவிலியத்தைத் தழுவி நிற்கும் மக்களுக்கு காத்திரமான "விவிலியப் புரிதலை" ஏற்படுத்தும் வல்லமை மிக்கதொரு நூலாக அமைந்துள்ளதெனலாம்.

ஆத்மீக நெறிப்பாடுகளை வலியுறுத்துகின்ற மதங்கள், புறநிலை சார்ந்த வழிபாட்டுச் செயற்பாடுகளில் ஆரம்பித்து விஞ்ஞான அடிப்படையிலான முடிவுகளை நோக்கிய, உளவியல் அனுபவங்களை விளக்குவனவாகவும், பயிற்சிக்குரியனவைகளுமாகவே அமைந்துள்ளமையினால் "மதம்" என்பது மக்களுக்குச் சுமையாகவே தென்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

அருட்தந்தை தமிழ்நேசனின் இந்நூலில் மதம் சார்ந்த உள்ளடக்கங்களைக் கருச்சிதைவின்றி இலகுபடுத்தி சாதாரணமக்களுக்குப் புரியக்கூடிய வகையில் கூறப்பட்டுள்ள உத்திமுறை அற்புதமாக உள்ளது. "மதம் என்பது அங்கீகாரத்துக்குரியது" என்ற உணர்வை அருட்தந்தை தமிழ்நேசன் அவர்கள் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளதை இந்நூலில் அவதானிக்கமுடிகின்றது.

மூன்றே மூன்று எழுத்துக்களில் அமைந்த "செபம்" என்ற ஒரு சொல்லை பத்து இயல்களாகப் பிரித்து, அந்தப் பத்து இயல்களையும் 43 பிரிவுகளாக்கி, பிரிக்கப்பட்ட 43 பிரிவுகளையும் மேலும் 168 சிறு தலைப்புகளுக்குட்படுத்தி விவிலியம் என்ற எல்லைக் கோட்டுக்குள் நின்று 184 பக்கங்களில் எழுத்தாளர் எழுதியுள்ளது அவரது துறை சார்ந்த புலமையையும் மொழிவாண்மையையும் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

அருட்தந்தை தமிழ்நேசன் அவர்களால் கூறப்பட்டுள்ள ஒரு கருத்தை இங்கு மனங்கொள்வது பொருத்தமானதாகும். "இறைவனோடு நம்மை இணைக்கும் செப உறவானது, பிறரோடும், சமுதாயத்தோடும், பிற உயிர்களோடும், படைப்புக்கள் அனைத்தோடும் நம்மை உறவு கொள்ளச் செய்ய வேண்டும்." என அருட்தந்தை தமிழ்நேசன் அவர்களால் வெளிப்படுத்தப் பட்டுள்ள கருத்தானது, விவிலியத்தின் சர்வதேசம் தழுவிய அவரது சிந்தனை விரிவாக்கத்தை மிகத் தெளிவாக துலாம்பரப்படுத்துகின்றது.

அருட்தந்தை தமிழ்நேசன் அவர்களிடமுள்ள "தோழமை" உணர்வும், சர்வதேச நிலைப்பட்ட தேடலும், தான் சார்ந்த துறையிலுள்ள புலமைத்தன்மையுமே இந்நூலின் மிளிர்வுக்கும், கூர்மைக்கும் அடித்தளமாக அமைந்துள்ளன என்பதையும் இங்கு கூற வேண்டியது மிக அவசியமானதாகும்.

விவிலியத்தைத் தழுவியுள்ள மக்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக தனது வாழ்க்கையைத் தியாகம் செய்த அருட்தந்தை தமிழ்நேசன் அவர்களின் பேனாமுனைக்கூடாக மேலும் பல படைப்புக்கள் ஜனனிக்கவேண்டுமெனக் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

-கே. ஆர் டேவிட்

புரவலர் புத்தகப் பூங்கா
மாதாந்தம் ஒரு நூல் இலவச வெளியீட்டுத் திட்டம்
தொடர்பு முகவரி:
தேர்வுக் குழு,
புரவலர் புத்தகப் பூங்கா
இல 25, அவ்வல் சாவியா ரோட், கொழும்பு – 14.
தொ.பே. 0724803508 ; 0785318503



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பேசுகிறார்

ஞானம் செப்டம்பர் 2007 இதழில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் ''விமர்சனத்தில் விரிவுற வேண்டிய பரிமாணங்கள்'' என்ற கட்டுரையை வாசித்த போது, ஏற்பட்ட கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பேராசிரியரின் கல்வித்தகமைகள், பன்மொழிப் புலமை விசேசமாக அவருடைய தமிழ் இலக்கியந் தொடர்பான நீண்ட கால அனுபவத்தோடு ஒப்பிடுமிடத்து அவருடைய ஆக்கமொன்றை விமர்சனம் செய்யும் தகுதி எனக்கு எள்ளவேனும் இல்லையென்பதை நானறிவேன்.

இருப்பினும் மூத்த அனுபவசாலிகளின் அனுபவங்களை என்போன்ற சாதாரணமான வாசகர்களும் அறிந்து பயன் பெற வேண்டுமென்ற நோக்கத்திலேயே எனது கருத்தை தெரிவிக்கிறேன்.

இலக்கிய ஆய்வில் எடுத்துரைப்பு முறைமை, Naratology நடையில் Stylistic என்பவற்றை விளக்கும் போது கதை சொல்லிக் கொண்டு போகும் போது அதில் உள்ள சொற்கள் வாசகனது மனதில் விழுந்து அவர் அந்தக் கதையோட்டத்திற்கு அப்பாலே போய் தன்னைப்பற்றி அல்லது தனக்குத் தெரிந்தவரைப் பற்றி சிந்திக்கின்ற தன்மை ஓர் அதிர்வு ஏற்படும் . . . . . என இவை தொடர்பான விடயங்களைக் கூறும் போது அவர் உபயோகித்த கலைச்சொற்கள் சாதாரண வாசகனுக்கு அவருடைய கருத்தை விளங்கிக் கொள்ளச் சிரமமாக இருக்கும்.

அவர் கதை சிறுகதைகளின் சுருக்கங்கள் நாவல்களின் சம்பவங்களைக் கூறி தனது கருத்தை விளக்கியிருந்தால் சாதாரண எம் போன்ற வாசகர்களுக்கும் அவருடைய கருத்துக்கள விளங்கியிருக்கும். தொல்காப்பியத்துக்கு ''தொல்காப்பிய பூங்கா'' என்ற தலைப்பில் உரையெழுதிய கலைஞர் கருணாநிதி கற்பனையாகச் சம்பவங்களை உருவாக்கி சம்பவங்களில் தொல்காப்பியத்தையே பாமரன் வாசிக்கக் கூடிய வகையில் இலகுவாக்கி விட்டார்.

உதாரணமாக மகனின் கலியாணப் பத்திரியை அடிக்கச் சென்றவருக்கும், அச்சக உரிமையாளருக்கும் நடக்கும் உரையாடல் இது.

''இந்தக் கலியாணப்பத்திரிகை வாசகத்தில் பிழையிருக்கிறது ஐயா''

''என்ன பிழை''

''எனது மகன் இன்னாருக்கும் என்றிருக்கிறது. அது தான் பிழை''

''எனது மகன் தானே ஐயா அவன். எனது மகனை வேறெப்படி அழைக்கிறது''

''என்+அது இங்கே அது என்ற ஆறாம் வேற்றுமை உருபைச் சேர்ப்பதால் அஃறிணைப் பொருளைக் குறிப்பதாகிறது. மாறாகக் ''கு'' என்ற நான்காம் வேற்றுமை உருபைச் சேர்த்து எனக்கு மகன் என எழுதலாம்''

இப்படியாக அச்சக உரிமையாளர் கூறுவதாகக் கூறி சிக்கலான இலக்கணத்துக்கு இலகுவான விளக்கம் கொடுக்கிறார் கலைஞர். இப்படியாக தொல்காப்பியத்துக்கு பாமரனும் விளங்கிக் கொள்ளத்தக்க தொல்காப்பியப் பூங்காவில் உரையெழுதி இருப்பதாக சுஜாதா ஒரு சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளார்.

P. P அந்தோனிப்பிள்ளை, மன்னார்

****

செ. குணரத்தினம் பற்றிய அன்புமணியின் கட்டுரை அவரைப் பற்றிய பல தகவல்களைத் தந்தது. ஆனாலும் அவர் சுமார் 500 மெல்லிசைப்பாடல்களை எழுதினார் என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகப்படுகிறது. செ. அவரது ஆக்கங்கள் பல நூலாக்கம் பெறவில்லை என்பது ஒரு குறை தான். அவையும் நூலாக்கம் பெற்றால் செ. குணரத்தினத்தின் படைப்புக்களை அறியவும் பல்கலைக்கழகங்களில் ஆய்வுக்கு உட்படவும் வசதியாக இருக்கும்.

ஏ.எம். எம். நவாஸ், கல்முனை

****

நிம்மிக்கு என்ன பதில்? சிறுகதையில் இன்றைய வெளிநாட்டு வாழ்க்கைமுறையின் சில கூறுகளை அறியக்கூடியதாக இருந்தது. புதிய களம், புதிய தகவல்கள், பெண்ணியச் சிந்தனை இவற்றையெல்லாம் கதை நன்றாகப் பிரதிபலித்துள்ளது. யோகா பாலச்சந்திரனுக்கு எனது பாராட்டுக்கள்.

பவித்திரா செல்வராஜன், புத்தளம்,.

****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனத்தில் விரிவுற வேண்டிய பரிமாணங்கள் பற்றிய பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் கட்டுரை மிகவும் பயனுள்ள தரமான கட்டுரை. நாங்கள் பலவற்றையும் வாசிக்கின்றோம். ஆனால் எடுத்துரைப்பு முறையாலே தான் ஒரு படைப்பு எமது மனதிலே நின்று நிலைக்கிறது. அந்தப் படைப்பின் தரத்தை நிர்ணயிக்கிறது என்பது போன்ற விடயங்கள் கட்டுரை மூலம் வெளிப்படுகிறது. நல்ல தரமான கட்டுரை.

எம். ரவீந்திரன், வட்டுக்கோட்டை

****

மொழி பற்றி கலாசூரி ஆ. சிவனேசச்செல்வனின் கட்டுரை பயனுள்ளது. ஊடகவியலாளரை மனதிலிருத்தி அவர் கட்டுரையை எழுதியிருந்தாலும் ஏனையோருக்கும் அக்கட்டுரை பல தகவல்களைத் தந்துள்ளது. இப்போது நமது நாட்டிலுள்ள புத்தி ஜீவிகளும் புகழ்பெற்ற எழுத்தாளர்களும் ஞானத்தில் எழுதுவது ஞானத்தின் தரத்தை உயர்த்துகிறது. பணி தொடர வாழ்த்துக்கள்.

எஸ். சுதாகரன், கனடா,

****

மும்தாஸ் கபீர் எழுதிய புத்தக விமர்சனம் அந்த நாவலை வாசிக்கத் தூண்டுகிறது. அந்த நாவல் எங்கே கிடைக்கும் என்ற தகவலையும் அவர் தந்திருக்கலாம். கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் பற்றி அவரது மாணவன் சிவயோகநாதன் சுவையான பல தகவல்களைத் தந்துள்ளார். ''இன்னும் சொல்லாதவை'' கட்டுரையில் தெணியான் அந்தக்கால நடைமுறைகளை, பண்பாட்டு விசயங்களைச் சொல்லிச் செல்கிறார். சுவையாக இருக்கிறது.

மு. மகேந்திரன், பதுளை

****

ஞானம் 88வது இதழ் கிடைத்தது. முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு இந்த இதழில் அதிகமாக இருந்தது. புதிய எழுத்தாளர் பொத்துவிலூர் அஸ்மின், எஸ். முத்துமீரான், ஏ.இக்பால், எஸ்.எச்.எம். ஜெமீல், அஷ்ரஃப் சிஹாப்தீன், மும்தாஸ்ஹபீள், ஜின்னாஹ் ஷரிபுதீன், இளைய அப்துல்லாஹ் என எல்லோருமே சிறந்த ஆக்கங்களையும் கட்டுரைகளையும் தந்துள்ளார்கள். படித்து மகிழ்ந்தேன்.

ஏ. எம். எம். அன்வர்கான், நாவலப்பிட்டி.

****

எமது சகோதர ஏடான ஞானம் 84 இதழ் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் பவளவிழா மலராகப் பாரிய தகவல்களுடன் வெளிவந்துள்ளது. தமிழுலகம் அந்த ஆசிரியரைப் பாராட்டுகிறது. ஒரு தமிழ்ப் பேரறிஞரின் சாதனைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 50 வருடத்திற்குப் பின்னர் இந்தப் பவளவிழா மலரை ஆய்வு செய்பவர்கள் தேடித் திரிவர். எனவே எல்லா நூல்நிலையங்களிலும் ஞானம் பவளவிழா மலர் பேணப்பட வேண்டும்.

ஐ. தி. சம்பந்தன், ஆசிரியர், இலண்டன் சுடரொளி.

****

ஞானம் 88 இதழில் மூனாக்கானா எழுதிய ''பேரன்மாரே'' என்ற கவிதை அருமை! யாரிந்த மூனாக்கானா? புனைபெயரில் எழுதுவதால் சில திறமைசாலிகள் கண்டுகொள்ளப்படாமல் போய்விடுகிறார்கள். முத்து மீரானின் ''என் முகவரி'' கவிதையும் நன்றாக இருந்தது. கிராமிய மணம் இருந்தது.

எஸ். தர்மரட்ணம், சாவகச்சேரி,

****

''குறைநிறைகளை வெளிப்படுத்துவதால் படைப்புகள் சிறந்த முறையில் பட்டை தீட்டப்படுகின்றன'' பாலாசங்குப்பிள்ளையின் எதிர்வினை மலையகக் கவிதைகள் தரங்குறைந்தவையா, ஓ.ஏ. இராமையாவின் கருத்து யாவும் பயன்மிக்க கருத்துக்கள். இத்தகைய விவாதக்கருத்துக்களால் மலையகப் படைப்பாளிகள் விழிப்படைவர். கௌதமனின் அட்டைப்படம் நன்றாக இருந்தது. மலையகத்தில் குப்பி விளக்கிலே படிக்கும் நிலைமை தான் அநேகமாக உள்ளது.

கருப்பையா செந்தில்குமார், நானுஓயா.

****

அன்புக்கும் மரியாதைக்குமுரிய ஆசிரியர்க்கு!

ஞானத்தின் புது மெருகில் திழைத்துள்ளோம். கட்டுரைகள், கதைகள், எதிர்வினை போன்றன சிறப்பாக அமைகின்றன. கல்வயலாரின் ''குருஷேத்திரம் அல்லது அறி– குறி– கள்'' நல்ல குறியீடு. ''சாத்திரம் உண்டாடி?'' வித்தியாசமான கதை. அவ்வாறே திசேராவின் ''எண்களுடன் பயணித்தல்'' அவரின் வழமையான புதுமையுடன். பேராசிரியர் கா. சிவத்தம்பி நவீன நாடகம் அறியாதவர் என்ற தோரணையில் செல்லும் பவளவிழா மலர் பற்றிய எதிர்வினை ''அசைய முடியாமல் வந்த பிறகும் சேவை செய்தவர்'' என்று இறுதியில் பூசி மெழுகுவது போல உள்ளது ஏன்?

இ. இராஜேஸ்கண்ணன்

****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org